**TAMIL SPEAKING**
*Personal Injury Lawyer*
INJURED IN A **ROAD ACCIDENT** ?
ACCIDENT AT WORK PLACE OR PUBLIC PLACE
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
YOU KEEP 100% COMPENSATION
FOR FREE ADVICE CALL
Ask for RAJ
NOTMYFAULT LAWYERS
M : 0781 089 7754
EMail : raj@notmyfaultlawyers.com
4, Prince Albert Drive, Ascot, SL5 8AG

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 10 ♦ ISSUE - 218 ♦ FRIDAY 23 MAY 2014

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

## நீறாகிப்போனாலும்
## வரலாறாகி வாழ்வோர்
## தடம் தொடர்வோம்



- புதிதாக அகதி அந்தஸ்த்து கோருபவர்கள், விசா காலவதியாகி மற்றும் சட்டவிரோதமாக தங்கி இருப்போர்.
- ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி Legacy (லெகசி) திட்டத்தின் கீழ் எவ்வித முடிவின்றி நீண்ட காலமாக காத்திருப்போர்.
- கைது செய்தல், தடுத்து வைத்தல், நாட்டுக்குத் திருப்பி அனுப்புதலை எதிர்கொள்வோர்
- அனுபவமுள்ள சட்டத்தரணிகள் குழுவினரால் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்.

இலவச ஆலோசனைக்கு தொடர்பு கொள்ளவும்
**வின்சென்ட் சொலிசிட்டர்**
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU
(ஹிமாலயா தியேட்டருக்கு எதிராக)




**Off Licence for sale!!**
Norwich பகுதியில்
Shop விற்பனைக்குள்ளது.

▸ Rent £100 Per week
மேலதிக விபரங்களுக்கு
Call us: 07985748472

**Accountancy Vacancy**

Vacancy Available in Ramesh & Co Accountants for Immediate Start
Please Contact Ramesh & Co Accountants
info@rameshandco.co.uk
Mobile: 07823886784
02086823336 - 02083552532

**OM SAI SHAKTHI ASTROLOGY CENTRE**
Indian Astrologer & Herbal Ayurvedic Specialist
பெண்களின் முகத்தில் வளரும் முடிகளை ஆயுர்வேத முறைப்படி 2-,3 மாதங்களில் அகற்ற முடியும். எந்த விதமான பிரச்சினை என்றாலும் ஆயுர்வேத வைத்தியம் மூலம் குணமாக்க முடியும்.
வெற்றிலையில் மை போட்டு நடந்தவை நடந்து கொண்டிருப்பவை நடக்க இருப்பவை என்பன துல்லியமாக கணித்துச் சொல்லப்படும்.
163, Rushey Green, Catford, SE18 4BD [ Next door to Natwest]
07405908271 - 07729202680

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# Do you want to become an Accountant?

**Sage**

- We teach Sage for those don't have exposure to accounting package.
- Our approach will be more practical oriented and focused on the real accounting issues.
- We will teach the candidate to enable them to work in Sage independently.
- Our course includes the preparation of Trial Balance, Balance Sheet, Profit & Loss Account and VATcomputation including EU Sales Listing.

**Excel**

- We conduct classes for Basic and Advanced Excel (such as V-Lookup, H-Lookup, IF functions, Pivot tables, data worksheet consolidation, IRR & NPV computations) for complex modelling for accountants.
- You will get the chance to learn how to model practical case scenarios.

## AIKON ACCOUNTANTS LTD

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS

Tel: 020 3585 3484, Mob: 077 1632 4331

Email: accounts@a-accountants.com Web: www.a-accountants.com

# மிக விரைவில்...

## Best Asia Supermarket Ltd.

**39-41, Stafford Road, Wallington, Surrey, SM6 9AP**

- wallington பகுதியில் புதிதாக திறக்கவுள்ள கடைக்கு வேலையாட்கள் தேவை.
- தமிழ்க் கடையில் வேலை செய்த அனுபவம் வாய்ந்த ஆண்,பெண் வேலையாட்கள் தேவை.
- மீன் மற்றும் இறைச்சி வெட்டுவதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை

உடன் மீன் மற்றும் இறைச்சி விற்பனை வாரத்தில் 7 நாட்களும் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு - 07440259619**

# MARX AYURVEDA



## எங்களின் பிரத்தியோக சிகிச்சைகள்

- மன அழுத்தம்
- மன உளைச்சல்
- மூட்டு வாதம்
- உறக்கமின்மை
- முதுகு வலி
- தோள் வலி
- பக்கவாதம்
- விளையாட்டுக் காயம்
- சர்க்கரை நோய்
- இரத்த அழுத்தம்
- எலும்பு மெலிதல்
- சருமம் உலர்தல், உரிதல்
- குழந்தைப்பேறின்மை
- மூலநோய்
- ஆசனவாய்ச் சிரங்கு
- முதுகெலும்பு அழற்சி
- மற்றும் சகல விதமான நாட்பட்ட நோய்களுக்கும் உடனே நாடுங்கள்

*Positive art of life...*

Early Bird **Offers** and get a **20%** discount

Book a Massage between 10 am to 7 pm (Monday to Sunday)

*Ayurveda Heritage and wellness centre*

MARX AYURVEDA Towards Perfect Health

**Croydon**
505 London Road,
Thornton Heath,
Croydon. CR7 6AR
Tel : 0208 684 7574

**Milton Keynes**
80 Bradwell Road,
Bradville, Milton Keynes.
MK13 7AD
Tel : 01908 322 154

Web : www.marxayurveda.co.uk | Email info@marxayurveda.co.uk | www.marxholidays.com

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL AND SHOPFITTING Ltd.






168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK

MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

UK COOL & SHOP FITTING LTD



**7 Days 24 HRS services & Repair**

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

# Part qualified Accountant

## on 6 month contract

**Key Responsibilities:**

- Must be able to prepare up to Trial Balance in Sage without supervision.
- Good knowledge in closing the books and preparing the Statutory Accounts
- Prepare VAT Returns and dealing with HMRC
- Managing and supporting junior staff
- Meeting with clients
- Undertake ad-hoc specialist tasks if required.

**Attributes:**

- Part qualification of CIMA/ACCA
- Minimum of 3 Years experience in a reputable practice is vital for this role
- Working under pressure and long hours to meet tight deadlines.
- Excellent communication skill is a MUST.
- Advance Excel skill is important.

## AIKON ACCOUNTANTS LTD

Please forward the CV to accounts@a-accountants.com

# SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk

Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649




### அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்..

அமுதவற்குக் கூட அருகதையற்ற வர்களாக வாழும் ஈழத்தமிழர்கள் தமதுவலுவைஇழந்தமாதத்தை,வலி சுமந்த சாட்சியாக ஒரு பேப்பர் ன் முகப்பு காட்சியாக அலங்கரித்தது. வன்னி மக்கள் பட்ட துன்பம் வார்த்தைக ளால் அடங்காது. வாழ்ந்தாலும், தாழ்ந் தாலும் நாம் எவருக்கும் அடிமை இல்லை. அரசன் அன்றறுப்பான். தெய்வம் நின்றறுக்கும்.

*- அன்புடன் உமா மகாலிங்கம்*

### கிளம்பிட்டாங்கள்!

வடக்கு மாகாண ஆளுனராக, சங்கிலி மன்னனின் வாரிசான நெதர் லாந்தில் வசிக்கும் ராஜா றெமிஜியஸ் கனகராஜா தன்னைநியமிக்கச்சொல்லி கேட்டிருக்கிறாராம். தன்னை நியமித் தால், அரசியல் பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு காணலாம் எண்டும் சொல்லியிருக்கிறாராம். இப்பிடி எத்தினை பேர் கிளம்பியிருக்கிறாங் களோ தெரியாது. இவங்களும் இல்லையெண்டால் முசுபாத்திக்கு ஆட்களே கிடையாது.

*- இணுவை சி. இரங்கன்*

### பாராட்டுகிறேன்!

ஊடகத்துறையில் முப்பது நாற்பது வருடங்கள் அனுபவம் வாய்ந்த வர்கள், ஊடகத்துறை தவிர வேறோன் றும் அறியோம் என்று சுருதி ஹாசன் ஆபாசமாக நடித்தார் என அந்தப் படத்துடன் செய்திபோட்டுக் கொண்டி ருக்க, அனுபவில்லாத நீங்களோ நாட் டுக்கும் மக்களுக்கு தேவையான விடயங்களை எழுதிக் கொண்டிருக் கிறீர்கள்.

நல்லா இருங்கோடாப்பா.

*- இந்திரன்*

### கவிஞர்கள் எங்கே?

முள்ளிவாய்க்கால் நினைவு இதழில் நல்ல கவிதைகள் வரும் என எதிர்பார்த்திருந்தேன் ஒரேயொரு கவிதைதான் பிரசுரித்திருந்தீர்கள். எங்கள் கவிஞர்கள் இதுபோன்ற உணர்வு பூர்வமான விடயங்களை எழுதாமல் எதை எழுதுகிறார்கள்? இதில் கவிதைப்புத்தக வெளியீட்டு விழாக்களுக்கு குறைவில்லை.

*- கயல்விழி*

### விக்கி எங்கே ஓடி ஒளித்தார்?

முள்ளிவாய்க்காலில்மடிந்தவர்கள் நினைவாக வடமாகாண சபைக்கு வெளியில் சிவாஜிலிங்கம் அவர்கள் விளக்கேற்ற முற்பட்டபோது சிறி லங்கா பொலிசார் அதனைத் தடுத்து விளக்கை காலால் உதைந்தார்கள். பின்பு 19ம் திகதி சபை அமர்வின் போது விளக்கேற்றி அஞ்சலி செய் தார்கள். இவற்றில் எந்த நிகழ்ச்சி யிலும் முதலமைச்சர் விக்கி கலந்து கொள்ளவில்லை. இராஜபக்சவின் காலடியிலை விழுகிறது விழுந்த டித்துக் கொண்டிருக்கிற விக்கி தமிழ் மக்களின்ரை விசயங்களில் ஏன் அக்கறைப் படுகிறார் இல்லை?

*- அழகானந்தன்*

### இந்தியத் தேர்தல் முடிவுகளும் ஈழத்தமிழரும்

இதை நான் எழுதும் போது இந்திய நாட்டின் தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றது. அநேகமாக மோடியின் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெறும் நிலை காணப்படு கிறது. இதே நேரம் ஈழத்தமிழர்களில் 90% மேலானவர்கள் இப்போதே கனவு காணத் தொடங்கிவிட்டார்கள்.

இனப்பிரச்சினைக்கு இந்தியா தீர்வு கண்டுவிடும் காட்சி நிழலாடுகிறது. சூரியத் தேவன் அடிக்கடி கூறும் ஒரு வார்த்தை 'உன்னை முதலில் நம்பு, அடுத்தவரை நம்பாதே' இது தான் நிதர்சனம். இனியும் நாம் சிந்திக்க லாமே. பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

*- நாதன் - கென்சிங்டன் தெற்கு*

### தகவலுக்கு நன்றி

வெள்ளைக்காரர்கள் எங்களை ஆதரிக்கிறார்கள் என்று மோசமான இனவாதிகளை உள்வாங்கியிருந்த தமிழ் அமைப்புகளினதும், செயற் பாட்டாளர்களினதும் பொறுப்பற்ற தன்மையை."நாங்கள் ஏமாறப்பிறந்த வர்களா" கட்டுரை வெளிப்படுத்தியி ருந்தது. சமயமறிந்து தகவல்களை வெளியிட்டமைக்காக ஒரு பேப்பர் க்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன்.

*- சிவகரன்*

### ஏன் போடவில்லை?

லண்டன் கவுன்சில் எலக்சனில் இந்த முறை கன தமிழாக்கள் போட்டி யிடுகிறார்களாம். ஆனால் இந்த விபரங்களை எந்தவொரு தமிழ் ஊடக மும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

ஏன் இந்த அக்கறையீனம் என்று விளங்கவில்லை. நீங்களது இந்தச் செய்திகளை பிரசுரிக்காவிட்டால் யார் பிரசுரிப்பார்கள்?

*- க. நடராசா*

### யார் அந்த டொக்டர்?

2009 மே மாதத்தில் போரின் இறுதி நாட்களில் அங்கிருந்த மருத்துவப் போராளிகளை சரணடைய வேண் டாம் சயனைட் உட்கொள்ளுமாறு லண்டனில் வசிக்கும் ஒரு மருத்துவர் கூறியதாக பிரான்சஸ் ஹரிசனின் Still Counting the Dead புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர் ஒரு அமைப்பை நடாத்தியதாகவும் அதில் எழுதப்பட்டுள்ளது. யார் இவரென்று யாருக்காவது தெரியுமா?

*- சுபோதினி பாஸ்கரன்*

### முதுகெலும்பற்றவர்கள்

கொல்லப்பட்ட உறவினர்களுக் குக் பிதிர் கடனை நிறைவேற்றுவதற் காக கீரிமலை கடற்பகுதிக்கு சென்ற அனந்தியை இராணுவம் இடைவழி யில் தடுத்து நிறுத்தி மிரட்டியதாகவும் அதற்கெதிராக தனியாளாக அவர் போராட்டத்தை முன்னெடுத்ததா கவும் ஊடகங்களில் செய்தி வெளி யிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அரசியல்வாதி கள் முதுகெலும்பற்றவர்கள் என்றும் தன்னோடு யாரும் ஒத்துழைக்க வில்லை என்றும் தனியாகவே போராட் டத்தை முன்னெடுத்ததாகவும் அவர் கூறியிருக்கிறார். ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்?

*- ரகுராம்*

### அநாவசியமாக உயிரை மாய்க்காதீர்

மனிதகுல வேடன் மகிந்தராஜபக்ச இந்தியாவிற்குவர எதிர்ப்புதெரிவித்து தமிழ்நாட்டில் இளைஞர் ஒருவர் தீக் குளிக்க முயற்சித்திருக்கிறார்.

சரியான இலக்கு இல்லாமல் தவறான நோக்கத்திற்காக இருந்து கொண்டு போராடவேண்டிய நீங்கள் எல்லாம் இறந்து கொண்டு போராட நினைப்பது தவறு என்பதை அவரைப் போன்ற இளைஞர்களுக்குச் சொல் லிக் கொள்கிறேன்.

*- தோழமையுடன் தமிழ்ச்செல்வன்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com

# ஈழத் தமிழ் பெண்களின் நம்பிக்கைக்கு வலுவூட்டும் வெற்றி

**– அனந்தி சசிதரன்**

*(திருமதி அனந்தி சசிதரன் அவர்கள் தமிழக முதல்வர் செல்வி ஜெய லலிதாவிற்கு எழுதிய கடிதத்திலிருந்து )*

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றியானது ஈழத் தமிழ் பெண்களின் இடை விடாத தொடர்ச்சியான போராட்டத்திற்கு நம்பிக்கையூட்டும் ஒரு வலிமையான வெற்றியாகவே நாம் பார்க்கிறோம். அவ்வகையில் தமிழகத்தின் வெற்றியின் நாயகியாக விளங்கிய மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதா அவர் களுக்கு எமது உளம் கனிந்த வாழ்த்துக்களையும் மனம் நிறைந்த மகிழ்ச்சி யையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

காலம் எத்தனையோ பெண்களை உயர் அதிகாரங்களில் இருத்தியது. எனினும் அவர்களில் பெரும்பாலானோர் ஆணாதிக்க சமூகத்தின் நோக்கங் களை நிறைவேற்றுவதன் மூலமே தமது அதிகாரங்களை வெளிப்படுத்தினர். அதனால் அவர்கள் புகழ்பெற்ற பெண்மணிகளாகப் போற்றப்பட்டனர். ஆனால் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் அவர்கள் தனித்துவமான ஆளுமை மூலமும், எந்த முடிவையும் எந்த விளைவுகளுக்கும் அஞ்சாது, தானே எடுக்கும் வலிமை மூலமும் தமிழகப் பெண்களுக்கு மட்டுமன்றி உலகப் பெண்களுக்கே வழிகாட்டும் தலைவியாகவும் நம்பிக்கையூட்டும் துருவ நட்சத்திரமாகவும் விளங்கி வருகிறார். அந்த ஆளுமையும் ஆற்றலுமே அவரைத் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாகவும் ஈழத்தமிழ்ப் பெண்கள் நம்பிக்கையூட்டும் ஒளிவிளக்காகவும் உயர்த்தியுள்ளது.

நாம் இன்று கொல்லப்பட்ட எமது கணவர்மார்களுக்காகவும், பிள்ளைகளுக் காகவும் நீதி கோரி வீதிகளில் இறங்கியுள்ளோம். உண்மைகளை கண்டறிய ஐக்கிய நாடுகள் சபையிலும் உரத்துக் குரல் கொடுத்தோம். எத்தனை அடக்குமுறைகள் எம்மீது ஏவப்பட்ட போதிலும், முள்ளிவாய்க்காலில் பறிக்கப்பட்ட எமது உறவுகளின் உயிர்களுக்கு அஞ்சலி செலுத்துவது கூட தடுக்கப்பட்ட போதிலும் கூட ஏந்திய போர்க்கொடியை தளரவிடாது இறுகப் பற்றியுள்ளோம். நீதி கோரி நடக்கும் நெடும் பயணத்தில் களைக்காது நீட்டப்படும் கொடு வாள்கள் மத்தியிலும் எங்கள் பயணம் தொடர்கிறது.

எமது உரிமைக்குரலுக்கும், நீதி கோரலுக்கும் தமிழகம் தந்த பேராதரவு எமக்கு புதிய உற்சாகத்தை ஊட்டியது. மாணவர்களின் எழுச்சி புதிய பலத்தை வழங்கியது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததைப் போன்று தமிழக முதல்வர் தந்த உறுதியான, நேர்மையான ஆதரவு எமது பயணப் பாதிக்கும் பன்னீர் தூவியது!

நீங்கள் ஆதரவு வழங்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் ஒவ்வொரு படி உயர்ந்தோம் என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவிக்கிறோம். ஒரு பெண்ணின் மனதை இன்னொரு பெண்ணை விட வேறு எவராலும் புரிந்து கொள்ள முடியாது. அவ்வகையில் நமது துணைவர்களையும், உறவுகளையும் இழந்தும் பிரிந்தும் தவிக்கும் பெண்களின் மனக் கொந்தளிப்பை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் ஐந்து கோடி ரூபாவை அள்ளித் தந்து எமது விடுதலைப் போராட்டத்தை வலுவூட்டியதை நாம் காலம் காலமாக நினைவில் வைத்துள்ளோம். அந்த மக்கள் திலகத்தின் ஒப்பற்ற நேர்மை யையும் வீரமும் நிறைந்த பாதையில் பயணிக்கும் தங்களை நாம் மனமார வாழ்த்துகிறோம்.

நீங்கள் தொடர்ந்து எமது உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுப்பீர்கள் என்பதிலும் மத்திய அரசை எமது இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை எட்டும் வகையில் அழுத்தம் கொடுத்து வலியுறுத்துவீர்கள் என்பதையும் நாம் திடமாக நம்புகிறோம்.

மேலும் சரணடைந்த, காணாமற்போன, உயிரிழந்த நமது உறவுக ளுக்கான நீதி கோரி நிற்கும் பெண்களின் போராட்டத்திற்கு வலுவான ஆதரவு தருவீர்கள் என்பதிலும் உறுதி கொண்டுள்ளோம்.

தங்கள் ஆட்சி நிலை பெறவும், தமிழக மக்களுக்கும், ஈழமக்களுக் கும் தாங்கள் செய்யும் ஒப்பற்ற பணிகள் தொடரவும் எங்கள் வாழ்த்துக்களை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400
OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS
Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test

New rules applicable from October 28th
for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)
FREE INITIAL ASSESSMENT
Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, MAY 23, 2014, ISSUE 218

## தேசியக் கொடியை எமது அடையாளமாக்குவோம்!

எல்லாத் தேசிய இனங்களையும், இனக்குழுமங்களையும் போலவே தமிழ் தேசிய இனமும் தனது அடையாளங்களைப் பேண முயற்சிக்கிறது. அந்த வகையில், எமது அடையாளமாக தேசியக் கொடி அமைந்திருக்கிறது. இரத்த நிறத்தில் வேங்கை இலச்சினை நடுவிலுமாக, தமிழ்மக்களின் சுதந்திர வேள்வியையும், ஆயிரமாயிரம் மாவீரர்களது தியாகத்தையும் நினைவுபடுத்தி நிற்கும் எங்கள் தேசியக் கொடிக்கு மதிப்பளித்து போற்ற வேண்டியது ஈழத் தமிழர்களின் கடமையாகிறது. தவிரவும், புலம்பெயர் நாடுகளில் நடைபெற்ற அமைதி வழியிலான எல்லாப் போராட்டங்களில் தேசியக் கொடி முக்கிய இடத்தைப் பெற்றமையினால் அதனைத் தனித்து வன் முறைப் போராட்டத்துடன் மட்டுப்படுத்தி விட முடியாது. இவ்விடயத்தில் இளைய தலைமுறையினர் காட்டும் அக்கறையும், ஆர்வமும் மகிழ்வைத் தருகிறது.

அடையாள அரசியலில் (symbolic politics) கொடி, இலச்சினை, நினைவுச் சின்னங்கள் பெறும் முக்கியத்துவத்தை, இனவழிப்பில் ஈடுபடுபவர்களும், அவர் களது ஆதரவுச் சக்திகளும் நன்கறிவர். அதனால்தான் இவ்வடையாளங்களை அழித்தொழிக்கும் முயற்சியும் இன்னொரு புறத்தில் மூர்க்கத்துடன் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே, தாயகத்தில் மாவீர் துயிலுமில்லங்கள், நினைவுத் தூபிகள் போன்றவற்றை சிறிலங்கா அரசாங்கம் அழித்து வருகின்றது.

தமிழர்களின் இனத்துவ அடையாளங்களை அழிப்பதில், சிறிலங்கா அரசாங்கம் போன்று அடக்கு முறையுடன் செயற்படாவிட்டாலும், இவற்றை வழக்கொழியச் செய்ய வேண்டும் என்பதில் மேற்கத்தைய தரப்பினருக்கும் உடன்பாடுள்ளது. ஈழத்தமிழ் மக்களை 'சிறிலங்கன்' தேசிய அடையாளத்திற்குள் கொண்டு வருவதன் மூலம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கொண்டு வரமுடியும் என்ற தாராண்மை வாத அணுகுமுறைக்கு அடையாள அரசியல் தடையாகத் தெரிகிறது.

இந்நிலையில், பல்லின மக்களும் கூடும் பொது இடங்களில் தேசியக் கொடியினை முன்நிறுத்தி மோதிக் கொள்வது, எமது தேசிக்கொடியினை முரண் பாடுகளுக்கான ஒரு விடயமாக மாற்றிவிடும் அபாயத்தினை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் அமைப்புகள், செயற்பாட்டாளர்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்து வதில் குறியாக இருப்பவர்களுக்கு உடந்தையாக இருக்க வேண்டாம் என இவ் விடயத்தில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் ***ஒரு பேப்பர்*** தயவாக வேண்டிக் கொள்கிறது.

எங்கள் காவியநாயகன் போற்றிய கொடியினை தமிழீழ மக்களின் அடையாள மாக வழமைப்படுத்தி, அதனை சர்வதேசமும் ஏற்றுக் கொள்வதற்கான பணியில் அனைவரும் இணைந்து பணியாற்றுவாம்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*கனடாவிலை **ஒரு பேப்பர்** திரும்பவும் வரத் தொடங்கியிட்டுது. நெடுக இந்தா வெளியிடுகிறம்.. அந்தா வெளியிடுகிறம்... எண்டு சொல்லித் திரிஞ்சதாலை இந்தமுறை சொல்லாமல் கொள்ளாமல் அலுவலை நடத்தியிட்டம். பேப்பர் வந்ததுதான் வந்தது, அங்கேயிருந்தும் முறைப்பாடுகள் வரத்தொடங்கீட்டுது. முன்பக்கத்திலை இருந்த விளம்பரம் ஒண்டை பாத்திட்டு அப்ப நீங்கள் அந்தப்பக்கமோ எண்டும் கேட்கினம். நாங்கள் தமிழரின்ரை பக்கம் எண்ட வழமையான பதிலைத்தான் அவையளுக்கும் சொன்னோம். இருந்தாலும் வரவேற்பு அந்தமாதிரியிருக்கு எண்டு செந்தூரன் சொல்லிறார். 'ஒரு மணம்' கலியாண சேவைக்கும் அங்கிருந்து போனிலை கூப்பிடுகிற ஆட்கள் கூடியிட்டுது.*

*இன்னொண்டு, கனடா **ஒரு பேப்பர்** முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவு நாளுக்காக விடப்பட்ட விசேட பதிப்பு இல்லை. தொடர்ந்தும் வரும். இப்போதைக்கு மாதத்திற்கு ஒண்டுதான் வரும். கூடிய சீக்கிரம் லண்டனில் வாற அதேநாள் மாதத்திற்கு இரண்டு வரும்.*

*கண்டம் கடந்து போறதாலை சிலவிசயங்களை விளப்பமா எழுத வேண்டியிருக்கு. ஈஸ்ட்டாமிலை புத்தகம் வெளியிட்டவை எண்டு எழுதிறதிற்கு பதிலாய் கிழக்கு லண்டன் ஈஸ்ட்டாமிலை எண்டு எழுதோணும். முதல் கொஞ்சகாலத்திற்கு இது கஸ்ரமாயிருக்கும். ஆகவே மிசிசாகாவிலை அது நடந்தது ஸ்காபறோவில் இது நடந்தது எண்டு எழுதினால் குழம்பாதேங்கோ. இருந்தாலும் இந்த ஊர்ப்பெயர்கள் எல்லாம் உங்களுக்கு பழக்கமாய் இருக்கும் எண்டு நம்பிறம்.*

*இப்ப கனடாவிலும் வாறதாலை அங்கையிருந்து ஆக்கங்கள் வரும் என எதிர்பார்க்கிறோம். வழமையான தொடர்பு விபரங்கள்தான் அதிலை பெரிசா மாற்றமில்லை. கனடாவிலை இருக்கிற மிகவும் பிரபலமான அக்கா ஒராள் ஒரு பேப்பருக்காக ஆக்கங்களை எழுதுவதாகக் கூறியிருக்கிறா பார்ப்பம்.*

*என்ன ஒரே கனடாப்புராணமாக இருக்குது எண்டு நினைக்காதேங்கோ. அங்கையிருக்கிற எங்கடை பழைய நண்பர்களை சந்தித்த புழுகம்தான். ஐரோப்பாவிலை மற்ற இடங்களுக்கும் ஒரு பேப்பரின் அச்சுப் பிரதி போகவேணும் எண்ட எங்கடை விருப்பம் இன்னும் நிறைவேறவில்லை எண்டது கவலைதான்.*

*இருபது முப்பது வருசம் இந்த நாடுகளிலை இருந்தாலும், இஞ்சத்தை நாட்டு நடப்புகள் ஒண்டும் சனத்துக்கு தெரியேல்லை. பேப்பர்காரரும் சனம் ஏதோ ஊரிலை இருக்கிறமாதிரி அவையளை பெட்டிக்குள்ளை வைச்சிருக்கினம் எண்டு சிலர் முறைப்பாடு செய்கினம். இதிலையும் உண்மையிருக்கு ஆனால் நாங்கள் நினைச்சம், நீங்கள் எல்லாம் அந்த மாதிரி. ஆனபடியாலை உள்ளூரிலை தரமான இங்கிலிஸ் ஊடகங்கள் இருக்க, நாங்களும் திரும்ப ஏன் அதையே எழுதிக்கொண்டு இருக்கோணும் எண்டு. ஆனால் பார்க்கப்போனால் அதுகளையும் பிரசுரிக்கோணும் போல இருக்குது.*

*வேறை என்ன?*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Mullivaaykaal: A Time of Hope, Anger and Courage

BY R.M.KARTHICK

*"Hope has two beautiful daughters – Anger and Courage. Anger at the way things are, and Courage to see that things do not remain that way."*

*-Quote attributed to St. Augustine*

Five years after Mullivaaykaal, the worst slaughter in the history of not just the Eelam Tamil nation, but the Tamil civilization as a whole. A few resolutions have been passed at Geneva asking the Sri Lankan state to behave itself without, of course, any mention of genocide. The same applies for several reports by high-profile international NGOs that talked about torture, militarization, sexual abuse, human rights etc. A few popular documentaries have been released by media organizations that have shown their audiences the suffering of the Tamil people in the island during the war and after. But as a nation, where are the Eelam Tamils? As a civilization, where are the Tamils?

A hitherto unheard of student uprising took place in Tamil Nadu last year, opposing the pro-LLRC US resolution in Geneva. This uprising triggered off similar protests in the diaspora, where grassroots organizations and activists united on a principled political platform. More than anything, the protestors were united by Hope, Anger and Courage. It was also obvious by the protest symbols used, that these activists from Tamil Nadu and the diaspora are ensuring the survival of the Tiger legacy of uncompromising resistance to oppression.

Liberal feminists like Radhika Coomaaraswamy claim that Tigers promoted a "culture of death". However, any genuine revolutionary fighting a brutal state would know that the Tiger's culture was a celebration of life and all the best elements in one's culture.

"Words are weapons" said Latin American writer Eduardo Galeano. Let us have a look at some the words that the LTTE used in the course of their struggle. They did not say that the cadres who fell in battle "iranthu poanaar" – "they died". They said "kaaviyamaanaar" – "they became poetic history". Those who became poetic history were not "buried in graveyards" - "kallaraiyil pithaikkappattaar". They were "sown in resting abodes" – "thuyilum illathil vithaippattaar". Those sown in the resting abodes were not "thyaagi" – "martyrs". They were "maaveerar" – "heroes". The Tigers, we must understand, used the martial elements from traditional Tamil culture to give a people resisting genocidal oppression a sense of hope, destiny and faith in the future of an independent Tamil Eelam.

However, after a colossal tragedy like Mullivaaykaal, it is but obvious there would be some sense of loss among the Tamils. But the strong ones and the politically principled recover while the weak and politically vacillating elements become victim to the enemy's psychological war. Confusion, distrust, loss of faith, cynicism, fear, death wishes, suicidal impulses, "auto-oppression", reluctance to identify with one's own people, a perverse comfort in promoting disunity, a contempt for one's culture – all of these are effects of psy-ops on a victim.

The genocide may have been executed on the Eelam Tamil nation. But it is the Tamil civilization, which constitutes over 80 million Tamils world over, which is at war now. A genocidal state and its international abettors have thrown us a challenge. It is not "submit or perish" – it is "submit and perish". What happens in Tamil Eelam affects Tamil Nadu. What affects Tamil Nadu affects the diaspora. More and beyond the physical deaths of our brothers and sisters in the Tamil Eelam homeland, it is the death of our souls that the oppressors aim at. They want us to reek in despair, desolation and denial.

We must respond with Hope, Anger and Courage.

We need to have Hope. Hope in ourselves as individuals, hope in our people, hope in our language, hope in our culture, hope in our martial legacy, hope in our destiny, hope in our victory. Above all, hope in our Heroes, and hope in LTTE leader Pirapaharan's school of thought.

We need to have Anger. Anger against the killers, anger against those who assisted them, anger against those who deny what happened, anger against those who obfuscate the Truth, anger against the sell-outs, anger against those who sow disunity, discord and depression.

We need to have Courage. Courage to stand by our identity and ideals, courage to speak Truth to power, courage to uphold the national flag, courage to celebrate our Heroes, courage to belive in the triumph of our civilization, courage to sacrifice, courage to Love, courage to fight.

And we also need Vision. To end with the words of Maximillien Robespierre, the ideological patriarch of modern day revolutionaries,

"We wish in our country that morality may be substituted for egotism, probity for false honour, principles for usages, duties for good manners, the empire of reason for the tyranny of fashion, a contempt of vice for a contempt of misfortune, pride for insolence, magnanimity for vanity, the love of glory for the love of money, good people for good company, merit for intrigue, genius for wit, truth for tinsel show, the attractions of happiness for the ennui of sensuality, the grandeur of man for the littleness of the great, a people magnanimous, powerful, happy, for a people amiable, frivolous and miserable"

However, after a colossal tragedy like Mullivaaykaal, it is but obvious there would be some sense of loss among the Tamils. But the strong ones and the politically principled recover while the weak and politically vacillating elements become victim to the enemy's psychological war.

In a word, all the virtues and miracles of a sovereign Tamil Eelam, instead of all the vices and absurdities of unitary Sri Lanka.

*Courtesy: jdslanka.org*

# From Tiananmen to Jaffna: Banning community commemoration



By JS Tissainayagam

The parallels are stark. As the anniversary of the Tiananmen Square massacre approaches, Chinese police have begun detaining activists who might be planning to stage protests against the government for the bloody killings that left hundreds dead and unleashed a wave of repression 25 years ago. Meanwhile, last week, Beijing's dedicated acolyte, the Sri Lanka government, announced that anyone publicly mourning the dead in the country's Tamil-dominated North, on the fifth anniversary of a slaughter which ended the military campaign, could be arrested for terrorism.

On May 6, the BBC reported that Pu Zhiqiang, an activist who had participated in the 1989 protests and tried to commemorate the tragic occasion every year was "likely to spend June 4 [date of the anniversary] in a police detention centre," because he was arrested after attending a private meeting to discuss the event. The BBC said he "faced vague charges of 'causing a disturbance.'" Six others, including a scholar and an Internet activist, are also in police detention, while five were arrested and released.

May 18 has come to symbolise different things in different parts of Sri Lanka. This precisely is the reason why the restrictions on mourning apply only to the Northern Province – the only Tamil-dominated province in the country.

"We can definitely see the suspension of Pu Zhiqiang as a warning to civil society and to other lawyers ahead of June 4," the BBC quoted William Nee, a researcher for Amnesty International, as saying.

On May 8, the BBC said that 70-year-old Gao Yu, a prominent dissident journalist had been detained, which her lawyer interpreted was to "set examples to whoever wants to hold events related to June 4".

In Sri Lanka meanwhile, the government warned that no public events would be permitted in the Northern Province to mourn the dead on or around May 18. The day marks the official end of the country's civil war in 2009 with the military defeat of the rebel Liberation Tigers of Tamil Eelam (LTTE). The final five months of fighting left between 40,000 and 70,000 dead – other estimates place the figure much higher – the majority of them Tamil civilians.

Sri Lanka's Sunday Times newspaper said that the government issued a stern warning that while memorials could be held inside homes, no public events would be permitted. It reported Senior Superintendent of Police W. P. Wimalasena saying, "Any persons trying to hoist black flags, distribute leaflets, or put up posters, will be considered as supporting terrorism and such persons will be taken into custody under the Prevention of Terrorism Act."

But that was not all. The story also quoted military spokesman Brigadier Ruwan Wanigasooria saying "[t] hat even two families would not be allowed to get together to have remembrances as these could turn into a large group and make it a commemoration."

May 18 has come to symbolise different things in different parts of Sri Lanka. This precisely is the reason why the restrictions on mourning apply only to the Northern Province – the only Tamil-dominated province in the country. In areas outside the North, the government holds huge victory day celebrations, replete with militaristic symbols – marching columns, parading of military hardware and speeches reinforcing national unity and victory over terrorism and division of the country. These events have strong overtones of racism: the triumph of Sinhala nationalism, embodied by the government of President Mahinda Rajapakse and his family, over the Tamils by crushing their aspiration for dignity, rights and equality. This year's event will be in Matara, on the southern coast.

The controversy over Tamils dedicating May 18 as a memorial for the dead is not new – it has gone on for five years. But what is of significance this year is that the government has not expressed its opposition to individual families mourning in private. It has banned families mourning collectively however – not only in public but in private too.

The distinction is all important. The government is not only worried about a public event becoming a show of protest and thereby undermining the 'victory' it wants to celebrate with the trappings of triumphalism. It is also anxious that it should not become an opportunity for collective, communal mourning.

The reason behind this is simple. Following a military victory, the victor imposes rules to ensure that the victim community remains with little social cohesion – broken, dispirited and at odds with itself. But acts of mourning, whether in private or public, help to restore communities fractured and atomised by the past (and ongoing) trauma. It is with this objective in view that let alone public memorialising, even group counselling and psychosocial projects for war-related trauma are discouraged by the Sri Lanka government in northern Sri Lanka.

Group therapy – even in a clinic – allows survivors to explore together their deepest feelings of suffering, trauma and guilt. It allows groups to understand common loss and devise inclusive strategies for overcoming them. But to Rajapakse and the military administration in northern Sri Lanka, any endeavour by Tamils to master their individual grief and recover as a community is unacceptable. Because that means what Colombo sees as the 'enemy' which was hitherto preoccupied by private and individual sorrow could use its collective power to effect other changes too, such as oppose oppressive political conditions.

The Rajapakse government finds anathematic any political action by the people other than what it is willing to champion or condone. But even in Sri Lanka where political freedom is minimal, a government found it difficult prevent people coming together for a public ceremony. Therefore it has adopted a new way – criminalising the reason for which people would come together.

By criminalising northern Tamils mourning their dead as an act of terrorism, which can be punished by arrest and detention under the Prevention of Terrorism Act (PTA), Rajapakse hopes he can contain the Tamils' moves to cohere as a community once again. And to bolster his strategy – and thereby justify a crackdown – the government has floated the story of the LTTE regrouping and the possibility of another armed uprising. Except for the government and its camp followers, nearly everyone else views the claims of a possible armed uprising with deep scepticism.

These events have strong overtones of racism: the triumph of Sinhala nationalism, embodied by the government of President Mahinda Rajapakse and his family, over the Tamils by crushing their aspiration for dignity, rights and equality. This year's event will be in Matara, on the southern coast.

Rajapakse is well aware that the political conditions he has imposed on Sri Lanka by preventing accountability for war crimes and continuing human rights abuses have not created a 'post-war' environment at all. He realises that if people have any opportunity of coming together, the natural consequence would be to break out of the oppressive circumstances in which they find themselves.

In the final analysis, an autocratic government, whether run by the Communist Party in Beijing or by the Rajapakse family in Colombo, fears people with a political will that oppose its own. It is secondary whether the people use the ballot box, civil disobedience or armed combat to achieve their aim. What need to be nipped in the bud are people coming together as a community: therefore it is made a criminal act. As long as mourning facilitates the restoration of community, it will be opposed by oppressive governments. And as long as it is opposed – be it five years or 25 – the people will not give up trying to restore community either.

*Courtesy: Asian Correspondent (asiancorrespondent.com)*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

**ஒரு பேப்பர்**
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*விளம்பரம்*
**அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூ - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**அஜந்தா**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்டு:**

தொலைபேசி (Tel)
**லண்டன் 020 7043 4310**
**கனடா 416 613 2850**

தொலைநகல் (Fax)
**லண்டன் 020 7043 4312**
**கனடா 416 438 7855**

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**
இணையம்:
**www.orupaper.com**

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# அடையாளமற்ற அரசியல்

**சசிதர் மகேஸ்வரன்**

*எமது தேசியக்கொடியினை பொது நிகழ்வுகளில் ஏற்றுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் தொடர்பில் இளம் செயற்பாட்டாளர் சசிதர் மகேஸ்வரன் வழங்கிய கருத்துகளை இங்கு பிரசுரிக்கிறோம். எமது வேண்டுகோளை ஏற்று மிகவும் குறுகிய கால அவகாசத்தில் தனது கருத்துகளை வழங்கியமைக்கு அவருக்கு ஒரு பேப்பர் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.*

தமிழீழத் தேசியக் கொடிக்கு பிரித்தானியாவில் தடை என்ற பொய்ப்பிரச்சாரங்களில் அண்மைக் காலமாக ஒரு சிலர் ஈடுபட்டு வருகின்றனர். தேசியக் கொடியை முன்னிலைப்படுத்தி நிகழ்வுகளை நடாத்துவோர்களில் ஒருவன் என்ற வகையில் கொடி சார்ந்த சட்ட நிலவரம் மற்றும் கொடியை முன்னிலைப்படுத்துவதற்கான சமகால அரசியல் தேவைகள் என்பவற்றை விளக்க வேண்டியது எனது கடமை என உணர்கின்றேன்.

## ◆ தேசியக்கொடிக்கு தடையா ?

பிரித்தானியாவில் தமிழீழத் தேசியக் கொடிக்கு தடை விதிக்கப்படவில்லை. இதற்கு இரண்டு உதாரணங்களை முன்வைக்கலாம். பொது இடம் என்று எடுத்துப் பார்த்தால் 2012ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோது இருபத்தியிரண்டு நாட்களாக மைதானத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு இடத்தில் எம் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. ஒலிம்பிக் போட்டிக்கான பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பிரித்தானியாவிலுள்ள அதிஉயர் காவல்துறை அதிகாரிகள் இவ்விடத்திற்கு வருகை தந்திருந்தனர். ஆனால் எந்த ஒரு தருணத்திலும் அவர்கள் கொடி சார்ந்த விமர்சனம் எதனையும் எமக்கு முன்வைத்திருக்கவில்லை.

தனியார் வளாகம் என்று பார்த்தால் இந்த நாட்டில் உள்ள மிகப்பெரிய உள்ளக அரங்கான எக்செல் மண்டபத்தில் ஆண்டு தோறும் தேசியக் கொடி ஏற்றப்பட்டே தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதற்கும், எந்த எதிர்ப்பும் இதுவரை காலமும் காவற்துறையிடமிருந்து வரவில்லை. மாறாக, மாவீரர் நாள் நிகழ்வில் பல கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை இன்னமும் உள்ளது என்பது உண்மையேயாகும். இத்தடையை ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள இருபத்தியொன்பது நாடுகளிலும் நீக்குவதற்கான சட்ட, மற்றும் அரசியல் வேலைகளை தமிழ்த் தேசிய அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன. இதனூடாக சில ஆக்கபூர்வமான விளைவுகளை இந்த ஆண்டின் முடிவில் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

## ◆ முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் கொடி எதற்கு?

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என்பது தமிழீழத் தேசத்துக்கு எதிராக சிங்களம் தொடுத்த ஒரு இன அழிப்பு நடவடிக்கை. ஆனால், சர்வதேச சமூகத்தில் ஒரு சிலர், நடந்தவற்றை போர்க்குற்றங்களாகவே சித்தரிக்க விரும்புகிறார்கள். ஐ.நா. வினால் ஆண்டு தோறும் கொண்டுவரப்படும் தீர்மானங்களும், போர்க்குற்றங்கள் என்றே முள்ளிவாய்க்கால் என்று நாம் சொல்லும் நிகழ்வை சித்தரித்து வருகின்றனர். அதாவது அவர்கள் கூறுவது இதுதான்:

சிறிலங்கா இராணுவமானது வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அழிப்பதற்கான ஒரு போரைத் தொடுத்திருந்தார்கள். இந்தப் போரின் போது ஒரு சில இராணுவத்தினர், அளவுக்கதிகமான எறிகணைகளை கண்மூடித்தனமான ஏவி இருந்தனர். (indiscriminate and excessive shelling) இது ஓர் போர்க்குற்றமாகும். இந்தப் போர்க்குற்றத்தின் விளைவாக பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அதேபோன்று, எறிகணை வீச்சுகள் ஆரம்பித்தவுடன், சிறிலங்கா அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் செல்ல விரும்பிய மக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் வலுக்கட்டாயமாக மனிதக் கேடயங்களாக (human shields) பயன்படுத்தி வந்தார்கள். இதுவும் ஓர் போர்க்குற்றமாகும். இந்தப் போர்க் குற்றத்தின் விளைவாகவும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள்.

இந்த வகையில் சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களுக்கான அனுதாபத்தையும் தெரிவிக்கிறார்கள். இரண்டு தரப்பினரும் அதாவது இராஜபக்ச அரசாங்கமும் அதன் கீழ் இயங்கி வந்த படையினரும், தமிழீழ விடுதலைப்புலிகளும் சமமாக தண்டிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறிவருகிறார்கள். எனினும், சாவடைந்த மக்களுக்கான நீதியும், நியாயமுமாக இந்த இரண்டு பக்கங்களையும் தண்டிக்கப்படுவதை மட்டுமே முன்னிலைப்படுத்துகிறார்கள். வேறு எந்த வகையிலும் தமிழர்களுக்கான விடிவுக்கு இந்த வகையான சித்தரிப்பு வழிவகுக்கவில்லை. ஆனால், ஈழத்தமிழர்களாக நாம் முள்ளிவாய்க்கால் என்று சொல்லப்படும் நிகழ்வில் நடந்த உண்மையை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டிய கடமைக்குரியவர்களாக உள்ளோம்.

வன்னி மண் மீது சிறிலங்கா அரசாங்கம் தொடுத்த போர் என்பது தமிழீழ தேசத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கை என்பதை உரத்துக் கூறவேண்டியது எமது கடமையாகும். தமிழீழ தேசத்தின் காவலர்களாக ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிப் போராளிகள் இருந்தபோது அதன் நாடித்துடிப்பாக தமிழீழ தேசத்தை நேசிக்கும் மக்கள் இருந்தார்கள் என்பது உண்மையாகும். தமிழீழ தாயக பிரதேசத்தில் பல பகுதிகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட வன்னி மண்ணிலிருந்து சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற விருப்புடன் பல்லாயிரம் மக்கள் அணிதிரண்டிருந்தனர் என்பது புள்ளி விபரங்களுடன் நிரூபிக்கக் கூடிய விடயமாக உள்ளது. அதேபோன்று தமிழீழத் தேசத்திற்கான அமைதிவழிப் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியதும் மற்றும் எமது தேசத்திற்கெதிராக தொடர்ச்சியாக நடந்து வரும் கட்டமைப்பு சார் இனஅழிப்பை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலும், ஆர்வமுள்ள மக்களில் பலரும், வன்னி மண்ணிலேயே அணி திரண்டிருந்தார்கள் என்பதும் வரலாற்று ரீதியான உண்மையாகும்.

தேசியத் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள், இணையத்தள அறிவிப்பாளர்கள் மற்றும் அரசியல் ரீதியான மக்களை ஒருங்கிணைக்கக் கூடியவர்கள் எனப் பலரும் வன்னியிலேயே ஒன்று கூடி இருந்தார்கள். முதற் கட்டமாக, இந்த அறிவு சார் மக்களை (articulative section of Tamil Nation) படுகொலை செய்து அழிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே, திட்டமிட்ட வகையில் அந்தப் பிரதேசத்துக்குள் பெருமளவு எறிகணை வீச்சுகள், வான் குண்டு வீச்சுகள் மற்றும் கைது செய்து கொலை செய்வது (execution) போன்றவற்றை சிங்கள தேசம் நிறைவேற்றியிருந்தது.

தேசத்தை நேசித்து தேசத்தின் விடிவுக்காக அமைதி வழியில் போராடிய மக்களும் தாம் நேசித்த தேசத்தில் வாழ வேண்டும் என்ற விருப்புடன் வன்னியில் வாழ்ந்த மக்களையும் நினைவு கூறும் வகையில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டும் என்பது மிகவும் கட்டாயமான விடயமாக உள்ளது. இதற்கு உதாரணமாக 09-11 (செப்ரெம்பர் 11) என்ற நிகழ்வை எடுத்துப் பார்க்கலாம். அங்கே அல்கெய்தா என்ற அமைப்பு நியூயோர்க்கில் பெரும் இரட்டைக் கோபுரத்தைத் தாக்கி மூவாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க மக்களைக் கொன்றது. அச்சம்பவம் நடத்த ஒரு சில மணி நேரங்களுக்குள்ளேயே அங்கு சென்ற தீயணைப்புப் படை வீரர்கள் செய்த முதல் வேலைகளில் ஒன்று, அந்த இடத்தில் அமெரிக்கத் தேசியக் கொடியை ஏற்றியதேயாகும். அவர்கள் அதற்குச் சொன்ன காரணம்: இந்த அல்கெய்தா அமைப்பு நடாத்திய போர் நடவடிக்கை என்பது வெறுமன மூவாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி மக்களை கொல்லும் நடவடிக்கை மட்டுமல்ல, அமெரிக்கா என்ற தேசத்துக்கெதிராக தொடுக்கப்பட்ட ஒரு போர். இதை நாம் தேசம் என்ற தேசியக் கொடியின் கீழ் ஒன்றிணைந்து அமெரிக்கத் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் எதிர்கொள்வோம் என்றே அவர்கள் கூறியுள்ளார்கள். இதுவே அனைத்துப் பத்திரிகைகளிலும், முதற்பக்கமாக அந்தச் சம்பவம் நடந்த மறுதினம் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, வன்னியில் எமது மக்களுக்கெதிராகச் சிங்களம் தொடுத்திருந்த போர் வெறுமன ஒரு லட்சத்து நாற்பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை கொல்ல வேண்டும் என்ற நோக்கத்துக்கு அப்பால் தமிழீழ தேசத்தை முற்று முழுதாக அழிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே முன்னெடுக்கப்பட்டது என்பதையும் அங்கு இறந்த மக்கள் தமிழீழ தேசத்தை நேசித்தவர்கள் என்ற ஒற்றைக் காரணத்திற்காகவே சாவடிக்கப்பட்டார்கள் என்பதையும் வெளிக்காட்டக் கூடிய வகையில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடனேயே இந்த மக்களுக்கான நினைவு வணக்க நிகழ்வுகள் எழுச்சிகரமாக நடாத்தப்பட வேண்டும் என்பது சமகால அரசியல் தேவையாக அமைந்துள்ளது.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## கிளர்ச்சிகள் எல்லாம் மகிழ்ச்சிகள் அல்ல!

இன்றைய காலத்தில் பெரும்பாலான மனிதர்களுக்குப் புதிராக இருப்பது என்ன தெரியுமா? மகிழ்ச்சி தான். அதையே அனைவரும் தேடி அலைகிறார்கள். அதற்காக படாத பாடு படுகிறார்கள். பார்க்கின்ற பலரிடம் அது இருப்பதாக எண்ணி பொறாமைப்படுகிறார்கள். ஆனால் தங்களிடத்தில் மட்டும் ஏனது இல்லை என்று மனம் புழுங்குகிறார்கள். பொருள்களை வாங்கிச் சேர்த்தால் வருமா என்று பார்க்கிறார்கள். குடித்தால் கிடைக்குமா, புகைத்தால் கிடைக்குமா என்று மயங்குகிறார்கள். கேளிக்கைகளில் கிடைக்குமா என்று தேடுகிறார்கள். புகழால் பெற முடியுமா என்று முயற்சிக்கிறார்கள். ஆனால் மகிழ்ச்சி பலருக்கும் என்றும் ஒரு புதிராகவே தங்கி விடுகிறது.

சில சமயங்களில் மகிழ்ச்சி கிடைப்பது போலத் தெரிகின்றது. ஆனால் ஒருசில சின்ன மாற்றங்களில் அது மின்னல் வேகத்தில் மறைந்தும் போகிறது. இதோ கிடைத்து விடும், இப்போது கிடைத்து விடும், இதைச் செய்தால் கிடைத்து விடும், இது கிடைத்தால் கிடைத்து விடும் என்று சலிக்காமல் அதன் பின்னால் போகும் மனிதனுக்கு மகிழ்ச்சி கடைசி வரை முழுமையாக பிடிபடுவதில்லை. அதனால் தான் பல சமயங்களில் கிளர்ச்சியையே மகிழ்ச்சி என்று எண்ணி அவன் ஏமாந்து விடுகிறான். வெறுமனே ஏமாந்தாலும் பரவாயில்லை அதனால் சிறிதும் எதிர்பாராத பல பிரச்னைகளில் சிக்கிக் கொள்கிறான்.

ஆதிசங்கரரின் பஜகோவிந்தத்திற்கு விளக்கவுரை எழுதும் போது ராஜாஜி மிக அழகாகச் சொல்வார். "இதில் என்ன குற்றம் என்று எண்ணி மோசம் போக வேண்டாம். கண்கள் வழி திருப்தி உண்டாகாது. உண்டாவது ஆசை தான். ஒருவன் தண்ணீரைத் தேடுவான். தாகத்தை யாரேனும் தேடுவரோ? தேடினால் பிறகு உடனே தண்ணீரைத் தேட வேண்டுமல்லவா? நேர்மையை இழக்க எண்ணமில்லையாயின் ஏன் நீயாகக் கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்?"

தத்துவார்த்தமாகச் சொல்லப்பட்டாலும் ராஜாஜி அவர்கள் சொன்னதில் ஆழ்ந்த பொருள் உள்ளது. தண்ணீரைத் தேடுவது இயற்கை. ஆனால் தாகத்தையே தேடுவது செயற்கை. செயற்கையான எதிலும் மகிழ்ச்சி வந்து விடாது.

கிளர்ச்சிகளின் குணம் எப்போதும் ஒன்றே. அது அக்னியைப் போன்றது. எத்தனை விறகு போட்டாலும் அந்த அக்னி எரிந்து கொண்டே இருக்கும். இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கும். தீனி போட்டு அதன் பசியைத் தீர்க்க முடியாது. தீனி போடுவதாலேயே பசி அதிகரிக்கும். அழிவு நிச்சயம் என்ற போதிலும் அடங்கி விடாது. அது அழித்தே அணையும்.

தீய பழக்கங்கள் தான் கிளர்ச்சிகள் என்றில்லை. ஒரு வரம்பை மீறி உங்களிடத்தில் எழும் எதுவும் கிளர்ச்சியாக மாறி விடலாம். பண ஆசை, புகழ் ஆசை, பொருளாசை முதலான எதுவும் வரை முறைக்குள் இருக்கும் போது சாதாரண ஆசைகளாக இருக்கக்கூடியவை. ஒரு வரம்பை விட்டு மேலும் மேலும் அதிகரிக்கும் போது அவை கிளர்ச்சிகளாக மாறி விடும். கட்டுப்பாடு இல்லாமல் போகும். என்ன விலை கொடுத்தாவது அடையத் தோன்றும். மனிதன் என்ற நிலையிலிருந்து மிருக நிலைக்கும் போக வைக்கும். இந்த அறிகுறிகள் தோன்றுமானால் கிளர்ச்சி தன் ஆதிக்கத்தை உங்கள் மேல் செலுத்த ஆரம்பித்து விட்டது என்று பொருள்.

*- என்.கணேசன்*

# இந்தியாவில் ஆட்சிமாற்றமும் ஈழத்தமிழர்களும்



**கோபி**
*ஒரு பேப்பர்*

இந்தியப் பொதுத்தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி பெற்ற மாபெரும் வெற்றி முழு உலகத்தினது கவனத்தையும் அதன்பால் ஈர்த்திருக்கிறது. மோடி என ஒற்றைச் சொல்லால், அதாவது அவரது குடும்பப்பெயரால் அழைக்கப்படும் அறுபத்தி மூன்று வயதான நரேந்திர தாமோதரதாஸ் மோடி தலைமையில் பாரதீய ஜனதா பெற்ற வெற்றியானது இந்திய சுதந்திரத்திற்கு பின்னரான அறுபத்தியாறு வருடங்களில் கொங்கிரஸ் அல்லாத ஒரு கட்சி பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றி எனக் கருதப்படுகிறது. இந்திய நடுவன் அரசாங்கம் மோடி தலைமையிலான பாரதிய ஜனதாவிடம் சென்றுள்ளமையினால் ஏற்படுள்ள ஆட்சி மாற்றம் ஈழுத்தமிழர் விடயத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் உள்ளது. கூடவே தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலானஅண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து நின்று பெற்ற வெற்றியும் இவ் எதிர்பார்ப்பினை அதிகரித்துள்ளது.

தாம் வாழும் பிராந்தியத்தில் உள்ள பலம் மிக்க ஒரு பெரிய நாடு என்ற வகையிலும், கடந்த முப்பதாண்டுகளில் பல் வேறு வழிகளிலும் தலையீடுகளைச் செய்த நாடு என்ற வகையிலும் இந்திய ஆட்சி மாற்றம் பற்றி, ஈழத்தமிழ்மக்கள் அக்கறை கொண்டுள்ளமை இயற்கையானதே. கடந்த காலங்களில் கொங்கிரஸ் ஆட்சியின் நடவடிக்கைகளால் பெரும் இழப்புகளையும் பின்னடைவுகளையும் கண்ட ஈழத்தமிழினம் புதிய ஆட்சியினையிட்டு ஓரளவு நம்பிக்கை கொண்டிருப்பது தெரிகிறது. ஆனால் அரசாங்க மாற்றம் இந்தியாவின் வெளியுறவைக் கையாளும் விடயத்தில் எத்தகைய மாற்றங்களை கொண்டு வரும்? இங்குள்ள வரையறைகள் என்ன ? வெற்றிபெற்ற கட்சியின் வெளியுறவுக் கொள்கை என்ன? போன்ற வினாக்களுக்கு பதிலைத் தேடாமல், எமது கற்பனையில் தோன்றுகிற அல்லது நாம் விரும்புகிற விடயங்களே நடைபெறப்போகிறது என்ற மாயையைத் தோற்றுவிப்பதும், பின்னர் அதுநிறைவேறாதபோது ஏமாற்றம் அடைவதும் விவேகமான செயற்பாடுகளாக அமையாது.

நரேந்திர மோடி தேர்தலில் குதித்தபோது, அவரது இந்து மதவாத நிலைப்பாட்டைக் காரணங் காட்டி அவருக்கு ஆதரவு வழங்கக்கூடாது என புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலளார்கள், இலக்கியவாதிகள் எனச்சிலர் குரல் கொடுத்தனர். வட இந்திய மாநிலங்களிலும், கர்நாடகா, கேரளா போன்ற தென்மாநிலங்களில் எழுந்த இந்தக்குரலுடன் தமிழ்நாட்டிலிருந்தும் சிலர் இணைந்து கொண்டு கூட்டாக அறிக்கை வெளியிட்டனர். இவ்வறிக்கையில் ஒப்பமிட்டவர்களில் சிலர் மகிந்த இராஜபக்சவை ஆதரிப்பவர்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்க முரண்நகை. அதேசமயம், மகிந்த இராஜபக்சவின் அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளையிட்டு சர்வதேச விசாரணை வேண்டும் என ஆர்ப்பரிக்கிற ஈழத்தமிழர்கள், குஜாரத் மாநிலத்தில் மதக்கலவரங்களில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கொல்லப்பட்மையையிட்டு சட்டை செய்யாதிருந்த மோடியிடம் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்ற கேள்வி மேற்குறித்தவர்களிடமிருந்து எழுந்தது.

RSS எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இராஸ்திரிய ஸ்வம்சேவக் சங் (தேசிய தொண்டர் அமைப்பு) என்ற மதவாத அமைப்பின் பின்னணியைக் கொண்டவர் நரேந்திர மோடி. அதுபோல் பாரதீய ஜனதாக் கட்சி 'ஹ்ந்துத்வா' எனும் மதமேலாதிக்க கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. இவ்விடயங்களைக் கவனத்தில் எடுத்து, அவரைப் புறக்கணிப்பவர்களின் இலட்சிய நேர்மையை நாம் மெச்சிக்கொள்ளலாம். ஆனால் நடைமுறைக்கு உதவாத இலட்சியங்களுக்கு அப்பால், தமிழ் மக்களின் நலனில் நாம் அக்கறை கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இராஜதந்திர அணுகுமுறை என்பது நாடுகளற்ற தேசிய இனங்களுக்கும் உள்ளது என்பதனை ஏன் சிலர் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே சகட்டுமேனிக்கு மோடியை எதிர்க்கவேண்டும் என்ற குரல்களையிட்டு இந்தியாவின் பெரும்பான்மை வாக்களார்களைப்போல் ஈழத்தமிழர்களும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

எண்ணூற்று பதினான்கு மில்லியன் (814,000,000) மொத்த வாக்காளர்களைக் கொண்ட இந்தியாவில், பெரும்பான்மையான மக்கள் வாக்களிக்கச் செல்லும்போது, எந்த சித்தாந்தங்களின் அடிப்படையிலும் வாக்களிப்பதில்லை. மாறாக தமது வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதைக் கருத்தில் கொண்டே வாக்களிக்கிறார்கள். இது உலகின் எல்லா ஜனநாயக நாடுகளுக்கும் பொருந்தும் நடைமுறை. தேசியவாத, மதவாத கருத்துகளும் இந்தியாவில் அதிக செல்வாக்குச் செலுத்துக்கின்றன என்பதனை ஒரு வேறுபாடாகக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் அவர்களிடம், கொங்கிரஸ், பாரதீய ஜனதா என்ற இரண்டு தெரிவுகளே இருந்தன. அவற்றுள் மிகப்பெரும் எண்ணிக்கையிலான வாக்களார்கள் பாரதீய ஜனதாவை தெரிவுசெய்துள்ளார்கள்.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை, ராஜீவ் காந்தி, சோனியா காந்தி என்போரின் தலைமையிலான கொங்கிரஸ் அரசாங்கங்கள் அவர்களுக்குச் செய்த அழிவுகள் சொல்லி மாளாதாவை. ஆகையால் பாரதீய ஜனதாக் கட்சியின் வெற்றியை அவர்கள் கொண்டாடவிட்டாலும், கொங்கிரசின் படுதோல்வியையிட்டு அகமகிழ்ந்து கொள்கிறார்கள். இருப்பினும் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று அவதானித்தால், இலங்கைத்தீவு விடயத்தில் மோடி அரசாங்கம் குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் ஏற்படுத்தும் என்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. ஏனெனில் வெளியுறவு விடயங்களில் மோடி தலைமையிலான அரசாங்கம், கொங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து அதிகம் வேறுபடவில்லை. உள் நாட்டில் உள்ள தேசிய இனங்களின் உரிமைகள் விடயத்திலோ அல்லது வெளியுறவுக்கொள்கைகளிலோ அது மாற்றுக் கருத்துகளைக் கொண்டிருக்கவில்லை. அரசாங்க மாற்றம் இந்திய அதிகார மையத்திலும் (Indian establishment) குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் ஏற்படுத்தப் போவதில்லை.

குறிப்பிட்டுச் சொல்வதானால், கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் கொண்டு வரப்பட்ட இலங்கைத் தீவு தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் விடயத்தில், இந்தியா நடந்து கொண்ட விதத்திலேயே மோடியின் ஆட்சிக் காலத்திலும் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கலாம். இவை இந்திய - இலங்கை உறவுகளிலேயே பெருமளவு தங்கியிருக்கிறது. இருப்பினும், தமது மூலோபாய மற்றும் வர்த்தக நலன்களுக்கு விரோதமாக சிறிலங்கா நடந்து கொள்ளுமாயின் கொங்கிரஸ் ஆட்சியினைப்போலன்றி, மோடி அரசு கடும்போக்கினைக் கடைப்பிடிக்கும் என எதிர்பார்க்கலாம். இவற்றை வைத்துப் பார்க்கையில் மோடி அரசாங்கத்தின் இலங்கைத் தீவு தொடர்பான நிலைப்பாடு சிறிலங்கா அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியுள்ளமை தெரிகிறது. பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடுவும் இவ்வாறான கருத்துகளைச் செவ்வி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதீய ஜனதாக்கட்சியின் கொள்கைகளில் அது சிறிலங்கா அரசுடன் முரண்பட்டுக் கொள்ளும் சில விடயங்கள் இருக்கின்றன. இந்திய அதிகார மையத்தின் கனவுத்திட்டமான 'அகன்ற பாரதம்' என்ற விரிவாக்கல் கொள்கை கொங்கிரசைக் காட்டிலும் பாரதிய ஜனதாவினரின் நெஞ்சுக்கு நெருக்கமானது. இந்தியாவின் சிறிய அண்டைநாடுகள் விடயத்தில் 'பெரியண்ணன்' நிலையைப் பேண மோடி அரசு முற்படுமாயின் அது சிறிலங்காவின் சிங்களபௌத்த தேசிய வாத அரசுடன் முரண்படும் நிலை ஏற்படும். சீன ஒழுங்கிற்குள் விரைந்து சென்றுகொண்டிருக்கும் சிறிலங்காவின் நிலைப்பாடும் மோடி அரசிற்கு ஒவ்வாத ஒன்றாக அமையும். மேற்கத்தைய முதலீடுகளை விரும்பும் மோடி தன்னை நவதாராண்மை வாதியாகக் காட்டவே முற்படுவார் என எதிர்பார்க்கலாம். இவ்விடயத்திலும் மோடி அரசு இராஜபக்ச அரசாங்கத்துடன் முரண்படும்.

> **தேசிய மட்டத்தில் செயற்பட வேண்டிய நடுவன் அரசில் அ.தி.மு.க அதிகாரங்களை பெற்றிருந்தாலும் அது இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்க முடியாது.**

இறுதியாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து நின்று பெற்றவெற்றி ஈழத்தமிழர்கள் விடயத்தில் ஏதாவது வாய்புகளை பெற்றுக்கொடுக்குமா என்பது பற்றிப்பார்ப்போம். அ.தி.மு.க தமிழ் நாட்டின் முப்பதியொன்பது தொகுதிகளில் முப்பத்தியேழு தொகுதிகளைக் கைப்பற்றி முழு இந்தியாவிலும் மூன்றாவது நிலைக்கு வந்துள்ளது. மற்றய கட்சிகள் எதுவும் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்க முடியாத நிலையிருந்திருந்தால், அ.தி.மு.க மத்திய அரசில் பேரம் பேசும் நிலையைப் பெற்றிருக்கும். முதல்வர் ஜெயலிதா பிரதமராகும் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்கும். இப்போது அவ்வாறான நிலை இல்லாமையால், அவரால் அதிகமாக எதுவும் செய்து விடமுடியாது என்று சிலர் வாதிடுகிறார்கள். தேசிய மட்டத்தில் செயற்பட வேண்டிய நடுவன் அரசில் அ.தி.மு.க அதிகாரங்களை பெற்றிருந்தாலும் அது இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்க முடியாது. இவ்விடத்தில் மைய அரசில் அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியின் செயற்பாடுகள் மனங்கொள்ள தக்கவை.

மைய அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்ள முடியாதநிலையிருப்பினும் மாநிலத்தில் தனது முழுமையான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஜெயலலிதா அம்மையார், தற்போதைய பதவிக் காலத்தில் செயற்பட்டு வருவது போன்று தமிழ்த் தேசிய தளத்தில் செயற்படுவாரானால் அவரது ஆதரவுத் தளம் தக்கவைக்கப்படுவதுடன் , தமிழ் நாட்டு மக்களின் ஆதரவுடன் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான சில நகர்வுகளை மேற்கொள்ள முடியும், இவ்விடயத்தில் மோடி அரசு எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க முடியும்.

கருத்துக்களுக்கு @orupaper & facebook.com/orupaper


## ஒரு பேப்பர்

**கிடைக்குமிடங்கள்**

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam ............. 020 8694 8810
AJ Video ................. 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ....................... 020 8297 9432
Best Food ............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan ................... 020 8514 1744
Angels ................... 020 8553 0490
Sri store ltd ............ 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434


MORE GOODS MORE SAVINGS
On Your Way
Best Foods
Est. 1989
SUPERMARKET
தரமான பொருட்கள், நியாயமான விலை, அன்பான உபசரிப்பு இவையனைத்தும் BEST FOODS இல் மட்டுமே
BUY 1 GET 1 FREE
100% VEGETARIAN
On Your Way
Best Foods
SUPERMARKET
Frozen
Kothu Porotta
Net Wt. 375 g. (13.22 oz)
புது வரவு
BUY 1 GET 1 FREE
On Your Way
Best Foods
SUPERMARKET
Frozen
Porotta
Net Wt. 375 g. (13.22 oz)
100% VEGETARIAN
5 Pieces


MERLYN
KUDOS
hansgrohe
Hudson Reed
JSN HEAT SUPPLIES LTD
KUDOS
GROHE
GRUNDFOS
WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS
SINGLE LEVER BATH MIXER
LIMITED OFFER
£12.90
inc. VAT
NEPTUNE SINGLE LEVER SINK MIXER
LIMITED OFFER
£18.90
inc. VAT
SINGLE LEVER BATH/SHOWER
LIMITED OFFER
£28.00
inc. VAT
LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT
Starts from
£14
inc. VAT
XCLUSIVE FULL SUITE
1500/1600/1700 x 700mm single ended bath, 1700mm front panel, wc inc. standard seat, 550mm basin & ped, basin mixer, bath mixer
LIMITED OFFER
£230
inc. VAT
1200mm 6MM SAFETY GLASS CLEAR SEALED LIFETIME GUARANTEE SLIDING DOOR
£210 inc. VAT
FAST FIT 8.5KW ELECTRIC SHOWER
Starts from
£65
inc. VAT
JSN HEAT SUPPLIES LTD
• PLUMBING • ELECTRICALS
• BOILERS • RADIATORS
ALL AT DISCOUNT PRICES
AQUALISA
Roca
Armitage Shanks
MAIN
GROHE
Hudson Reed
Vaillant
AQUALUX
mira
Glow-worm
ARISTON
Ideal Standard
KESTON
saneux
TEL: 020 8427 0553
ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES
COMPACT FURNITURE PACK
550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat.
£290
inc. VAT
KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILALBLE.
GERMAN STEEL EUROWA BATH 170 X 70MM
£90
inc. VAT
• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES
162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553

# வன்புணர்வு ஒரு ஆயுதம் - குமுதா ஓர் உதாரணம்



## தே.பிறேம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தாள் அவள். வன்னியின் சிறு கிராமம் ஒன்றைச் சேர்ந்தவள். பெண்கள் காப்பகம் ஒன்றே சில மாதங்களாக அவளைப் பராமரித்து வருகிறது. இப்போது அவள் நிறை மாதக் கர்ப்பிணி. ஆனால் அந்தக் குழந்தை தனக்கு வேண்டாம் என்று அடியோடு மறுத்து அழுது அடம்பிடிக்கிறாள்.

இரண்டு தடவைகள் தற்கொலைக்கு முயன்றிருக்கிறாள். கடைசித் தடவை அவளது முயற்சி தோற்றுப்போக, அவளைக் காப்பாற்றிய மருத்துவர் பரிவோடு அணுகியதில் அவளது தற்கொலை முயற்சிக்கான காரணம் வெளிவந்தது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றால் ஆபத்தில்லாமல் - அதே நேரத்தில் சுற்றம் சொந்தம் அறியாமலும் - குழந்தையைப் பெற்று அதனை அரச பாதுகாப்பில் ஒப்படைத்து விட்டுப் போகலாம் என்ற ஆலோசனையை அவர்தான் அவளுக்கு வழங்கினார்.

அவள் வயிற்றில் வளரும் கருவைக் கலைப்பதற்கு இனிமேலும் முயன்றால் அது இருவர் உயிருக்கும் ஆபத்து என்பதனால் இந்த மருத்துவர் அவளுக்கு அந்த ஆலோசனையை வழங்கினார்.

### அவளின் கதை

அவள் பெயர் குமுதா (இன்னமும் இலங்கையில் இருக்கும் அவளது பெற்றோரின் பாதுகாப்புக் கருதிப் பெயர் மாற்றப் பட்டுள்ளது). 24 வயதுப் பெண். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவளது மாமா உயர் பொறுப்பில் இருந்தார். அதனால் அவளது குடும்பம் எப்போதுமே புலிகளுக்கு மிக நெருக்கமாகவே இருந்தது. அவர்களின் நடமாட்டம் வீட்டில் இல்லாத நாள் இல்லை என்று சொல்லலாம். போர் ஓய்ந்தபோது அவளது மாமா இறந்து போயிருந்தார். அவளது குடும்பம் மற்றைய எல்லாக் குடும்பங்களையும் போலவே, உயிரைக் கையில் பிடித்தபடி ஒருவாறு தப்பிப் பிழைத்து வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி தடுப்பு வேலிகளுக்குப் பின்னால் வந்து சேர்ந்தது. அங்கு துன்பங்களுக்குள் உழன்று கிடந்த ஒரு நாளில் அவளது கிராமத்தவர்களுக்கு விடிவு கிடைத்தது அவளும் பெற்றோரும் வன்னியில் உள்ள தங்கள் கிராமத்தில் மீளக்குடியமர்ந்தனர்.

“எங்கட சனங்களுக்குப் பொறாமை. மாமா இருக்கேக்க எங்கட வீட்டுக்கு இயக்கத்தில இருந்து நிறைய ஆக்கள் வாறவை. நிறைய வாகனங்கள் வரும். இயக்கம் ஆக்கள் பிடிக்கேக்கையும் கூட நான் வீட்டுக்கு ஒரே பிள்ளை என்றதால விட்டிட்டினம். ஆனால் மாமாதான் என்னைப் பிடிக்க விடாமல் தடுத்து வைச் சிருந்தவர் என்று சனங்கள் நினைச்சவை. அந்தப் பொறாமையில நான் இயக்கத்தில இருந்தனான் எண்டும் புனர்வாழ்வுக்குப் போகேல்லை எண்டும் ஆமிக்காரரிட்டைச் சொல்லிக் குடுத்துப் போட்டினம்.”

அதன் பிறகு குமுதாவின் வீட்டுக்கு அடிக்கடி இராணுவம் வந்துபோக ஆரம்பித்தது. விசாரணை விசாரணை என்று முகாமுக்கு அழைத்துப் போனார்கள் அவளை. அனேகமான நாள்கள், காலையில் போனால் மாலையில்தான் அவளால் வீட்டுக்குத் திரும்ப முடிந்திருக்கிறது.

இந்தத் தொல்லை தாங்க முடியாததால், வவுனியாவில் சென்று தங்க ஆரம்பித்தாள் குமுதா. அப்போதும் இராணுவத்தினர் அடிக்கடி அவளது வீட்டுக்குப் போய் அவள் எங்கே என்று விசாரித்தனர்.

“வவுனியாவில் வேலை செய்கிறாள்” என்று பதில் கூறி சமாளித்து வந்தனர் பெற்றோர். கிராமத்துக்கு வரும்போது அவரை விசாரணைக்காக முகாமுக்கு அழைத்து வரவேண்டும் என்று அறிவுறுத்திவிட்டுப் புறப்படுவர் வந்த இராணுவத்தினர்.

நான் பஸ்ஸால இறங்கி வீட்டுக்குப்போன ரெண்டு நிமிசத்தில வீட்டுப் படலையிக்க ஆமிக்காரர் சைக்கிளில வந்து நிப்பினம். கொமாண்டர் விசாரணைக்கு வரட்டாம் எண்டு கூப்பிடுவினம்.’ அப்படி அழைத்துச் செல்லப்பட்ட ஒரு நாளில் தான் அந்தக் கொடூரம் நடந்தது.

“நான் போனபோது முகாமுக்குள்ள வேற மூன்று பொம்பிளைப் பிள்ளையளும் இருந்தவை. ஆனால் பிறகு நான் கண்முழிச்சுப் பார்த்தபோது அவையள் அங்க இல்ல. இருண்டு போயிருந்தது?”

“இரண்டு தடவை தற்கொலை செய்யப் போனனான். காப்பாத்திப் போட்டினம். எனக்கு இந்தப் பிள்ளை வேண்டாம். என்ரை அப்பா, அம்மாவுக்கு இன்னும் இதைப் பற்றி ஒண்டும் தெரியாது. தெரிஞ்சா அதுகள் தற்கொலை செய்து போடுங்கள். அதுதான் இங்க டொக்டரிட்டைக் கேட்டு தலைமறைவா இருக்கிறன்.” அவளால் இயன்ற மட்டும் அவள் கூனிக் குறுகிக் கதறுகிறாள்.

### பெற்றோரின் சோகம்

குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்காக வைத்தியசாலையில் அவள் சேர்க்கப்பட்டிருந்த போதுதான் அவளை நான் முதன் முதலில் சந்தித்தேன். இரண்டாவது தடவை சந்தித்த போது அவள் குழந்தையைப் பெற்றிருந்தாள். ஆனால் அதன் மீது பற்றோ பாசமோ இன்றி இருந்தாள். அதனைத் தூக்கி எறிந்துவிடவேண்டும் என்ற ஆவேசத்தில் இருந்தாள். கூடவே அவளது பெற்றோரும் வைத்தியசாலைக்கு வந்திருந்தார்கள்.

விடயம் பெற்றோருக்குத் தெரிய வந்தமை எனக்கு ஆச்சரிய மூட்டியது. அவர்களிடம் இருந்து இந்த விடயத்தை மறைக்க அவள் எவ்வளவு முயன்றாள், அதற்காக எவ்வளவு துன்பங்களை அவள் தாங்கினாள் என்பதை நான் அறிவேன். இப்போது அவள் பட்ட துன்பம் எல்லாம் வீணாகி அவளது பெற்றோர் அவளுடன் கூட இருக்கிறார்கள். அவர்களுக்கு அனைத்தும் தெரிந்திருந்தது.எனது ஆச்சரியம் விலகாமலேயே நான் அவளின் பெற்றோரிடம் பேசினேன். திடீரென்று வீட்டுக்கு வந்த இராணுவத்தினர்தான் இந்த விடயத்தையும் போட்டுடைத்தார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

“ பிள்ளை ஆஸ்பத்திரியில இருக்கிறது தெரியாதோ எண்டு மிரட்டிச்சினம். எங்களுக்கு என்ன தெரியும்? தெரிஞ்சிருந்தாலும் உயிரோட இருந்திருக்க மாட்டம். இப்பவும் ஊருக்க தலை காட்ட ஏலுமே ! எல்லோருமாச் சேர்ந்து சாகிறது தான் ஒரே வழி.” இயலாமையின் பெரு வெடிப்பாக தந்தையின் குரல் உடைந்து ஒலிக்கிறது. வார்த்தைகள் வெளிவராமல் வாயைப் பொத்திக் கேவியபடியே அமர்ந்திருக்கிறார் தாயார்.

### பொலிஸாரின் கடமை உணர்வு

இடையில் என்ன நடந்தது? இதுதான் என்னைக் குடைந்த கேள்வி.

பதில்: போதனா வைத்தியசாலையில் பிறக்கும் ஒரு குழந்தையை தாயார் வேண்டாம் என்று கூறி அரச பாதுகாப்பில் ஒப்படைப்பதென்றால், அது நீதிமன்றத்தின் ஊடாகவே நடக்க முடியும். குமுதாவின் பிரச்சினை நீதிமன்றத்தின் கவனத்துக்குப் போன உடனேயே, இது பற்றி விசாரணை செய்யுமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இராணுவத்தினர் தொடர்புபட்டுள்ளனர் என்பதாலோ என்னவோ பொலிஸாரும் இந்தப் பிரச்சினையில் கடும் ஆர்வம் காட்டியுள்ளனர். குமுதா சேர்க்கப்பட் டிருந்த பெண்கள் விடுதிக்கு சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட பொலிஸார் குழுவாக வந்து விசாரணை என்ற பெயரில் நீண்ட நேரம் அவளைச் சுற்றி வளைத்துக் கேள்வி மேல் கேள்வி கேட்டனர்.

தொடர்ந்து இரண்டு நாட்கள் இந்த மன உளைச்சல் தரும் நடவடிக்கை தொடர்ந்தது. அதற்கிடையில் பொலிஸாரால் இது குறித்து குமுதாவின் கிராமத்தில் இருந்த இராணுவத்தினருக்கும் தகவல் தரப்பட்டது. அவர்கள் அவளது வீடுக்கு ஓடினர். இராணுவம்தான் சம்பந்தப்பட்டது என்றால் தங்களிடம் சொல்லாமல் ஏன் பொலிஸிடம் போனீர்கள் என்று பெற்றோரைக் கேள்விகளால் துளைத்தனர்.

அடியும் தெரியாது நுனியும் தெரியாது திகைத்த குமுதாவின் பெற்றோருக்கு பிரச்சினை புரிய நீண்ட நேரம் எடுத்தது. மகள் வைத்தியசாலையில் என்றதும், அவளுக்கு என்னவோ ஏதோ என்று பதறியடித்தபடி ஓடி வந்தவர்களுக்குத் தலையில் இடி இறங்கியது. ஆனால், அதற்கிடையில் சூழ்நிலையைக் குமுதா வென்றிருந்தாள்.

ஆம் ! இந்தப் பிரச்சினையைத் தான் தொடர விரும்பவில்லை என்றும் இந்தப் பிரச்சினையில் தொடர்புபட்டதாக தான் கூறியிருக்கும் இராணுவத்தினர் மீது எந்த நடவடிக்கையையும் மேற்கொண்டு எடுக்கத் தான் விரும்பவில்லை என்றும் இந்த வழக்கைத் தொடர்வதற்குத் தான் விரும்பவில்லை என்றும் அவள் பொலிஸாரிடம் எழுதிக் கொடுத்தாள். இரண்டு நாளாக பொது விடுதியில் அவளை உளரீதியாக நெருக்கித் தள்ளி வந்த பொலிஸார், தங்கள் கடமை வெற்றிகரமாக முடிந்தது என்ற மகிழ்வோடு அங்கிருந்து வெளியேறினர்.

“பிள்ளையை என்னை வளர்க்கச் சொல்லியும் அதுக்குத் தாங்கள் தேவையான உதவி எல்லாம் செய்யிறம் எண்டும் என்னைக் கேட்டவை?.” குனிந்திருக்கும் முகத்திலிருந்து சொட்டுச்சொட்டாக மீண்டும் நிலத்தை நனைக்கிறது அவளது கண்ணீர்.

அதன் பிறகு குமுதா என்ன ஆனாள், அவளது பெற்றோர் என்ன ஆனார்கள் என்று அறியமுடியவில்லை. பொலிஸாருக்கு எழுதிக் கொடுத்த சில நாள்களில், தான் பெற்ற அந்த வேண்டாக் குழந்தையை அரசிடம் ஒப்படைத்துவிட்டு, வைத்தியசாலையை விட்டு அவள் வெளியேறி இருக்கிறாள் என்பதற்கான பதிவு மட்டுமே அங்கிருக்கிறது. மீண்டும் ஒரு தடவை அவளையோ அவளது பெற்றோரையோ என்னால் சந்திக்க முடியவில்லை.

குமுதாவின் சோகம் போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்து நடந்தது. 2011ஆம் ஆண்டு பிற்பகுதியில் அவள் நாளாந்தம் கண்ணீர்விடத் தொடங்கினாள். 2012ஆம் ஆண்டின் நடுப் பாகத்தில் அவள் போதனா வைத்தியசாலையில் இருந்து அழுதழுதே வெளியேறி னாள். அதன் பின்னர் என்ன ஆனாள்?

ஒருவேளை குமுதாவையும் ஐ.நா. விசாரணைக் குழு கண்டறிந்திருக்குமா? அவளிடமும் வாக்குமூலம் பெற்றிருக்குமா? அவள் எங்கிருக்கிறாள் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்குமா?

*நன்றி: யாழ் உதயன் ஞாயிறு பதிப்பு (சூரியகாந்தி)*



# ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டமாம்..



**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு நல்ல கொண்டாட்டம்! சின்னதாக இருக்கிற பிரச்சனையை நன்றாக ஊதிப்பெருக்க வைத்துவிட்டால், ஒன்றும் இல்லாத பிரச்சனைக்கு ஊர் இரண்டுபட்டு நிற்கும். இவர் வரும் கூட்டத்திற்கு அவர் வரமாட்டார், அவர் வரும் கூட்டங்களுக்கு இவர் வரமாட்டார். கூத்தாடிக்கு கொண்டாட்டம் ஒரு ஊருக்குள்ளேயே இரண்டு கூத்துப் போடலாம? காசும் வேண்டலாம், எம்மிடையேயும் பல கூத்தாடிகள் உலாவுகிறார்கள்! சரி தன்வயிற்றுப்பாட்டுக்குஎன்றுவிட்டாலும்,மொத்த ஊரின் நன்மை, தீமையிலாவது அக்கறை உள்ளதா என்றால் அதுவும் இல்லை.

அத்தை மகளுக்குப் பின்னாலும், முன்னாலும் திரிவது, அவள் சீ என்று சொன்னால், இந்தப்பழம் புளிக்கிறது என்ற பாணியில் கதை புனைந்து கொண்டு, மாமன் மகளின் வாசலில் போய் பல் இளிப்பது மொத்ததில் இரண்டு பேரிலும் உண்மையான அன்பில்லை, யாரோ ஒன்று இலகுவாக விழுந்து, தனக்கு கல்யாணம் நடந்தால் சரி, ஊருக்குள் ஆள் கணக்கில வலம் வரலாம் என்று எண்ணுவது போல, சிலர் எங்களில் உள்ளார்கள்!இப்படிப்பட்ட கூத்தாடிகள் எம்மிடையே உள்ளதால்தான் எமது ஊர் இரண்டல்ல, நாலாக பிளவுபட்டுள்ளது. இவர்கள் சேரவும் விடமாட்டார்கள்.

இவர்களுக்குள் ஊடகக் கூத்தாடிகளும் அடக்கம். ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தல் (Constructive Criticism), மற்றும் உண்மைகளை வெளிக்கொணர்தல் என்பது வேறு. தன்னுடைய தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காக ஊடகத்தை ஒரு ஆயுதமாக பாவித்தல்என்பதுவேறு. தாராளண்மை வாதத்தின் கீழ் எல்லாமே தாராளமாக உலாவுவதால் மக்கள் தான் தரம் பிரிந்து அறியவேண்டும். இன்னுமொரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எம்மிடையே பல தரப்பட்ட போராட்ட வடிவங்களில் பலதரப்பட்டவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். எல்லோருமே ஒரு இலக்கை அடைவதற்கு வேறு வேறு பாதையில் பயணிப்பவர்களாக இருந்தால் நல்ல விடையம்.விளையாட்டு,கலைபண்பாடு,ஊடகம், அமைப்புகள் என்று எதை எடுத்துக்கொண்டாலும் அதற்கு இது பொருந்தும்.

ஆனால் சிலந்திக்கு வலை எளிது, தூக்கணாம்குருவிக்கு அதன் கூட்டை கட்டுதல் எளிது. என்று ஒவ்வொருவருக்கும் சில சில விடையங்கள் இலகுவாக செய்ய முடிவது, மற்றவர்களுக்கு மலையை பிரட்டிப் போடும் விடையமாக இருக்கும். அவர் இதைச்செய்கிறதை விட்டு விட்டு அதைச்செய்யலாம் தானே, அல்லது அவர் இதை செய்வதோடு, அதையும் சேர்த்து செய்யலாம் தானே என்று இலகுவாக ஒன்றையும் செய்யாமல் வெளியே இருந்து சொல்வது சுலபம், உள்ளுக்குள் நின்று பார்த்தால்தான் அதன் கடினம் புரியும். இதைத்தான் ஊரில் கழுதை செய்கிற வேலையை கழுதை செய்ய வேண்டும், நாய் செய்கிற வேலையை நாய் செய்ய வேண்டும் என்று சொல்வார்கள், கழுதை நாய் வேலையை செய்ய வெளிக்கிட்டால், கடைசியில் வழக்கமாகச் செய்கிற வேலையைக் கூட ஒழுங்காக செய்ய முடியாமல் போய்விடும்.

இதைவிட எல்லா நாயும் காவல் காக்கும் என்பதுவும் இல்லை. சரியா ஆளை, சரியான பதவிக்கு தெரிவு செய்யும் பணி மக்களைச் சார்ந்தது. காவலுக்குத்தானே, நாய்தானே வேணும் இதோ இருக்கிறதே என்று ஒரு நாயைக் கொண்டு வந்து விட்டால், அது சப்பாத்துக் காலை ஒருக்கால் சத்தம் வர நிலத்தில் தேய்த்தால் போதும், பின் இரண்டு கால்களுக்கும் இடையில் தன் வாலை மடக்கிக் கொண்டு ஒரே ஓட்டமாக போய் சேர்ந்து விடும். ஓடுகிற நாயை பிடித்துக்கொண்டு வந்து, இல்லை இதுவும் நாய்தானே, என்று காவல் காக்கத்தானே வேணும் என்றும், இதற்கு பயிற்சி காணது, பழகப்பழகச் சரியாகிவிடும், என்ற கணக்கில் சில பதவிகளில் சிலரை வைத்து, நாமும் கடினப்படுகின்றோம், அவர்களும் முடியாவிட்டாலும், விடாமல் பெயருக்காக குத்திக் கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவு பயிற்ச்சி கொடுத்தாலும் சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வருவதற்கு அது ஒருநாளுமே காவலுக்கு உரிய நாய் ஆகிவிட முடியாது. இல்லாததை கொண்டு வா என்றால் எங்கிருந்து கொண்டுவருவது.

ஆகவே யாரை எதற்குத் தேர்ந்தெடுக்கின்றோம் என்பதிலும் உள்ளது. அவரவர்களை அவர்களின் திறமைகளை அடையாயம் கண்டு அதற்குரிய பணிகளின் விட்டால் சுபம்.

சோவியத் யூனியன் வரை கொள்கை விளக்கம் கொடுத்து, துார நோக்குத்திட்டம் அது இது என்று, நடைமுறை வாழ்க்கையில் ஒரு நாலு பேருடன் சேர்ந்து ஒரு விடையம் கூடத் செய்யாதவர்கள், அடுகிக்கொண்டு போகலாம், மக்கள் போராட்டம் என்பது இலகுவானதொன்றல்ல. நாங்கள் மக்கள் போராட்டங்களை வலுப்பெறச் செய்யவேண்டும். மக்களை சிலர் தவறுதலாக விளங்கிக் கொள்கிறார்கள். $100, 150 நுழைவு சீட்டும், மேசை நிறைச்சாப்பாடும், கோட்டு சூட்டுடன் வரவேண்டும் என்றால்தான் மக்கள் முன்வருவார்கள் என்றில்லை. இது நாட்டில் உள்ள மக்களுக்கும், இங்குள்ள மக்களுக்கும் இடையிலான இடைவெளியை இன்னும் அகலமாக்கும் விடையம். அதிலும் முக்கியமாக, தமிழ் ஈழக்கோரிக்கையில் உறுதியாக நிற்பதாகச் சொல்லிக் கொள்ளும் அமைப்புக்களுக்குச் செய்வதற்கு என நிறை வேலைகள் உள்ளன.

மற்றைய நாடுகளில் நடக்கும், (Saturday Mothers of Turkey: 17 Years of Silent Protest) நடந்த போராட்டங்களை, முக்கியமாக தாய்நாட்டுக்கும், எமக்கும் உள்ள உணர்வுகளை இணைக்கும், அதே வேளைகளில் நடக்கும் அவலங்களை வெளிக்கொணரும் விடயங்களை போராட்ட வடிவமாக்கினால், என்ன செய்வது என்று தெரியாமல் 1999ம் ஆண்டில் நிறுவப்பட்ட NLP கட்சியை, இரண்டு வருடங்களுக்கு முன் எமது தேசியக்கொடியை ஏற்றுக்கொண்டு நிறுவப்பட்டது என, வீணாக அதிலும் போட்டியிட்டு சக்தியை விரையம் செய்யும் MP மாருக்கும், வேலை கொடுப்பதாக இருக்கும்.


MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.


Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions




OM SAI SHAKTHI ASTROLOGY CENTRE

Pandit Eswar
Indian Astrologer & Herbal Ayurvedic Specialist
பிரபல மந்திரிமார்களுக்கும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, சொல்லுவார்.
குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், கணவன், மனைவி, காதலர் ஒற்றுமைப் பிணக்குகள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், காதல் விவகாரங்கள், தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம், வாகன மனைப் பொருத்தங்கள், விசாப் பிரச்சினைகள், கோட்டு வழக்குகள், ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும், பேய் பிசாசு தொந்தரவா, நாக தோஷம் உங்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்
பெண்களின் முகத்தில் வளரும் முடிகளை ஆயுர்வேத முறைப்படி 2 – 3 மாதங்களில் அகற்ற முடியும். எந்த விதமான பிரச்சினை என்றாலும் ஆயுர்வேத வைத்தியம் மூலம் குணமாக்க முடியும். வெற்றிலையில் மை போட்டு நடந்தவை நடந்து கொண்டிருப்பவை நடக்க இருப்பவை என்பன துல்லியமாக கணித்துச் சொல்லப்படும்.

25 வருட அனுபவத்துடன் அனைத்து விதமான நோய்களுக்கும் மூலிகை சிகிச்சை வழங்கப்படும்.
Office Hours : 7 Days a Week 10:00 AM - 08:00 PM
Any Problems cleared within 9 days - Famous through 9 Generations
07405908271
07729202680
163, Rushey Green
Catford, SE18 4BD
Next door to Natwest

# ஒரு குளோனிங் (Cloning) விடுதலை அமைப்பை உருவாக்குதல் சாத்தியமா.....



**ச.ச.முத்து**

வெகு அண்மையில் வெடிவைத்தகல் பகுதியில் மூன்று தமிழ் இளைஞர்களை சிங்களப் படைகள் சுட்டுக்கொன்ற பின்னர் தமிழர்கள் மத்தியில் குறிப்பாக ஊடகப்பரப்பில் ஒரு பெரும் ஆய்வு எழுந்துள்ளது... தெய்வீகன், அப்பன், கோபி போன்றோர் கொல்லப்பட்ட பின்னர் ஊகங்களும் புரளிகளும் வதந்திகளும் பலவேறு வடிவங்களில் பல்வேறு கோணங்களில் இறக்கைகட்டி பறக்கத் தொடங்கிவிட்டன. தமிழீழத்துக்கான ஒரு விடுதலைஅமைப்பை சிங்களமே, அதிலும் கோத்தபாயாவே அவரின் நேரடி கண்காணிப்பில் உருவாக்கியுள்ளார் என்பதே அந்த ஊகங்கள் முழுவற்றின் ஒரே சாரமாகும்.

ஒரு திறந்தவெளி ராணுவமுகாமுக்குள் முழுத்தமிழினத்தையுமே சிறைவைத்திருக்கும் சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழர்கள் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற இவர்களின் நினைப்பும் எத்தனமும் தூய்மையானது என்று புரிகிறது...அது மட்டுமே இப்போதைக்கு.

இனி விடயத்துக்கு வருவோம்..

அது சாத்தியமா... அப்படி ஒரு குளோனிங் விடுதலைஅமைப்பை போலியாக சிங்களத்தின் ஏவலுடன் உருவாக்கினாலும்கூட அது எமது மக்கள் மத்தியில் எடுபடுமா...நீடித்து நிற்குமா என்பனவற்றை மேலோட்டமாக பார்ப்பதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும்.

குளோனிங் விடுதலைஅமைப்பு என்பது ஒரு உண்மையான விடுதலை இயக்கம்போன்றே எதிரி செயற்கையாக உருவாக்கும் 'டம்மி' அமைப்பாகும்.

2009மே மாதத்தில் தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டத்தை அழித்தெறிந்துவிட்டதாக சிங்களம் பிரகடனம் செய்தாலும் சிங்கள ஆட்சியாளர்களின் மனதுள் ஒரு பயம் எப்போதும் எழுந்துகொண்டே இருப்பது இயல்பாகும். 1975ல் இருந்து 2009 மே வரையான காலப் பகுதியில் ஒரு அச்சநிலைக்குள் சிங்கள தேசம் வாழ்ந்ததை மீண்டும் அவர்கள் விரும்பமாட்டார்கள். அதற்காக மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் உருவாவதை எப்படியாவது தடுப்பதில் அவர்கள் மிகவும் குறியாக இருப்பார்கள்.

இப்படியான போலி அமைப்புகளை உருவாக்கி மக்களை குழப்பி இறுதியில் எதுவுமே தேவையில்லை என்று மக்களைச் சோர்வடைய வைப்பதே அவர்களது நோக்கம்.

தமிழீழ தாயக கோட்பாட்டை அழிப்பதில் சிங்கள தேசம் நடாத்தும் போர் என்பது தனித்து படைகளால் மட்டும் நடாத்தப்படுவது அல்ல. தமிழ் மக்களின் உளவியலை சிதைக்கும் ஒவ்வொரு முறையையும் அது நாற்பதுவருடங்களாக செயற்படுத்தியே வந்துள்ளது. இந்தப் பரிணாம வளர்ச்சியை பார்க்க வேண்டுமானால், 1970ல் இருந்து 1999 வரை சிங்கள ராணுவத்தில் பல பிரிவுகளில் செயற்பட்டு, முக்கியமான புலனாய்வு பொறுப்புகளில் இருந்த மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க எழுதிய 'ஒரு போர் வீரனின் பார்வை' நூலைப் படித்தால் தெரிய வரும்.

முதலில் தமிழ்மக்கள் மத்தியில் தகவல் கொடுப்பவர்களை வைத்து போராட்டத்தை அழித்துவிடலாம் என்று செயற்படும் படைகள் அது முடியாமல் போகும்போது புதிது புதிதான முறைகளை பிரயோகிப்பர். இந்த முறைகளில் சிங்களத்தின் ஆசானாக இந்தியாவே இருக்க முடியும். வேறு யாருக்கு அந்த தகுதி உண்டு..?

உலகில் விடுதலைஅமைப்புகளையும் புரட்சிகர இயக்கங்களையும் ஒடுக்குவதில் அழித்தெறிவதில் அதிக அனுபவம் வாய்ந்த தேசம் எது என்றால் எல்லோரும் அமெரிக்கா என்றே கண்ணைமுடிக்கொண்டு சொல்வார்கள். ஆனால் அமெரிக்காவைவிட அதிக அனுபவமும் பட்டறிவும் இந்த விடயத்தில் இந்தியாவுக்கு உண்டு.எத்தனை விடுதலை போராட்டங்களை, புரட்சிகளை ஒடுக்கி அதன் மீது ஒற்றை தேசம் ஒன்றை கட்டி இருக்கிறார்கள். பிரித்தானியர் வருகைக்கு முன்னர் பல நூறு பிரிவுகளாக சமஸ்தானங்களாக இருந்த நிலமே இந்தியா.

அது சுதந்திரம் அடைந்தது கூட ஒரு பெரிய பிரிவினையுடன்தான்... சுதந்திரத்தின் மறு நாளே இந்தியாவின் நெஞ்சுப்பகுதியில் இருந்த சிறுநிலப்பரப்பான ஹைதராபாத் தான் ஒரு போதும் இந்தியாவின் ஒரு அங்கம் அல்ல என்றும் ஹைதராபாத் தனிநாடே என்றும் பிரகடனம் செய்ததும் அதனை 1948 செப்டம்பரில் இந்தியராணுவத்தை அனுப்பி மீட்டதும் அதன் பின்னர் திராவிடநாடு தொடங்கி மிசோரம் வரை தனியாக பிரிந்துசென்று தேசம் அமைக்கும் போராட்டங்களை நடாத்தியதுமான ஒரு வரலாறும் அதனை பல பல வடிவங்களில் இந்திய மத்திய அரசு அடக்கியதும் எந்தவொரு தேசத்திலும் இப்படியான படிப்பினைகள் அதன் படைகளுக்கும் அதன் புலனாய்வு அமைப்புக்கும் கிட்டி இருக்காது. அந்த அனுபவங்களில் மிக முக்கியமானது போலியான அமைப்புகளை உருவாக்கிக் குழப்புதல் இறுதியில் இலட்சியத்தை அழித்து மக்களை மறக்க செய்தல் என்பதே ஆகும்.

அசாமின் விடுதலைக்கான போராட்ட அமைப்பின் வீரியத்தை குறைப்பதற்காக அசாம் கன பரிசத் அமைப்பை உருவாக்கியதும் அந்த முரணுக்குள் அசாம் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் நடாத்திய உல்பாவை இன்னும் செயலற்றதாக்கியதும் இறுதியில் உல்பா நான்கு வருடங்கு முன்னர் தமது தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டதும் ஒரு சிறு உதாரணமே.

இதனைப் போன்று காலிஸ்தான் போராட்டத்திலும் போலியாக ஒரு அகாலிதள் அமைப்பை உருவாக்கியதும் இன்று காலிஸ்தான் கோரிக்கையை நீர்த்துப்போக செய்துள்ளதும் உதாரணமே.

இந்த பாடங்களை கற்றுக்கொண்ட சிங்களம் அதனை இப்போது எம்மீது நடைமுறைப்படுத்த முயல்கிறது.

ஒரு போலி விடுதலைஅமைப்புக்கு ஆயுதங்களை, தாக்குதல் இலக்குகள் பற்றிய தரவுகளை, நிதியை கொடுப்பதால் மட்டும் அது வெற்றி பெற்றுவிடமுடியாது.

ஆயினும் மக்களின் ஆதரவு என்ற ஒரே பலம் தான் ஒரு விடுதலைஅமைப்பின் உயிர்நாடி என்பதால் ஒரு போலி விடுதலைஅமைப்பு மக்களின் மனங்களை வெல்வது ஒருபோதும் முடியாது என்பதால் இந்த முறை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் காணப்படும் என்பது உறுதி. நீடித்த காலத்துக்கு ஒரு போலி அமைப்பு சாத்தியமே இல்லை.

அதிலும் கடந்த முப்பதுவருடங்களாக ஒரு உன்னதமான அர்ப்பணிப்பு நிறைந்த விடுதலைப்போராட்டத்தை தமது கண்களால் கண்டிருந்த மக்களுக்கு இருக்கும் மோப்ப சக்தி எது உண்மையானது எது போலியானது என்பதை தெரியப்படுத்திவிடும்... சாத்தியம் இல்லை என்பதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. சிங்களம் உருவாக்கும் குளோனிங் விடுதலைஅமைப்பின் முக்கிய செயற்பாடே உண்மையான போர்க்குணம் மிக்கவர்களை அடையாளம் கண்டு சிங்களபடைகளுக்கு அறிவித்து அழிப்பது ஆகும்.

வான்வரை எழுந்து பறந்த இந்த விடுதலைப் போராட்டம் அழிக்கப்பட்டதற்கு பெரும் துரோகமே காரணம் என்றே சாதாரணமக்கள் நம்புகிறார்கள். இதனால் ஒருவிதமான சந்தேக பார்வை ஒருவர்மீது ஒருவருக்கு தமிழீழ தேசியம் முழுதற்கும் எழுந்துமுள்ளது...சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிரான போர்க்குணத்தை எவருடனும் பகிர்ந்துகொள்ள அஞ்சும் ஒரு நிலையே தாயகத்திலும் புலத்திலும் நிலவுகிறது.

> **சிங்களபேரினவாதமோ, அல்லது இந்திய வல்லாதிக்கமோ தமது நலன்களை நீண்ட காலத்துக்கு பேணுவதற்காக நவீனஆயுதங்களுடன், மிகப்பெரிய ஊடக வெளிச்சத்தில், விளம்பரங்களுடன் ஒரு போலி விடுதலை அமைப்பை உருவாக்கலாம்.. ஒரு போதும்.... ஒரு தலைவனை உருவாக்க முடியவே முடியாது...**

இந்நிலையில் இந்த போலி விடுதலை அமைப்புகள் தமது கருத்துகளை மக்கள் மத்தியில் வீசி அதில் அகப்படும் உண்மையான போர்க்குணம் மிக்கவர்களை அடையாளம் காண எடுக்கும் முயற்சி நிச்சயம் எடுபடாது...

இறுதியாக ஒன்று...

தமிழினத்தை பொறுத்தவரையில் அவர்கள் மிகவும் நேர்மையான,வீரமிக்க, வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத ஒரு தலைவனை கண்டவர்கள்... அவரை சூரியதேவனாக, கடவுளாக கூட அவர்கள் உருவகிக்கும் அளவுக்கு அவரின் ஆளுமை எல்லோர் மனங்களுள்ளும் நிறைந்திருக்கும்.

சிங்களபேரினவாதமோ, அல்லது இந்திய வல்லாதிக்கமோ தமது நலன்களை நீண்ட காலத்துக்கு பேணுவதற்காக நவீனஆயுதங்களுடன், மிகப்பெரிய ஊடக வெளிச்சத்தில், விளம்பரங்களுடன் ஒரு போலி விடுதலை அமைப்பை உருவாக்கலாம்.. ஒரு போதும் ஒரு போதும். ஒரு தலைவனை உருவாக்க முடியவே முடியாது.

ஏனென்றால் தமிழர்கள் உண்மையான ஒரு தலைமையை, தலைவன் ஒருவனின் விஸ்வரூபத்தை கண்டவர்கள்..குளோனிங் அமைப்பு அந்த தலைமையின் கால் பெருவிரல் நகம் அளவுக்குகூட இருக்காது.

தலைமை என்பது எப்படி இருக்க வேண்டும் என்று கண்டவர்கள்.. அது இன்னொருவரால் உருவாக்கப்படும் பொறுப்பு அல்ல.. அதனை உருவாக்கும் வல்லமை வரலாறு ஒன்றுக்கே உண்டு.. ஆக, குளோனிங் அமைப்பு உருவாகி வெளிவந்தவுடனேயே சாயம் களன்றுவிடும்... அது சாத்தியமே இல்லை.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter


அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# மோடியுடன் மோதவிருக்கும் பிரச்சினைகள்




**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக நரேந்திர மோடியின் இந்தியப் பாராளுமன்றத்தின் மக்களவைக்கான தேர்தல் வெற்றி அமைந்துள்ளது. எதிரியின் தன்னம்பிக்கையை சிதறடிக்கும் வெற்றியாக மோடியின் வெற்றி அமைந்துள்ளது. காங்கிரசுக் கட்சி முதன்மை எதிர்க் கட்சியாக வருவதற்கே சிரமப்படுகின்றது. மாமிசம் உண்ணாத, புகைப்பிடிக்காத, மது அருந்தாத, தாய்மீது அதிக விருப்பமுள்ள, திருமணமாகியும் பிரம்மச்சாரியாக இருக்கும் மோடி இந்தியாவின் தலைமை அமைச்சராகின்றார். நவராத்திரிக்கு ஒன்பது நாளும் உபவாசம் இருக்கும் மோடி ஒரு கவிஞர். சிறந்த பேச்சாளர். நிறைய நகைச்சுவை உணர்வுள்ளவர். மோடி ஒரு புகைப்படக் கலைஞர். ஒரு புகைப்படக் கண்காட்சி கூட மோடி நடாத்தியுள்ளார். குஜராத் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவனாக முதுமானிப் பட்டம் பெற்றவர் மோடி, அவர் கடின உழைப்பாளி. நாளொன்றிற்கு நான்கு மணித்தியாலம் மட்டுமே அவர் தூங்குவார்.

குஜராத்தின் முதலமைச்சராக இருந்து அதை தான் முன்னேற்றியதாகச் சொல்லும் மோடி குஜராத்தைப் போல இந்தியாவையும் முன்னேற்ற தனக்கு வாய்ப்புக் கொடுக்கும் படி இந்திய வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார். முப்பதாயிரம் கோடி ரூபாக்களுக்கு மேல் செலவு செய்து தேர்தல் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்திய மக்கள் இந்தியப் பெரு முதலாளிகளின் நலன்களை யார் பாதுகாப்பது என்பது பற்றி தேர்தல் மூலம் முடிவெடுக்கும் அதிகாரம் உடையவர்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களாட்சி முறைமையிலான தேர்தல் என்னும் பெயரில் இந்திய மக்கள் புது டில்லியில் உள்ள மக்களவைக்கும் 28 மாநிலங்களில் உள்ள் சட்ட சபைகளுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்து எடுப்பார்கள்.தேர்தல் முடிவுகளை கட்சிகள் செய்யும் பரப்புரைகள் முடிவு செய்யும். பரப்புரையின் வலுவும் திறனும் கட்சிகளுக்கு இந்தியப் பெரு முதலாளிகளிடமிருந்து கிடைக்கும் பணத்தால் நிர்ணயிக்கப்படும். அம்பானிகளும் அடானிகளும் மோடியை வெல்ல வைத்தார்களா? இந்த மோடி எதிர் கொள்ள விருக்கும் பிரச்சனைகள் என்ன?

### ◆ சாதி

இந்தியத் தேர்தலில் சாதி முக்கியமான ஒன்றாகும். வேட்பாளர் தெரிவில் கட்சிகள் சாதிக்கு முக்கியத்துவம் கொடுத்தன. அரசியல் ஆய்வாளர்கள் தேர்தல் முடிவுகளைப் பற்றி எதிர்வு கூறும் போது அந்த அந்தத் தொகுதிகளில் இருக்கும் சாதிகளை வைத்தே தமது கணிப்பீடுகளை மேற்கொண்டார்கள். மோதி இந்தியச் சட்டப்படி மற்ற பிற்பட்ட வகுப்பினர் என்னும் சாதியைச் சேர்ந்தவர். சுதந்திரத்திற்குப் பின்னரான இந்தியாவின் 67 ஆண்டு கால வரலாற்றில் 51 ஆண்டுகள் இந்தியத் தலைமை அமைச்சராக இருந்தவர்கள் பார்ப்பனர்களே. இத்தனைக்கும் இந்தியாவின் மக்கள் தொகையில் பார்ப்பனர்கள் 5 விழுக்காடு மட்டுமே. லால் பகதூர் சாஸ்த்திரி, சரண் சிங், வி. பி. சிங், எச் டி. தேவ கவுடா, இந்தர் குஜரால் ஆகிய பார்ப்பனர் அல்லாதோர் இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்த மொத்தக் காலம் நான்கு ஆண்டுகள் மட்டுமே, பத்து ஆண்டுகள் பெயரளவில் மன் மோஹன் சிங் தலைமை அமைச்சராக இருந்தார். எல்லா பார்ப்பன தலைமை அமைச்சர்களும் தமது பதவிக் காலத்தை முழுமையாக முடித்தனர். புது டில்லி நிர்வாகக் கட்டமைப்பில் பார்ப்பனர்களி ஆதிக்கம் அதிகம். அவர்கள் பார்ப்பனர் அல்லாத ஒருவரை தலைமை அமைச்சராக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இப்படிப் பட்ட புது டில்லியில் ஒரு பிற்படுத்தப் பட்ட சாதியைச் சேர்ந்த நரேந்திர மோடி எப்படிச் சமாளிக்கப் போகிறார்? கடைந்து எடுத்த படு பிற்போக்கு வாதியும் தமிழின விரோதியுமான சோ இராமசாமி தனது எங்கே பிராமணன் நிகழ்ச்சியில் ஆட்சி செலுத்துபவர் யாராகவும் இருக்கலாம். ஆனால் ஆட்சி பார்பப்னர்களின் ஆலோசனைப்படி தான் நடக்க வேண்டும் எனச் சொல்லியதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

### ◆ சிவப்பு நாடா

சில வாசகர்களுக்காக சிவப்பு நாடா என்றால் என்ன என்பதைப்பற்றி இங்கு விளக்குவது நல்லது. சிவப்பு நாடா என்பது அரச நிர்வாகத்தில் சிறந்த விரைவான செயற்பாடுகளுக்கும் முடிவெடுத்தலுக்கும் சட்டங்கள், நெறிக் கோவைகள், படிவங்கள் போடும் தடைகளாகும். குஜராத்தில் மோடியின் ஆட்சியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது 'முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் மட்டுமே! சிவப்பு நாடா இல்லை !' என்ற வாசகமே. டாட்டா நிறுவனம் தனது சிறிய ரக நனோ கார்களை முதல் மேற்கு வங்கத்தில் உற்பத்தி செய்யத் தொடங்கியது. அங்கு நிலப்பிரச்சனை ஊதியப் பிரச்சனையால் அதை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. ரதான் டாட்டவிற்கு மோடி தனது கைப்பேசியில் ஒரு குறுந்தகவல் அனுப்பினர்: குஜராத் உங்களை வரவேற்கின்றது என்று. இந்த இரண்டு சொற்களும் குஜராத்திற்கு அதிக அளவில் முதலீடுகளைக் கொண்டு வந்தன. முதலில் டாடா வர அதைத் தொடர்ந்து போர்ட், பேர்ஜோ, மாருது சுசுக்கி போன்றமுன்னணிக் கார் உற்பத்தி நிறுவனங்கள் குஜாராதில் தமது உற்பத்திகளைத் தொடங்கினார். ரதான் டாட்டாவிற்குத் தேவையான காணியை மோடி ஒரு சில தினங்களுக்குள் ஒதுக்கிக் கொடுத்தார். முதலீட்டாளர்களுக்கு சிவப்பு நாடா இல்லை சிவப்புக் கம்பளமே இதுதான் மோடியின் தாரக மந்திரமாக இருந்தது இதுதான் மோடியின் இரகசியம்.மோடி தலைமை அமைச்சராக வரும் வாய்ப்பு உள்ளது என்றவுடன் இந்தியாவிற்கு முதலீடுகள் ஏற்கனவே பாயத் தொடங்கிவிட்டன. இந்திய ரூபாவின் மதிப்பு உயர்ந்துள்ளது. இந்தியப் பங்குச் சந்தைச் சுட்டேண் வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. ஆனால் உலகிலேயே மோசமான சிவப்பு நாடாவைக் கொண்டுள்ள இந்திய ஆட்சி நிர்வாகத்தை மோடி எப்படிக் கையாளப்போகிறார் என்பது பெரும் கேள்வி.

### ◆ குடியரசுத் தலைவர்.

இந்தியாவின் தற்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முஹர்ஜீ காங்கிரசுக் கட்சியில் இருந்து வந்தவர். இந்திய அரசில் குடியரசுத் தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையிலான உறவு அவசியமான ஒன்று. இந்தியக் குடியரசுத் தலைவர் பதவி என்பது ஒரர வெறும் இறப்பர் முத்திரை என விமர்சிக்கப்பட்டாலும் அவரால் பாராளமன்றத்தினதும் அமைச்சரவையினதும் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்க முடியும். சோனியா-மன்மோஹன் அமைச்சரவை அனுப்பிய அரச ஆணை ஒன்றிற்கு விளக்கம் கோரி பிரணாப் முஹர்ஜீ அதைத் திருப்பி அனுப்பி இருந்தார்.

### ◆ சங் பரிவாரமும் உள்கட்சிப் போட்டியும்

மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி ஆர்.எஸ். எஸ் எனப்படும் ராஸ்ட்ரிய சுயம்சேவக் சங்கம் எனப்படும் இந்து அமைப்பின் ஒரு பிரிவாகும். 1925-ம் ஆண்டு உருவாக்கபட்ட இந்த அமைப்பை பிரித்தானிய குடியேற்ற அரசு ஒரு தடவையும் சுந்திரம் பெற்ற இந்தியா மூன்று தடவையும் தடை செய்திருந்தன. 1963-ம் ஆண்டு நடந்த இந்திய சீனப் போரின் போது செய்த தொண்டுப் பணிகளால் இது பிரபலம் அடைந்தது. இதில் பல்வேறு பட்ட அமைப்புக்கள் உள்ளன. அவற்றைப் பொதுவாக சங் பரிவார் என வட இந்தியாவில் அழைப்பார்கள். மோடியின் தேர்தல் வெற்றிக்கு இந்த சங் பரிவாரம் பெரும் பங்காற்றியது. அவற்றில் விஸ்வ ஹ்ந்து பரிஸத்தச் சேர்ந்த பலருக்கு மோடியைப் பிடிக்காது என்று சொல்லப்படுகின்றது. அத்துடன் சிவ சேனா அமைப்பும் இந்தப் பரிவாரங்களில் ஒன்றாகும். பிராந்தியவாதத்தையும் மதவாதத்தையும் முன் வைக்கும் இந்த அமைப்பு மும்பாயைத் தலை நகராகக் கொண்ட மஹராஸ்ட்ரா மாநிலத்தில் பாஜக கூட்டணியில் தேர்தலில் போட்டியிட்டு 18 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இது மும்ப்பாய் நகரில் குழப்பங்களை கலவரவங்களை அடிக்கடி செய்வதுண்டு. மோடியின் ஆட்சியில் இது என்ன குளப்படிகளைச் செய்யப் போகின்றதோ. மோடி எல் கே அத்வானி, சுஸ்மா சுவராஜ், முர்ளி மனோஹர் ஜோஸி ஆகியவர்களை ஒரு புறம் தள்ளி தலைமை அமைச்சர் வேட்பாளராக வந்தவர். எல் கே அத்வானிக்கு அவைத் தலைவர் (சபாநாயகர்) பதவியைக் கொடுத்து மோடி சாமாளிக்கப் போகிறார் என்ற செய்தி வந்தது. ஆனால் சுஸ்மா சுவராஜ் தனக்கு நிதி, பாதுகாப்பு, உள் துறை, வெளியுறவுத் துறை ஆகியவற்றில் ஒன்றைத் தரும்படி அடம் பிடித்தார். எந்த ஒரு தலைமை அமைச்சரும் தனக்குப் போட்டியான ஒருவருக்கு படையினரை உள்ளடக்கிய பாதுகாப்புத் துறை அமைச்சுப் பதவியையோ அல்லது காவற் துறையை உள்ளடக்கிய உள் துறை அமைச்சுப் பதவியையோ கொடுப்பதில்லை. மோடியும் அப்படியே. நிதித் துறை ஏற்க்னவே வாஜ்பாய் அரசில் நிதி அமைச்சராக இருந்து சிறப்பாகச் செயற்பட்ட அருள் சோரிக்கோ அல்லது மோடியுடன் தேர்தலின் போது நெருங்கிச் செயற்பட்ட அருண் ஜெட்லிக்கோ வழக்கப்படவிருக்கிறது. இதையே முதலீட்டாளர்களும் விரும்புகின்றனர். சுஸ்மா சுவராஜ் வெள்யுறவுத் துறை அமைச்சராக வந்தால் அது ஈழத் தமிழர்களுக்கு உகந்தது அல்ல. மோடிக்கும் அது உகந்தது அல்ல. இதனால் சுஸ்மாவிற்கு மனிதவள மேம்பாட்டுத் துறை வழங்கப்படலாம். 335 பேர்களைக் கொண்ட ஆளும் கட்சிக் கூட்டணி உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த பல அமைச்சுப் பதவிகள் தேவைப்படலாம்.

### ◆ பொருளாதாரம்

நரேந்திர மோடி பாரதிய ஜனதாக் கட்சியில் வழமையாக நம்பிக்கை இல்லாத தலித்துக்கள், இசுலாமியர்கள் ஆகியோரின் வாக்கைப் பெருமளவில் பெற்றுள்ளார். தலித்துக்கள், யாதவ சாதியினர், இஸ்லாமியர்கள் ஆகியோரை நாற்பத்தி இரண்டு விழுக்காடு கொண்ட உத்தரப் பிரதேச மாநிலத்தின் 80 தொகுதிகளில் 73இல் மோடியின் கூட்டணி வெற்றி பெற்றது. இவர்கள் மோடி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவார் என அவர் அளித்த உறுதி மொழியை நம்பியே வாக்களித்தனர். அத்துடன் 81 கோடி வாக்காளர்களில் அரைப்பங்கிற்கு மேற்பட்டவர்கள் 35 வயதிற்குக் குறைவான இளையோர்கள். இவர்களும் நல்லாட்சி பொருளாதார மேம்பாடு என்பவற்றை மனதில் கொண்டே மோடிக்கு வாக்களித்தனர். இவர்களின் நம்பிக்கையை உறுதி செய்ய மோடி இந்தியப் பொருளாதாரத்தை மீண்டும் எட்டு விழுக்காடு வளர்ச்சியை எட்டச் செய்ய வேண்டும்.

### ◆ ராஜ்ய சபா எனப்படும் மாநிலங்களவை

இந்திய ஆட்சி அதன் குடியரசுத் தலைவரிடமும், அதன் பாராளமன்றத்தின் இரு அவைகளான லோக் சபா எனப்படும் மக்களவையிடமும், ராஜ்ய சபா எனப்படும் மாநிலங்களவையிடமும் இருக்கின்றது.

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

**உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்**



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN


BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# India gets prime minister of his own political stature




TamilNet Editorial Board

After 10 years, India is getting a political prime minister of his own stature, routing out the Sonia-Rahul-Priyanka Congress Party, the government of which was run by a puppet prime minister and extra-parliamentary elements such as National Security Advisors, intelligence officials and bureaucrats. Apart from the debate on BJP's Hindutva polity and the impact that might come with the brute majority given to it, the past experience of Eezham Tamils is that Non-Congress governments were much better in post-Indira Gandhi times. Mr. Narendra Modi's predecessor Mr. A. B. Vajpayee earned the respect of Tamils, despite the virtual non-existence of his party in Tamil Nadu. Mr. Modi must have surely got the cue about the expectations behind the unprecedentedly overwhelming victory of Ms. Jayalalithaa in Tamil Nadu.

A cartographical depiction of the poll pattern would tell the realities about what is meant by 'national' political parties in India.

Leaving Karnataka, where a regional party is yet to emerge, almost the entire South India and the larger part of Eastern India have voted for parties other than the BJP and Congress. While the ADMK, TRC and BJD, respectively swept through Tamil Nadu, West Bengal and Orissa, the TDP (BJP ally), TRS and YCRC (the last two are recently formed) have shared Andhra and Telangana.

In Tamil Nadu, Ms. Jayalalitha has proved a point in a remarkable way, by standing alone and winning 37 out of 39 seats. The subconscious sentiment in the polarisation is no secret.

The Tamil Nadu State Assembly, led by Ms. Jayalalithaa, has steadily been pursuing certain demands through unanimous resolutions repeatedly enacted. New Delhi and the so-called national parties persistently refused to respect the sentiments of the people of Tamil Nadu.

The Sonia Congress-led New Delhi Establishment, well known for its complicity in the genocide and on-going genocide of Eezham Tamils, came out with responses that were utter ridicule of the righteous sentiments in Tamil Nadu. It didn't stop such acts even in the last minute of its exit, raising suspicions whether it was a government or personal whims and fancies of an extra-parliamentary junta that was handling the affairs of Eezham Tamils.

Proving a change of course in the foreign policy and in the implementation of it in the international arena may take a little time for the new government. But, Mr. Modi could come out with an immediate gesture of respecting the Tamil Nadu Assembly and the current Lok Sabha mandate in Tamil Nadu, by instituting an inquiry into the conduct of the past two Congress governments since 2004, on the affairs of the island.

Whatever the process and outcome of such an inquiry, bringing some key persons to accountability would certainly kindle a national discourse on Eezham Tamils that is hitherto suppressed, would bring in a national consensus on what to do, and would make extra-parliamentary elements and interests not to dare in future in meddling with a nation to the extent of the disappearance of 1,46,000 people.

Mr. Modi may have to be particularly careful about the line of Sushma Swaraj and Subramania Swamys in the party, and foundations like the ORF and corporate interests irresponsibly bulldozing righteous needs of the Eezham Tamil nation facing genocide and annihilation in the strategic neighbourhood. There is a lot of anger on the way the BJP was playing paly-paly with Rajapaksa and genocidal Colombo.

There is thinking that had this change in the political will been seen in May 2009, a disaster could have been avoided or minimised in the island.

The last five years have seen a brutal and resolute engineering aimed at causing irreversible effects against the nation of Eezham Tamils, in the forms of militarisation, colonisation and structural genocide – all in active complicity of New Delhi.

The immediate task of Ms. Jayalalithaa is to make India to stop the structural genocide, followed by bringing in conditions for Eezham Tamils to exercise the right to self-determination.

Ms. Jayalalithaa getting the unprecedentedly overwhelming victory is largely due to a subconscious feeling in Tamil Nadu that the State, ignored of its sentiments by the Centre, should get a united strength to change the course at the Centre. Tamil Nadu failed to do that in 2009.

Now, when it has done it, whether it would go wasted in the context of BJP getting absolute majority, is an anxiety, say political observers in Tamil Nadu.

> Mr. Modi may have to be particularly careful about the line of Sushma Swarajs and Subramania Swamys in the party, and foundations like the ORF and corporate interests irresponsibly bulldozing righteous needs of the Eezham Tamil nation facing genocide and annihilation in the strategic neighbourhood.

Mr. Modi and Ms. Jayalalithaa have expressed mutual cooperation after the elections. Mr. Modi may still need support at the Rajya Sabha, where the BJP for the time being doesn't have the majority. Ms. Jayalalithaa could also give two-third majority for Modi government in making fundamental changes at the centre.

Above all, Ms. Jayalalithaa could now boldly cite the mandate in mobilising the masses to convince the Centre, convince international forces and to disprove a bunch of media corporates and intelligence-operated 'opinion makers' who were long blighting the cause of Eezham Tamils in India as well as in the international arena.

Making use of the wave of change, a mass mobilisation transcending political parties should come forward in Tamil Nadu, to achieve something substantial in this regard without delay.

# Sri Lanka 'happy' Jayalalithaa lost clout in New Delhi



Sri Lanka on Monday (19th May 2014) said it is pleased that Tamil Nadu chief minister Jayalalithaa has lost any bargaining power with the Narendra Modi government because of the majority BJP has on its own in the recently-concluded Parliamentary polls.

Sri Lankan President Mahinda Rajapaksa's administration was pleased that it could do business with the Centre without Tamil Nadu exercising undue influence, Lanka's media minister and government spokesman Keheliya Rambukwella said.

"A powerful government in Delhi is very good for us. Whatever the decision Centre takes, it will be without any undue influence from states like Tamil Nadu.

"We are very happy that there is a very strong government and Prime Minister (-elect) Modi does not have to depend on any other party for his majority. This means even if Jayalalithaa had won 37 out of 39 seats in Tamil Nadu, she would not be in a position to influence the Centre," Rambukwella told reporters here.

He said Rajapaksa was among the first foreign leaders to congratulate Modi after his spectacular victory and said both leaders had "a lot of similarities" but did not elaborate.

*Reported by Times of India*



# Silences between the shouts



Editorial - Tamil Guardian

The idea that Sri Lanka's opposition parties should unite to topple President Mahinda Rajapaksa and his government has surfaced yet again, with much discussion of a common Presidential challenger and speculation over likely candidates. Underlying this, is the assumption and claim, that the main opposition, United National Party (UNP) is the liberal antithesis of Rajapaksa's authoritarian, violent and Sinhala nationalist rule. However, quite apart from the UNP's own history of rule, its politics of late suggests there are good reasons to be sceptical. Its recent clamour over human rights and other liberal values, belies a deafening silence on central issue of crisis for Sri Lanka – justice and accountability for wartime mass atrocities, and a political solution which addresses long-standing Tamil political demands. In fact leading UNP figures are explicitly supportive of the Rajapaksa government on these issues. Whilst the international community ought to take a closer, more critical look at the UNP's conduct, past and present, before assuming it to be the panacea to Rajapaksa rule, it beholds the leadership of the Tamil National Alliance (TNA), having secured its electoral mandate on justice, accountability, and the Tamil right to self-determination, to ensure these are the foundation of any alliance.

Amidst the island's deepening crisis, it is understandable that ending Rajapaksa's rule appears as the solution to Sri Lanka's woes. However the assumption that the rights and lives of the Tamil people will be any more secure under a UNP led government is unsubstantiated by the party's conduct both past and present – indeed it was under the iconic UNP era of Jayawardene, that over 3000 Tamils were massacred in the pogrom of 1983. Meaningful change requires different policies not personalities. Replacing one Sinhala nationalist party with another is not the answer, rather a fundamental break from Sinhala-Buddhist majoritarian order is needed. Whilst the UNP's vocal positions on press freedom, rule of law and judicial independence are pointed to as evidence of its liberal values, the party has a long history of Sinhala-Buddhist nationalism that mirrors the ruling government. Indeed, the ruling government includes several UNP figures, who having made a seamless transition, are now the government's principle defenders abroad – including the icons of the Norwegian peace process, G.L. Peiris, and Milinda Morogoda. Whilst the UNP's acting leader, Karu Jayasuriya crossed over to become a minister in the Rajapaksa government before crossing back to become UNP deputy leader.

The UNP's claimed commitment to liberal peace is also starkly at odds with its repeated deference to the Buddhist clergy. Last year, faced with internal crisis, a 'Leadership Council' was established under the patronage of Buddhist monks, and at times, even its celebrated market friendliness gives way to economic policies derived from religious beliefs, evidenced most recently in its opposition to the casino bill. Also inherent to the UNP's recent championing of human rights and liberal freedoms is a clear ethnic selectivity, focusing solely on Sinhala concerns. The party's recent letter to the Commonwealth Secretary General, lambasting the organisation's failure to take action against the Rajapaksa government, focused entirely on abuses affecting Sinhalese, despite mass atrocities against Tamils dominating international criticism and press coverage during the Commonwealth summit. Indeed the UNP is persistently silent on Tamil concerns: militarisation, state-sponsored colonisation, demographic change, and arrests and threats against Tamil political figures, activists and journalists. The UNP was equally silent as Tamils were being slaughtered in 2009 and as they were subjected to mass starvation and systematic abuse by in government run camps. The party's contempt for Tamils' suffering was later exemplified in its fielding of General Sarath Fonseka, Army Commander during the killings, as its presidential candidate.

On the central issue of accountability and justice for the mass atrocities, the UNP's stance has been explicitly in supportive of the government, actively calling for a united approach to defeat any international injury. Last week, UNP leadership (and Presidential) hopeful, Sajith Premadasa, again rejected the international investigation and derided Rajapaksa for "succumbing" to foreign pressure. The UNP's criticism of the government, far from condemning the massacring of tens of thousands of supposedly Sri Lankan citizens, is for 'poor foreign policy' that failed to defend Sri Lanka against international scrutiny. In this regard, the policies of the UNP are indistinguishable from parties often described as 'extremist', such as the JHU and the NFF. The party's rejection of the international investigation sits uncomfortably juxtaposed with its prompt call for an international invesitgation to the killing of Sinhala protesters in Weliweriya last year. This glaring inequity is indefensible in a supposed harbinger of a liberal, inclusive, multi-ethnic state.

> The UNP was equally silent as Tamils were being slaughtered in 2009 and as they were subjected to mass starvation and systematic abuse by in government run camps.

The clear contradictions between the UNP's supposed liberalism and its Sinhala nationalist practices, past and recent, call into serious question the claim it is a progressive alternative to the Rajapaksa government. That Rajapaksa's authoritarianism impacts on the freedoms of all on the island is not under dispute, however agreement on the current government as a common enemy alone cannot be the basis of a united opposition. If the UNP is the liberal actor is claims to be, it must eschew its Sinhala first ethos, and uphold consistently the values it espouses, including committing unambiguously to the international investigation and an equitable solution which addresses long-standing Tamil demands for self-determination. Until then the TNA leadership must resist the perennial urge to compel the Tamils to choose between the lesser of two evils.








ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS பேப்பர்

## தினம் ஒரு குறள்

*விலங்கொடு மக்க ளனையர்*
*இலங்குநூல் கற்றாரோ டேனை*
*யவர்.*

விளக்கம்: மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே என்ன வேற்றுமையோ, அதே அளவு வேற்றுமை அறிவு நூல்களைப் படித்தவர்களுக்கும், அந்த நூல்களைப் படிக்காதவர் களுக்கும் இடையே உண்டு.

## கதை பிறந்த கதை

கதை கதையாம் காரணமாம்,
காரணத்துல தோரணமாம்,
தோரணதில தர்ப்பை புல்லாம்,
தர்ப்பை புல்ல பிடிங்கி,
மாட்டுக்கு போட்டானாம்,
மாடு பால் கறந்துச்சாம்,
பாலைக் கொண்டு கோவிலுக்கு
போனானாம், கோவில் பூரா
பாம்பா இருந்துச்சாம்,
பாம்படிக்க தடியெடுக்க
போனானாம், தடியெல்லாம்
சேறா இருந்துச்சாம், சேறு
கழுவ ஆத்துக்கு போனானாம்,
ஆறெல்லாம் மீனா இருந்துச்சாம்,
மீன் பிடிக்க வலை எடுக்க
போனானாம், வலையெல்லாம்
ஓட்டையா இருந்துச்சாம்,
வலைய தைக்க ஊசியெடுக்க
போனானாம், ஊசியும் பாசியும்
உருண்டோடி போயிருச்சாம்.....

## பொது அறிவு சில

-நத்தைகளில் ஆண், பெண் பாகுபாடு கிடையாது. ஒவ்வொரு நத்தைக்கும் இரு தன்மைகளும் அமைந்து இருக்கும். நத்தைக்குப் பற்கள் கிடையாது. சிறிய தசை நார்கள்தான் பற்களாக அமைந்திருக்கும். இவை ஏறக்குறைய 25,000 வரை எண்ணிக்கையில் இருக்கும்.

- கரப்பான் பூச்சியில் 400 வகைகள் உள்ளன. அநேகமாக அனைத்துமே வெப்பமண்டல நாடுகளில் காணப்படுகின்றன.

- ஒரு பெண் மூட்டைப் பூச்சி, உணவு எதுவுமே உட்கொள்ளாமல் 9 மாதங்கள் வரை உயிர் வாழும்.

-ஈ போன்ற சிறிய பூச்சிகள் பறந்து செல்லும்போது ஒரு விநாடிக்குள் 200 தடவை தங்கள் சிறகுகளை அடித்துக்கொள்கின்றன.

- சாதாரணமாகக் காணப்படும் சிலந்திகள் தங்கள் வாழ்நாளில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான முட்டைகளை இடும்.

-மூங்கில் மிக உயரமாக வளரும் வரைக் கிளைகள் விடுவதில்லை. பின்பு, சிறிய கிளைகள் அடர்த்தியாக வளரத் தொடங்கும்.

## ஆப்பிழுத்த குரங்கின் நிலை

ஒரு காட்டில் குரங்கு ஒன்று தனியாக வசித்து வந்தது. அது மிகவும் குறும்புக்காரக் குரங்காக இருந்தது. பின் விளைவுகளை எண்ணாமல் மிகுந்த குறும்புத்தனம் செய்யும்.

அந்த குரங்கு வசித்த அந்த காட்டுப் பகுதிக்குள் ஒரு விறகு வெட்டியும் வசித்துவந்தான். அவன் மரங்களை பெரிய துண்டுகளாக வேட்டிவந்து, அவற்றை தன் குடிசை அருகே வைத்து கோடரியால் பிளந்து அடுப்பில் வைக்கக் கூடியதாக சிறு துண்டுகளாக்கி, அவற்றை பக்கத்து கிராமங்களுக்குக் கொண்டு சென்று விற்று அதைக்கொண்டு குடும்பம் நடத்தி வந்தான். அவன் மரத்துண்டுகளைப் பிளப்பதற்கு ஆப்புகளைப் பாவிப்பது வழக்கம். ஆப்பு என்பது 'V' வடிவமான மரம் அல்லது இரும்பினால் ஆன ஒரு பக்கம் ஒடுக்கமாகவும் மற்றப் பக்கம் அகலமாகவும் உள்ள ஒரு ஆயுதம்.



ஒருநாள் வழமைபோல் ஒரு பெரிய அடிமரத்துண்டை கோடரியால் பிளக்க ஆரம்பித்தான். அவனுக்கு களைப்பு வந்ததால் அடிமரத்தின் பாதியளவு பிளந்திருந்த பிளவுக்கு இடையில் ஆப்பு போல் ஒரு மரச்சக் கையை வைத்துவிட்டு ஓய்வெடுக்கச் சென்றான்.

விறகு வெட்டியின் செயலை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்த குரங்கு அவன் சென்றவுடன் கீழே இறங்கி வந்தது.

விறகு வெட்டி விட்டுச் சென்ற மரத்துண்டின் மீதேறி மரத்தில் இறுக்கி இருந்த ஆப்பை நோக்கியவாறு அமர்ந்தது. அப்போது பிளவுபட்ட பகுதியில் அதன் வால் முழுவதும் செறிருந்தது. குரங்கு ஆப்பை இழுக்கும் அவதானத்தில் இருந்ததால் தனது வால் மரத்துண்டின் பிளவில் போயிருப்பதை உணரவில்லை. பின் தனது குறும்பு வேலையைச் செய்ய ஆரம்பித்தது. மரப்பிளவு இறுகாமல் செருகி இருந்த ஆப்பை தன் முழுப் பலத்தையும் பாவித்து ஆட்டி ஆட்டி எடுக்க முயற்சி செய்த்து.

திடீரென்று அந்த ஆப்புத்துண்டு குரங்கின் கையோடு வந்துவிட்டது. உடனே பிளவுபட்ட மரத்துண்டு சுருங்கிக் கொண்டது. பிளவுக்குள் தொங்கியிருந்த வால் நசுங்க குரங்கு அலறியது. ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மரவெட்டி அலறல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். அதற்குள் குரங்கு வலி தாங்காமல் பரிதாபமாக மாண்டு போனது.

*பாடம்: 'பின்' விளைவுகளை ஆராயாமல் எந்த காரியத்தையும் செய்யக்கூடாது.*

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | Y | Z | A | I | B | I | L | M | A |
| D | P | E | O | E | N | I | L | M | A |
| P | O | D | E | L | J | E | U | A | R |
| S | M | M | U | T | H | A | M | R | D |
| V | T | M | V | K | U | S | I | N | I |
| F | H | A | A | V | T | N | G | E | Q |
| Y | O | N | A | E | Z | A | I | U | W |
| S | D | N | S | E | O | H | I | B | N |
| J | A | E | A | D | U | O | P | C | X |
| T | M | U | L | U | K | A | R | S | O |


**Hidden Words:**
**Subject: Sea Foods**
KUSINI, MUTHAM, MANN, VEEDU, VASAL
THOTAM
*Submitted by:*
*By: Harishayan Manoranjan*

## THE HARE AND THE TORTOISE

There once was a speedy Hare who bragged about how fast he could run. Tired of hearing him boast, the Tortoise challenged him to a race. All the animals in the forest gathered to watch.

The Hare ran down the road for a while and then and paused to rest. He looked back at the tortoise and cried out, "How do you expect to win this race when you are walking along at your slow, slow pace?"

The Hare stretched himself out alongside the road and fell asleep, thinking, "There is plenty of time to relax." The Tortoise walked and walked; never ever stopping until he




came to the finish line.

The animals who were watching cheered so loudly for Tortoise, that they woke up Hare. The Hare stretched and yawned and began to run again, but it was too late. Tortoise was already over the line.

MORAL: SLOW AND STEADY WINS THE RACE

## Colouring - 218



## DO YOU KNOW ABOUT HUMAN BODY ?

- Did you know human nose can remember up to 50000 different types of scents.
- Food is either cooled or warmed to a suitable temperature in the mouth !
- You know, you have no sense of smell when you're sleeping!
- You know, you can see your nose all the time but somehow your brain always ignores it!
- An average person has over 1,460 dreams a year which is about 4 dreams every night!
- On a clear night, the human eye can see between 2000 to 3000 stars in the sky.
- A human heart pumps enough blood to fill 100 swimming pools in an average lifetime.In the same time it will beat almost three billion times
- Your skeleton keeps changing every 10 years, that means your bodies keep renewing themselves so every 10 year you have a new skeleton.
- The best time for a person to buy shoes is in the afternoon. This is because the foot tends to swell a bit around this time.
- Do you know left hand side of your brain controls right -side of your body whereas right-hand side controls left part of body .



- Do you know everybody has a strong eye and one weak!
- The brain grows quickest till the age of 5.
- And do you know that unlike other body cells, brain cells can not regenerate. Once brain cells are damaged, they are not repaired !
- A normal human being can survive for 20 days without eating but it can survive only for 2 days without drinking!
- Your blood carries food & oxygen to all of your body.!

## Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் http://www.animalfactguide.com/ என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பாருங்களேன். பிடிச்சா அடிக்கடி தட்டுங்கோ, பிடிக்காட்டி அடுத்த வாரம் வேற ஒன்டை சொல்லுறம். உங்களுக்கு தெரிஞ்சதையும் எங்களுக்கு சொல்லுங்கோ.



## தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள்.


**G11, Lombard House, 2, Purley Way, Croydon, CR0 3JP**

**மின்னஞ்சல் முகவரி : info@orupaper.com**

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED


Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

## அழகலாதென செயேல்




மதிக்கப்பட வேண்டிய உயர்வான செயல்களைத்தான் அழகான செயல்கள் என ஔவையார் வகுத்துள்ளார். மதிக்கப்படாத செயல்களை இழிவான செயல்களாகக் கருதி, அழகலாதென செயேல் என அறிவுரை பகிர்கிறார் ஔவையார். அழகான செயல்களைவிட அழகிலாத செயல்கள்தான் நாளாந்தம் நாம் காணும் அதிகமான அனுபவங்கள்.

இயற்கையின் படைப்பில், கூடுதலான மக்கள் தொகையினர் உடல் ஆரோக்கியத்தில் நலமாகப் பிறந்தாலும், வலு இழந்தவர் தொகையினரும் கணிசமாக இருப்பதை புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இத்தகையவர்களின் பராமரிப்பை, குடும்ப அங்கத்தவர்கள் கரிசனையோடு பேணிக் காத்து வந்தாலும், சமுதாயச் சூழலில் இவர்கள் வேண்டப்படாதவர்களாகவே கருதப்படுகிறனர். நாகரீகமடைந்த நாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலும், வலு இழந்தவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் இந்த நாடுகளின் அரசுகள் தாராளமாகத் தந்து உதவினாலும், ஆசிய, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இவர்கள் மதிக்கப்படுவதில்லை என்பது இழிவான செயலாகும்.

பிரயாண வசதிகளைத் தரும் பேருந்துகளில், தொடர் ஊர்ந்துகளில் வயது முதிர்ந்தவர்களும், வயது குறைந்தவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்களில் அமர்ந்திருக்கும் இளையவர்கள், இவர்களுக்குத் தர வேண்டிய வசதியை எத்தனையோ தடவைகளில் அனுபவ ரீதியாக கண்டுள்ளோம்.

வீடுகளில் முதியவர்களை மதிக்கும் காலம் மாறி, அவர்களை மிதிக்கும் காலம் வரத் தொடங்கியுள்ளது. காவோலை விழும்போது குருத்தோலை சிரிப்பது போல, முதியவர்களைப் பார்த்து இளையோர் ஏளனம் செய்வதைக் கண்ணால் கண்ட அனுபவமுண்டு.

பொது இடங்களில் தவிர்க்க வேண்டிய புகைப் பிடித்தல், உமிழ்நீர் துப்புதல் போன்ற இழிவான செயல்களை எந்த வித கூச்சமுமின்றி சிலர் செய்வதை அசிங்கமாக பார்த்த அனுபவங்களும் நிறைய உண்டு. தெரியாமல் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கோரும் பழக்கமும் எதிர்பாராத உதவியை ஒருவர் தரும்போது நன்றி கூறும் பழக்கமும் மெல்ல மெல்ல நழுவி வருவதை அனேகர் அவதானித்திருப்பீர்கள். இத்தகைய இழிவான செயல்கள் மாற வேண்டும் என்ற ஆதங்கத்திலேயே அழகலாதென செயேல் என ஔவையார் வேண்டுகிறார்.

## மாறும் இராணுவ சிந்தனை

நாலு பேருக்கு ஒருவர் என்ற எண்ணிக்கையில் வடக்கில் முகாமிட்டிருக்கும் இலங்கை இராணுவம், தமிழர்கள் மத்தியில் ஆட்சேர்க்கும் புதிய சிந்தனையை ஊக்குவித்து அதற்கான நடவடிக்கையில் இறங்கி இருப்பது சமீப காலமாகக் கிடைக்கும் பரபரப்பான செய்திகள்.

ஆரம்பத்தில் தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொண்ட இலங்கை இராணுவம் ஆண்களையும் சேர்த்துக் கொள்ள வீடு வீடாக விளம்பரம் செய்யுமளவுக்கு இறங்கியிருப்பது இதய சுத்தியான ஒரு நடவடிக்கையாக தமிழ் மக்கள் கருதவில்லையென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இலட்சக் கணக்கான இராணுவ சிப்பாய்களை இருப்பில் வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று திக்குமுக்காடும் இலங்கை இராணுவம் விவசாயம் செய்வதற்கும், வியாபாரம் செய்வதற்கும் பிரித்து பிரித்து வேலை வாங்கினாலும் அடி மட்ட வேலைகளுக்கு அவர்களை நியமிப்பதில் சில சிக்கல்களை எதிர்நோக்குவதால் தமிழர்களை இணைத்து அடிமைப்படுத்தலாம் என்ற சிந்தனை இராணுவத்திற்கு உதித்ததில் ஓரளவுக்கு உண்மையுண்டு.

மனிதவளத்தைப் பேணுவதும், கட்டுப்படுத்துவதும் உலகளவில் பெரியதொரு பிரச்சினை. ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது ஆசைகள், பொறுப்புகள், முன்னேற்றம் என்பவை அத்தியாவசியமானது. அம்மனிதன் இராணுவத்தில் இருந்தாலும் சரி, சாதாரண வாழ்க்கையை அனுபவித்தாலும் சரி, அவனது அபிலாசைகளை நெடுங்காலம் பூட்டி வைக்க முடியாது. இலட்சக்கணக்கான இலங்கையில் இராணுவத்தில் இணைந்திருப்பவர்களுக்கும் இது விதிவிலக்கல்ல.

**தகவல் களஞ்சியம்**

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

புலிகள் இருக்கும்வரை போர் என்ற முஸ்தீப்பில் முறுக்கேற்றப்பட்ட இலங்கை இராணுவம் போர் முடிந்து 5 வருடங்கள் ஆகிய நிலையில், இராணுவத்துக்குரிய கடமைகள் கணிசமான அளவு குறைந்து விட்ட கால கட்டத்தில், இராணுவக் கெடுபிடிகளிலிருந்து விடுபடும் எண்ணம் சிறு தொகையினருக்கு உதயமாவது இயற்கையே. எனவே, இவ்வாறு விடுபடும் தொகையினரை ஈடுசெய்ய புதிய ஆட்சேர்ப்பு ஒரு மாற்று நடவடிக்கையாக சிந்திக்கப் படுகிறது.

இந்தக் குறைநிரப்பு சிந்தனையை நிறைவேற்ற, தமிழர் மத்தியில் ஆசைகளைத் தூண்டி விடப்பட்டுள்ளன. எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்துக்கு சேரக் கிடைத்த மிகக் குறைந்த விண்ணப்பங்களை நோக்கும் போது நொந்து போயிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பு கிடைக்கவில்லை என்பதே நிதர்சனம்.

## பகிடிவதையால் பாதிப்பு

பல்கலைக்கழகங்களில் ஆரம்பித்த பகிடிவதை பலதரப்பட்ட கல்விக்கூடங்களிலும் பரவி, இளம்வயதினரை நடுத்தர வயது வரை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிப்பை உண்டாக்குவதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

கூச்ச சுபாபமுடைய கல்லூரி மாணவர்களையும், புதுமுக மாணவர்களையும் அவரவர் பழக்கவழக்கங்களை மாற்றியமைக்கவும், விளையாட்டாகவும், கேலியாகவும் புகுத்தப்பட்ட பகிடிவதை சில இளவயதினரை மரண வாசலுக்கே துரத்திவிட்டுள்ளதை சில சம்பவங்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்ட வில்லியம் கோம்லாண்ட் வட கரோலினா மžக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் 9 வயதுக்கு மேற்பட்ட இளம் வயதான 7420 பேரிடம் மேற்கொண்ட பரிசோதனைகள் மூலம் பகிடிவதையில் சம்பந்தப்பட்டவர்களின் CRP(C-Reactive Protein) மட்டம் உயர்வடைந்துள்ளதை அவதானித்துள்ளார். இதன் காரணமாக உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பகிடிவதையால் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டவர்கள் இளம்பிராயத்திலேயே இருதய நோய்களுக்கும், நீரிழிவு நோய்களுக்கும் ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இளமைக்காலத்தில் பகிடிவதையால் சித்திரவதைக்குட்பட்டவர்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதை பரிசோதனைகள் மூலம் ஏற்கனவே அறிந்து கொண்ட லண்டன் கிங்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அன்றியா டெனிஸ் என்பவர் வில்லியம் கோய்லாண்ட் அவர்களின் ஆய்வு பல மூட்டுவதாகத் தெரிவித்துள்ளார். எனவே பகிடிவதைகளின் கோர தாண்டவத்தை இனிமேலாவது தடுத்து நிறுத்த வேண்டாமா?

# இலண்டன் முள்ளிவாய்க்கால் நிகழ்வும் இன்றைய நிலையும்

*மே 18ம்நாள் லண்டன் ரபல்கர் முன்றலில் பிரித்தானிய தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இனப்படுகொலை நினைவு நாள் நிகழ்ச்சியில் தேசியக் கொடி ஏற்றுவது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகளையிட்டு அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கை தொடர்பாக தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பிரித்தானியக் கிளை வெளியிட்டுள்ள பதிலறிக்கை:*

தனிப்பட்ட யாரையாவது குறை கூறின் அஃது அவரவர் பிரச்சனையென விட்டுவிடலாம். அவரவர் தமது தர்மத்திற்கேற்ப முடிவையுமெடுக்கலாம். ஆனால் ஒரு அமைப்பைச் சார்ந்தோரெனத் தேர்ந்து குறை கூறின் பதிலளிக்க வேண்டிய நிலையும் பொறுப்பும் அந்த அமைப்பிற்குள்ளது. அந்தவொரு காரணத்தினாலேயே இதனை எழுதுகின்றோம். ஆனால், பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு (T.C.C.) ஈழத் தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றையே தம்மூச்சாகக் கொண்டுள்ள மக்கள் அணி. தமிழீழத் தேசியக்கொடி எமது தேசியச் சின்னங்களில் உன்னத இடத்தை வகிக்கும் ஒன்று. எமது மாவீரர்களின் தியாகத்தினாலே உரமேற்றப்பட்டு வருவது. தேசியத்தலைவரினாலே பூசிக்கப்படுவது. 2009 இலே உலக நாடுகளின் நாடாளுமன்றங்களின் முன்னாலே 73 நாட்கள் வரையிலே கவனயீர்ப்பு நிகழ்த்திய வேளையிலே குறிப்பாகப் பிரித்தானியா போன்ற நாடுகளிலே - இக்கொடியைக் காவற்றுறையினர் எதிர்த்தனர். எமது உறவுகள் அதனைக் கைகளிலே ஏந்துவதற்காகப் பொலிசாரினாலே தாக்கப்பட்டனர். சிறைப்பிடிக்கப்பட்டனர். வழக்குத்தாக்கலும் செய்யப்பட்டனர். ஆனால், பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியினையும் தமிழீழத் தேசியக் கொடியினையும் வேறுபடுத்துவதெவ்வாறென்பதை எவ்வாறெனவறிந்த காவற்றுறை எமது தேசியக் கொடிக்கு அனுமதி அளித்தது. நாம் மண்டபங்களினுள்ளேயும் அம்பலத்திலேயும் எமது தேசியம் சார்ந்த நிகழ்ச்சிகளிலே தேசியக் கொடி ஏற்றுவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். காவற்றுறையினர் சூழ்ந்து நிற்கப் பிரித்தானிய முன்னணி அரசியற்கட்சி நாடாளுமன்றவுறுப்பினர்களும் எம்மோடிணைந்து மரியாதை செய்ய எமது தேசியக் கொடி உரிய முறையிலே ஏற்றப்படுவதை யாவருமறிவீர். எமது இளைஞரும் யுவதியரும் பல்கலைக்கழகங்களினுள்ளேயும் அவ்வாறே ஏற்றினர்.

முள்ளிவாய்க்காலிலே ஆயிரமாயிரமாய் எமது மக்களும் மாவீரர்களும் தம்மை இக் கொடியின் விடுதலைக்காகவே ஈந்தனர். அவ்வாறான முள்ளிவாய்க்கால் நிகழ்வின் நினைவெழுச்சியின் போது அக்கொடி ஏற்றப்படுவதை எதிர்பார்க்கும் எந்த ஒருவரையும் பிழையானவரென்று யாருங் கருத முடியாது.

இம்முறை நிகழ்ச்சியிலேயும் எமது தேசியக் கொடி ஏற்றப்படமாட்டாது என்ற முடிவிலே பிரித்தானியத் தமிழர் பேரவை (B.T.F) உள்ளதாக நாம் அறிந்தோம். எமது ஒருங்கிணைப்பாளர் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்ட போதும் அவ்வாறே கூறப்பட்டு அவர்கள் அறிக்கையிலுள்ளவாறே நியாயங்களும் எடுத்துரைக்கப்பட்டன.

பி. த. பேரவையின் மூவருக்கும் எமக்கும் இடையிலே 21.04.2014 அன்று முள்ளிவாய்க்கால் மே 18 நிகழ்ச்சி பற்றிய கூட்டம் நடைபெற்றது. அதிலேயும் தேசியக் கொடியின் முக்கியத்துவம் பற்றிக் காரசாரமான வாதம் நடைபெற்றது. எமக்கு அனுமதி தரும் அதே பொலிசார் அவர்களுக்கு அனுமதி மறுப்பது விந்தையாகவுள்ளது என்பதையும் அவ்வாறான தன்மையை நாம் ஒன்றாகச் சென்று அவர்களிடம் நியாயம் கேட்கவேண்டுமென்றும் அவர்களுக்கு எம்மாலே எடுத்துக் கூறப்பட்டது. தொடங்கிய நிலையிலேயே கூட்டம் முடிவடைந்தது. தாம் பி. த. பேரவையின் செயற்குழுவிலே இதுபற்றிக் கதைப்பதாகக் கூறிச் சென்றனர். பின்னர் எவ்வித மாற்றமுமில்லாத முடிவையே அறிவித்தனர்.

பொதுமக்கள் மனநிலையை நன்கறிந்த த. ஒ. குழுவின் ஒருங்கிணைப்பாளர் பி. த. பேரவையின் பொறுப்பாளர்களுடன் தொலைபேசி மூலமாக இதுபற்றி மீண்டும் பேசியுள்ளார். இறுதியாக மே 16 வெள்ளியன்றும் பி. த. பே. யின் பொறுப்பாளரோடு நிலைமைகளை விரிவாகக் கதைத்துள்ளார். 17ம் திகதி சனியன்று நண்பகல் வரையிலும் இதுபற்றிய ஏற்ற முடிவை எதிர்பார்த்திருந்தோம். எந்நிலையிலும் அவர்கள் தம்முடிவிலே உறுதியாகவிருந்தனர்.

பி. த. பேரவையினரின் ஊடக நிகழ்ச்சிகளின் மூலமாக யாவற்றையுமறிந்த இளைஞர்கள் மிகவும் கவலையடைந்தனர். உண்மை நிலையை அறிய எம்மை நாடினர் யாவும் பி. த. பே. இன் முடிவேயென்பதை அறிந்த அவர்களிலே சிலர் தாமும் அவர்களோடு பேசிப் பார்த்தனர். தம்மை ஏற்ற விடுமாறும் பாதகமான விளைவுகளுக்குத் தாமே பொறுப்பாகுவாரெனவும் கேட்டனர் எனக் கேள்வி யுறுகின்றோம். எதுவும் பலனளிக்கவில்லை. ஈற்றிலே விரக்தியுற்ற பொதுமக்கள் தாமே முன்வந்து கொடியேற்ற எண்ணினர்.

மே 18 ஞாயிறன்று இலண்டன் ரவல்கர் சதுக்கத்திலே மக்கள் கூடினர். எமது எல்லா நிகழ்ச்சிகளுக்கும் வழமையாக வருவது போலவே பொதுமக்கள் பலரும் - அதிலும் குறிப்பாக இளைஞர்கள் - கைகளிலே கொடியேந்தியே வந்தனர். கொடியை ஏற்ற வேண்டுமெனக் குரலெழுப்பி வேண்டினர். அப்போது எமது நிர்வாகப் பொறுப்பாளரும் வேறு சிலரும் பி. த. பே. பொறுப்பாளருக்கு நிலைமையை விளங்கவைத்து ஒத்துப்போகும்படி அறிவுரையும் கூறினர். ஆனால் அவர்கள் மறுத்தனர்.

கூடியிருந்த பொதுமக்கள் 45 நிமிடங்கள் வரையிலே மிகமுயன்றனர். ஒருபுறம் கொடியேற்றுவதற்குரிய ஒழுங்குகளையும் செய்தனர். கொடியை ஏற்ற முறையிலே ஏற்ற வேண்டுமென்பது அவர்களின் ஆதங்கம். ஏற்றவேண்டிய முறையை நன்குஅறிந்தவர்கள் த. ஒ. குழுவினரென்பதை அம்மக்களறிவர். அதனாலே உதவி கோரினர். அவர்களின் நியாயமான ஆதங்கத்தை உணர்ந்தவரும் கொடியேற்றும் முறையை அறிந்தவருமான சிலர் அவர்களுக்குச் சரியான முறையைக் காட்டினர். கொடி பொதுமக்களாலே ஏற்றப்பட்டு நிகழ்ச்சியின் நிறைவுவரை பறந்தது.

**முள்ளிவாய்க்காலிலே ஆயிரமாயிரமாய் எமது மக்களும் மாவீரர்களும் தம்மை இக் கொடியின் விடுதலைக்காகவே ஈந்தனர். அவ்வாறான முள்ளிவாய்க்கால் நிகழ்வின் நினைவெழுச்சியின் போது அக்கொடி ஏற்றப்படுவதை எதிர்பார்க்கும் எந்த ஒருவரையும் பிழையானவரென்று யாருங் கருத முடியாது.**

இதுவே நிகழ்ந்தவை. உள்ளத்திலே நிறைந்தவை இரண்டு - ஒன்று பி. த. பே. இன் நிலை - அடுத்தது இளைஞரின் தேசியம் சார்ந்த செயற்பாடு.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் தேசியம் சார்ந்த எந்த நிகழ்ச்சியையும் ஊக்குவிப்பர் என்பதையும் தேசியக் கொடி ஏற்றுவதற்கான பூரண ஒத்துழைப்பை எந்நேரத்திலும் எவருக்கும் வழங்குவதைத் தமது தார்மீகக் கடமைகளிலே ஒன்றாகக் கொண்டவரென்பதையும் இத்தால் உறுதி செய்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

# 'மேற்குலகக் கல்வி பாவம்' என்னும் நைஜீரிய பொக்கோ ஹராம்



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

புனித இசுலாமிய மதத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் மதத்தின் பெயரால் நைஜீரியாவில் பொக்கோ ஹராம் என்னும் அமைப்பு செயற்படுகின்றது. சுனி முஸ்லிம்களின் ஒரு பிரிவாகக் கருதப்படும் இந்த அமைப்பு தம்மை மிகவும் மரபுவழி இசுலாமியர்கள் என்றும் இசுலாமிய விதிகளைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவர்கள் என்றும் தூய்மையானவர்கள் என்றும் அடிப்படைவாதிகள் என்றும் பல அடைமொழிகளால் அழைக்கின்றார்கள். நைஜீரியா முழுவதும் இசுலாமிய ஷரியா சட்டம் நடைமுறைப் படுத்தப் பட வேண்டும் என இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

### ◆ மலேசிய விமானம் வேறு நைஜீரியப் பெண்கள் வேறு

எண்ணெய் வளம் மிக்க நைஜீரியாவில் உலகப்பொருளாதார மாநாடு நடக்கும்வேளையில் அங்கு இளம் பெண் பிள்ளைகள் இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். நைஜீரிய அரசு கடத்தப்பட்ட பெண் பிள்ளைகளிலும் பார்க்க பொருளாதார மாநாட்டில் அதிக கவனம் செலுத்துவதாக வட நைஜீரிய மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். உலகம் தொலைந்து போன மலேசிய விமானத்தைத் தேடுவதில் காட்டும் அக்கறை கடத்தப்பட்ட பெண்பிள்ளைகளை மீட்பதில் காட்டவில்லை. முன்னூறு மக்கள் கொல்லப்பட்ட தென் கொரிய விபத்திற்காக தலைமை அமைச்சர் பதவி விலகினார். நைஜீரியாவில் அப்படி எதுவும் நடக்கவில்லை. நைஜீரய அதிபர் குட்லக் ஜொனதன் தனது நாடு ஆபிரிக்காவிலேயே பொருளாதார வலுமிக்க நாடு என உலகிற்குக் காட்ட முயல்கின்றார்.

### ◆ பொக்கோ ஹரம் என்றால் புதுமைத் தடை

நைஜீரியாவின் வடக்குப் பகுதிகளில் வாழ்பவர்கள் இவர்களை பொக்கோ ஹராம் என அழைக்கின்றனர். ஆனால் இவர்களின் அமைப்பின் உண்மையான பெயர் 'புனிதப் போரையும் இறைதூதுவரின் போதனைகளையும் பரப்புரை செய்யும் மக்கள்' என்பதாகும். பொக்கோ ஹராம் என்பது போலித் தடை எனப் பொருள்படும். சி.என்.என் இதன் பொருள் மேற்குலகக் கல்வி பாவம் எனப் பொருள்படும் என்கின்றது. வட நைஜீரியா, தென் கமரூன், நைஜர் ஆகிய நாடுகளில் இவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அபுபக்கர் ஷெகௌ (Abubakar Shekau) இந்த அமைப்பின் தலைவர் எனச் சொல்லப்படுகின்றது. இவர்களுக்குத் தேவையான நிதியை இவர்கள் வங்கிக் கொள்ளைகள் மூலம் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

பொக்கோ ஹராம் அமைப்பினர் பல இசுலாமியர்களையும் கிறித்தவர்களையும் கண்டபடி கொல்கின்றனர். நவீனமான எதுவும் இவர்களுக்குப் பிடிப்பதில்லை. மத சார்பின்மை என்ற சொல்லைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். அல்லாவின் போதனைகளை மீறி நடப்பவர்கள் எல்லை மீறியவர்களாகும் என்ற குரான் வாசகம் இவர்களின் தாரக மந்திரமாக உள்ளது. கார் குண்டு வெடிப்புக்கள், தற்கொடைக் குண்டு வெடிப்புக்கள் போன்றவற்றை நிறையச் செய்கின்றார்கள். 2014-ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 1,500இற்கு மேற்பட்டவர்களை கொன்றுள்ளனர். ஆபிரிக்காவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நைஜீரியாவில் பொக்கோ ஹரம் அமைப்பினர் மிகவும் அச்சத்தை உருவாக்கியுள்ளார்கள். நைஜீரிய அரசு இசுலாமிய விதிகளுக்கு எதிராகச் செயற்படுவதாக பொக்கோ ஹரம் அமைப்பினர் ஆத்திரம் அடைந்துள்ளார்கள். இவர்கள் மேற்கத்தைய கலாச்சாரம், சமூக முறைமை போன்றவை தடைசெய்யப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். பெண்கள் 12 வயதிற்குப் பிறகு பாடசாலைக்குச் செல்லக்கூடாது என்ற கொள்கையால் உந்தப்பட்டு பொக்கோ ஹராம் அமைப்பினர் அவர்களைக் கடத்திச் சென்று கட்டாயத் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

### ◆ பொக்கோ ஹரம் அமைப்பின் வரலாறு

2002-ம் ஆண்டு மொஹமட் யூசுப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட பொக்கோ ஹராம் அமைப்பு ஆரம்பத்தில் ஏழைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய மத போதனையை செய்து வந்தது. பின்னர் இது இசுலாமிய அரசு உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் மத்தியில் பரப்புரை செய்தது. பின்னர் 2009-ம் ஆண்டு படைக்கலன்கள் ஏந்திய போராட்டத்தை ஆரம்பித்தது. மோட்டார் சைக்கிளில் துப்பாக்கியுடன் சென்று தாக்குதல் நடத்துவதை இவர்கள் வழமையாகக் கொண்டிருந்தனர். பல காவல் நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத்தியது. 2009 ஆண்டு நைஜீரியப் படையினர் இந்த அமைப்பின் தலைமையகத்தின் மீது தாக்குதல் நடாத்தி அதன் தலைவரைக் கொன்றதுடன் பலரைக் கைதும் செய்தனர். கொல்லப்பட்ட தலைவர் மொஹமட் யூசுப்பின் உடலின் படத்தை தொலைக்காட்சியில் காட்டிய நைஜீரிய அரசு பொக்கோ ஹரம் அமைப்பு ஒழித்துக் கட்டப்பட்டது என மக்களுக்கு அறிவித்தனர். 2010-ம் ஆண்டு இவர்கள் மீண்டும் அபுபக்கர் செக்கௌ தலைமையின் கீழ் திரண்டு எழுந்தனர். சிறைச் சாலையின் மீது தாக்குதல் நடாத்தி தமது அமைப்பின் உறுப்பினர்களை விடுவித்தனர். 2010-ம் ஆண்டு புத்தாண்டு தினத்திலும் 2011 நத்தார் தினத்திலும் இவர்கள் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்கள் நடாத்திப் பலரைக் கொன்றனர். தம்மீது நடாத்திய தாக்குதல்களுக்கு அவை பழிவாங்கல்கள் என்றனர் பொக்கோ ஹரம் அமைப்பினர். 2011-ம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்க வெளியுறவுத் துறை பொக்கோ ஹரம் அமைப்பு தமக்கு எதிரானது என அறிவித்தனர். அத்துடன் பொக்கோ ஹரம் அமைப்பிற்கும் அல் கெய்தாவிற்கும் தொடர்பு இருப்பதாகவும் அமெரிக்க அரசு கருத்து வெளியிட்டது. 2013-ம் ஆண்டு ஒரு இசுலாமிய வழிபாட்டு நிலையம் மீது தற்கொடைக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டனர். பல இசுலாமிய மத போதகர்களையும் தலைவர்களையும் இலக்கு வைத்துப் பல தாக்குதல்கள் 2012, 2013-ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது. 2013-ம் ஆண்டில் கமரூன் நாட்டில் இவர்கள் தமது முதல் தாக்குதலை மேற்கொண்டனர்.

### ◆ பொக்கோ ஹரம் ஓய்வதில்லை

2013-ம் ஆண்டு மே மாதம் நைஜீரியாவின் பாமா நகரில் பொக்கோ ஹராம் உறுப்பினர்கள் நைஜீரிய அரச படை முகாம், காவல் நிலையம், சிறைச்சாலை ஆகியவற்றின் மீது பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். நைஜீரியப் படையினரின் மனைவிகளையும் பிள்ளைகளையும் இதில் பொக்கோ ஹராம் அமைப்பினர் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். தமது உறுப்பினர்களின் மனைவிகள் பிள்ளைகளைப் படையினர் கைது செய்வதற்கு தாம் பழிவாங்குவதாகத் தெரிவித்தனர். இத்தாக்குதல் பொக்கோ ஹராம் அமைப்பினர் தமது தாக்குதிறன், படைக்கலன் போன்றவற்றை அதிகரித்துள்ளனர் என்பதைக் காட்டியது. நைஜீரிய அரசிடம் இருந்து முன்று மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பணத்தைப் பெற்றுக் கொண்டு தம்மிடமிருந்த கைதிகளை விடுதலை செய்தனர். மாலியில் பிரெஞ்சுப் படையினர் தலையிட்டதற்குப் பழிவாங்க ஒரு பிரெஞ்சுக் குடும்பத்தையும் பொக்கோ ஹராம் அமைப்பினர் கைப்பற்றி பின்னர் ஒரு மாதத்தின் பின்னர் விடுதலை செய்தனர். வடக்கு நைஜீரியாவில் ஊழலும் அதிகாரத்தைத் தவறாகப் பாவித்தலும் மலிந்து காணப்படுவதால் பல இசுலாமிய மக்கள் இவற்றில் இருந்து விடுபட இசுலாமிய ஷரியாச் சட்டம் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப் பட வேண்டும் என்று கருதுகிறார்கள். இதுதான் பொக்கோ ஹரம் அமைபினரின் ஆதரவுத் தளமாகும். மே மாத ஆரம்பத்தில் நைஜீரியாவின் வட கிழக்குப் பகுதியில் கமரூன் நாட்டு எல்லையில் இருக்கும் கம்போரு அங்காலா நகரில் உள்ள சந்தைப் பகுதியில் பொது மக்கள் மீது பொக்கோ ஹராம் மைப்பினர் தாக்குதல் நடத்தி முன்னூற்றிற்கு மேற்பட்டவர்களைக் கொன்றனர். கம்போரு அங்கால நகரில் இருந்த படையினர் கடத்தப் பட்ட பெண்களைத் தேடும் பணிக்கு அனுப்பப் பட்டதால் நஹரம் பாதுகாப்பின்றி இருந்தது. மே மாதம் 20-ம் திகதி நைஜீரிய மையப் பகுதியில் உள்ள ஜோஸ் நகரில் இரு கார் வெடி குண்டுகளை வெடிக்கச் செய்து 118 பொதுமக்களைக் கொன்றனர். முதல் குண்டு வெடித்தவுடன் சென்ற மீட்புப் படையினரை இலக்கு வைத்து இரணாடம் குண்டு வெடித்தது. மே மாதம் 21-ம் திகதி பொக்கோ ஹரம் அமைப்பினர் வட நைஜீரியாவில் மூன்று கிராமங்கள் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டனர். பலர் கொல்லபப்ட்டனர். பல வீடுகள் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன.

### ◆ மேற்கத்தையக் கல்வி முறைமைக்கு எதிரான போர்

கடந்த சில மாதங்களாக பொக்கோ ஹராம் அமைப்பினர் மேற்கத்தையக் கல்வி முறைமைக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி உள்ளனர். மேற்கத்தைய கல்வி முறைமையை ஒழித்து இசுலாமியக் கல்வி முறைமை நாட்டில் அறிமுகப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அதிலும் பெண்கள் கல்வியை நிறுத்திவிட்டு போய் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என பொக்கோ ஹரம் அமைப்பினர் மிரட்டுவதாக மேற்கத்தைய ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. ஏப்ரல் மாதம் 16-ம் திகதி இருநூற்றிற்கும் மேற்பட்ட 12இற்கும் 15இற்கும் இடைப்பட்ட வயதுப் பெண் பிள்ளைகளை பொக்கோ ஹராம் அமைப்பினர் நைஜீரிய சிபோக் நகரப் பாடசாலைகளில் இருந்து கடத்திச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. அதற்கு முன்னர் 59 பாடசானை ஆண் மாணவர்களை பொக்கோ ஹராம் அமைப்பினர் கொன்றாதாகவும் செய்திகள் வெளி வந்தன. கடத்தப்பட்ட பெண்களை தாம் மீட்டதாக முதலில் நைஜீரிய அரசு செய்தி வெளிவிட்டது. பின்னர் அது உண்மையல்ல எனச் செய்திகள் வெளியாகின. ஒன்பது வயதுச் சிறுமிகள் கூடக் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

### ◆ பெண்கள் விற்பனைக்கு

பொக்கோஹரம் அமைப்பினர் தம்மிடம் உள்ள 276 இளம் பெண்களை விற்பனை செய்யப் போவதாக காணொளி மூலம் தெரிவித்ததாக ஏ.எஃப்.பி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. மே மாதம 6-ம் திகதி மேலும் 14 இளம் பெண்கள் கடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. தம்மிடம் உள்ள பிள்ளைகளை விற்கும்படி அல்லா தமக்கு உத்தரவிட்டுள்ளதாக பொக்கோ ஹராம் அமைப்பினர் தெரிவித்ததாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கடத்தப் பட்ட பல பெண்கள் பொக்கோ ஹராம் அமைப்பின் உறுப்பினர்களை வலுக் கட்டாயமாகத் திருமணம்

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..
Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring
Maths & English Teaching for 4-16 years olds
FREE Assessment
We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics


LEARNA because every child is unique
Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் - பிரித்தானியா













## மூச்சடங்கிப்போன இறுதிப்பொழுதுகள்

ஆண்டுகள் ஐந்தாகிப்
போனதுவோ— எங்கள்
உறவுகள் அணுஅணுவாய்
வதைபட்டு
அல்லல்கள் பலபட்டு
துடிதுடித்து மரணித்து
ஆண்டுகள் ஐந்தானதோ

இரசாயன நெருப்புக்குள்
உறவுகள் வெந்து துடித்து
கருகி மடிந்த போது
இங்கிருந்து நாம் கதறி
அழுதோம்
அவர்களைக் காப்பாற்ற
முடியாமல் போய்
ஆண்டுகள் ஐந்தானதோ
இன்று

பாழும் குண்டு மழைக்குள்
எங்கள்
பச்சிளங்குழந்தைகள்
பதைபதைத்து துடித்து
மரணித்து
ஆண்டுகள் ஐந்தானதுவோ

சதிவலைகள் பின்னிய
நாடுகள்
என்று தெரியாமல் அந்த
நாடுகள்
ஓடிவந்து உதவாதோ
என்று இறுதிவரை
நம்பிக்கையோடு
காத்திருந்து
அன்று எங்கள் உறவுகள்
உயிர்கள் ஊமையாய்
அடங்கிப்போயின.
அதனை எண்ணி
எண்ணி நாம்
அழுது அரற்ற ஆரம்பித்து
ஆண்டுகள் ஐந்து ஓடியே
போனது

பதுங்குகுழிகள் வெட்டி —உயிர்
பாதுகாக்கமுடியாத சாவு
வலயத்துள்
பல்லாயிரம் எறிகணைகள்
வீழ்ந்து
பதைபதைத்து உறவுகள்
துடிதுடித்து உயிர்கருகி
ஆண்டுகள் ஐந்து மறைந்தே
போனது

நம்பிக்கை வைத்த நாடுகள் தான்
கூடிச் சேர்த்து தம்மை
கொன்றழித்தனர் என்ற
உண்மையை அறியாமலே
எங்கள் உறவுகள் அன்று
மடிந்தனர்

அயல்நாட்டின் ஆசியுடன்தான்
சிங்கள இனவாதம் தம்மை
அழித்தது என அறியாமலே
அன்று அவர்கள்
மூச்சடங்கிப்போனது

காட்டிக்கொடுப்பும்
கூடியிருந்து குழிபறிப்பும்
நம்பிக்கைத் துரோகமும்
நயவஞ்சகச் செயல்களும்
கூடிக்கூத்தடித்து கொக்கரித்து—
அன்று
எம் உறவுகளை கொன்றழித்தனர்

இனியும் அந்த சதிவலைகளை
இனங்கண்டு கீறிக்கிழிக்க
எம்மால் முடியாது போனால்
எங்கள் இனத்தின் அழிவுக்கு
நாம்தான் பொறுப்பாளர் ஆவோம்
என்பதை உணர்ந்து உறுதியோடு
பயணிப்போம்
எம்மக்களைக் காத்திட
இணைவோம்

மந்தாகினி (யாழில்)

Fridge Freezer Direct
Huge discounts across our whole range of products
Lincat RATIONAL True FOSTER
Get an extra 5% off your order
Quote "1827G20J"
Extra discounts on all Lincat, True and Foster Products.
As well as great prices on Rational - Call for a quote
Open Monday to Thursday 8:30 - 6:00
and Friday 8:30 - 5:00
Contact Us:
0845 68 00 695
sales@fridgefreezerdirect.co.uk
FFD FridgeFreezerDirect
THE UK'S PREMIER COMMERCIAL REFRIGERATION AND CATERING EQUIPMENT SPECIALISTS

www.kingstonnaturalhealth.co.uk
Bodi Clinic
Caring for you
E-Mail: bodiclinic@live.com
31, Old London Road,
Kingston, KT2 6ND.
07881 492 600
(For Tamil)
020 8549 8000
நீங்கள் நீண்ட கால நோயால் அவதிபடுபவரா ?
மாற்று முறை சிகிச்சைகளை தேடுபவரா ?
ஆஸ்துமா, மூட்டு வாதம், தலைவலி, உடற்பருமன், முடி உதிர்தல், தோல் வியாதிகள், விளையாட்டுக் காயங்கள், நீரிழிவு, மன உளைச்சல், இரத்த அழுத்தம் போன்ற சகல வித வியாதிகளுக்கும் சிறந்த முறையில், பக்க விளைவுகளற்ற சிகிச்சை அளிக்கப்படும்

Only by appointments
Dr.ச.முத்துலிங்கம்
(DHMS, Dr.Ac, MCThA, HMA, M.F.Hom, P.G.Hom, ITEC)
Homeoepathy / Sports Therapy / Acupuncture மருத்துவ ஆலோசனை தமிழில் வழங்கப்படும்
Are you suffering from long term medical conditions?
Looking for alternative?
Cholesterol, Diabetes, Blood Pressure and Weight Issues can be managed successfully!
A wide range of conditions can be treated successfully!
Home visits available Charges apply
Addictions, Allergies, Anxiety, Arthritis, Asthma, Back Pain, Constipation, Depression, Digestive Problems, Emotional Problem, Fertility Problem, Headache, Hair loss/Dandruff, Indigestion, Insomnia, Menopause, Menstrual, Mugraine, Obesity, Pain Management, Reproductive Problem, Sciatica, Stress, Skin Disorders, Sexual Disorders, Sports Injuries
'Fully Insured and Registered'

# விலாசம் மறந்த வீரனின் சுவடுகள்



## சாந்தி ரமேஷ் வவுனியன்

*(முல்லைமண் வலைத்தளத்தில் சாந்தி ரமேஷ் வவுனியன் எழுதிய நினைவுக்குறிப்பிலிருந்து முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம் - நன்றி சாந்தி)*

### தளபதி ஜெயம் (பாலகுரு சுகேந்திரன்)

வெற்றிகளுக்கு விழுதான வேர்களை உலகம் என்றைக்கும் உணர்ந்து கொள்வதில்லை. வீரத்தின் வேர்களுக்கான விலாசங்களும் அப்படியே வெளியில் அவை ஒருபோதும் வெளிச்சமிடப்படுவதில்லை. இத்தகைய வேராக வெளியில் வராத விலாசமாக எங்களோடு எங்கள் மக்களோடு வாழ்ந்து வரலாறாகிப் போனவர்களில் தளபதி ஜெயமண்ணாவும் ஒருவராக வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட ஒரு அற்புத மனிதன்.

கதாநாயகத் தகுதியையோ கவர்ச்சியான மேடைப்பேச்சு வல்லுனர்களையோ புலிகளின் பாசறைகள் வளர்த்ததில்லை. தலைவனின் வேதம் போல 'சொல்லுக்கு முன் செயல்' இதுவே விடுதலைப்புலிகள் வரலாற்றின் வெற்றி. திறமைகள் மட்டுமே அந்தந்த தகுதிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பாசறைகளிலிருந்து வளர்ந்து வெளிவந்த வரலாறுகளே ஜெயமண்ணா போன்ற தளபதிகளுக்கான விலாசங்களும் தகுதிகளும்.

வன்னிக்கிராமங்களில் ஒன்றான பாவற்குளம் மண்தான் சுகேந்திரன் என்ற ஜெயமண்ணாவைப் பெற்ற தாய்மடி. பாவற்குளம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் பின்னர் தொடர்ந்து வவுனியா மகாவித்தியாலயத்திலும் கல்வியைக் கற்றுக் கொண்டிருந்தார்.

சிங்களம் திட்டமிட்டு தொடர்ந்த தமிழின அழிப்பானது வன்னிக் கிராமங்களையும் அச்சுறுத்திக் கொண்டேயிருந்தது. சிங்கள எல்லைக் கிராமங்களிலிருந்து வருகிற சிங்களத்தினால் பாவற்குளம் போன்ற கிராமங்களின் வாழ்வுரிமையும் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டேயிருந்தது. விவசாயத்தையே பலமாகக் கொண்ட இந்தக் கிராமங்களில் விவசாயிகளின் கால்நடைகளை திருடுவது முதல் இங்கு வாழ்ந்த தமிழர்களின் உயிர்களுக்கும் உத்தரவாதமில்லாத காலம் அது. ஒவ்வொரு தமிழரையும் போராடு என்ற விதியையும் எழுதிய காலமும் அதுவே.

காலம் சுகேந்திரனை புலியாக்கியது. இந்தியாவில் 3வது பயிற்சிப்பாசறை போராளியாய் புடம்போட்டு வளர்த்துத் தாயகம் அனுப்பியது. அச்சுறுத்திக் கொண்டிருந்தவர்களுக்கு அச்சுறுத்தலாக ஜெயமண்ணா ஆயுதம் தாங்கிய வீரனாய் தோழர்களுடன் நிலத்தில் வந்திறங்கிய போது அந்தப் பாதங்கள் பதிந்த இடங்களெங்கும் தலைநிமிர்ந்தது. வன்னியின் வீரவரலாற்றுக் கதைகளாக வீழ்ந்த வீரத்தின் நிமிர்வாக ஜெயமண்ணாவின் பணி வன்னி நிலத்திலும் வன்னிக் காடுகளிலும் ஆரம்பித்திருந்தது.

இந்தியாவிலிருந்து பயிற்சி முடித்து தாயகம் திரும்பிய ஜெயமண்ணா புதிய போராளிகளை உருவாக்கும் பொறுப்பில் பணியை ஆரம்பித்தார். துணுக்காய் தென்னியங்குளம் பயிற்சி முகாமின் பயிற்சியாசிரியராகினார். இங்கிருந்தே வன்னிக்கான பணிகளுக்கான அணிகள் பிரித்து அனுப்பப்பட்டது. இங்கிருந்தே ஜெயமண்ணா வவுனியா மாவட்ட பணிக்காக போராளிகளோடு அனுப்பப்பட்டிருந்தார்.

ஆரம்பகால சண்டைகளான கொக்குளாய் தாக்குதல் அணியில் ஒரு அணியோடு களம் சென்றது மட்டுமன்றி பூனகரி 4ம் கட்டைச் சண்டை, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் என பல சண்டைகளிலும் பங்கேற்றிருந்தார். ஆரம்ப காலம் மிகவும் சிரமங்களைச் சந்தித்த கடுமையான சண்டையனுபவங்கள். பின்னர் பெரும் தளபதியாய் நிமிரும் வரையான ஜெயமண்ணாவின் ஆற்றலின் அடையாளங்களும் சாதனைகளும் கால நதியோடு தானும் கைகோர்த்துக் கொண்டே நடந்தது.

1990இந்திய இராணுவ வெளியேற்றம் நிகழ்ந்து புலிகளின் போரியல் வீச்சும் மாற்றம் கண்ட காலம். 90இற்குப் பின்னர் தலைவரின் பாதுகாப்பு பணியில் செயற்படத் தொடங்கினார். தலைவனின் நம்பிக்கை, தலைவனின் பாதுகாப்பு, போராளிகளின் அன்பையெல்லாம் பெற்றிருந்த போராளியின் தியாகத்திற்குச் சவாலாக 1993 காலப்பகுதி அமைந்தது. தலைவனை தலைவனின் பாதுகாப்பை தமிழரின் விடிவையுமே சிந்தித்துக் கொண்டிருந்த ஜெயமண்ணா அக்காலத்தில் நிகழ்ந்த அத்தனை துயர்களையும் தாங்கினார். தனது கொள்கையில் என்றுமே தலைவனுக்குரிய போராளியாகவே வாழ்ந்தார். அக்காலத்தில் நிகழ்ந்த கசப்பான அனுபவங்கள் யாவையும் உறுதியோடு கடந்தார். தளபதியாக என்றும் கோலோச்ச விரும்பாத தளபதி. ஒரு வீரவேங்கையாக இறுதிவரை வாழ்ந்து வன்னியில் அமைந்த துயிலிடம் ஒன்றில் தன்னை விதையாக்கவே விரும்பிய சுய நலம் மறந்த மக்கள் மனங்களை வென்ற மாவீரன்.

உண்மைகள் ஒருபோதும் உறங்காது என்ற உண்மையை ஜெயமண்ணாவின் காலம் மீண்டுமொருமுறை உணர்த்தியிருந்தது. அமைதியோடு ஏற்பட்ட கசப்புகளை கவலைகளையெல்லாம் தகர்த்தெறிந்து மெல்லெனப் பாய்ந்தோடிய ஜெயம் என்ற நதியின் கால்கள் உண்மையை வெளியில் கொண்டு வந்து தன் இலக்கில் உறுதியோடு பயணித்தது.

♦ ♦ ♦ ♦ ♦ ♦

புலிகளின் போராட்ட வரலாற்றில் ஜெயசிக்குறு சமரானது புதிய வடிவத்தில் நடைபெற்ற சமராக வரலாற்றில் பதிவாகியது. இப்பெரும் சமரில் களமுனைத்தளபதிகளாக கேணல் தீபன், கேணல் ஜெயமண்ணாவின் படையணிகளின் பங்கானது அந்தச் சமரின் வெற்றியில் கணிசமான பங்கை வழங்கியது.

அடுத்து புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட கிளிநொச்சி முகாம் அழிப்பு நடவடிக்கையில் திருவையாறு பகுதியால் சென்ற அணியின் தளபதியாக ஜெயமண்ணாவும் அவரது படையணியும் சென்றிருந்தது. புலிகளினால் வெல்லப்பட்ட கிளிநொச்சி வெற்றியில் ஜெயமண்ணாவும் அவரது படையணியும் தங்களுக்கான கடமையை முடித்தார்கள். மீண்டது கிளிநொச்சி.

எப்போதுமே தனக்கு வழங்கப்படும் பணியை நேர்த்தியுடன் செய்து முடிக்கும் தளபதியாகவே ஜெயமண்ணா வெற்றி தந்த சமரான கிளிநொச்சி மீட்பிலும் பங்காற்றியிருந்தார்.

அடுத்து வீழ்ந்தது ஆனையிறவு முகாம். எத்தனையோ இழப்புகளை 1991இல் இருந்து ஆனையிறவு மீட்புக்காக இழந்ததற்கான பலன் 2000ம் ஆண்டு புலிகளால் ஆனையிறவு வெற்றி கொள்ளப்பட்டது. உப்பளக்காற்றில் வாசனையில் ஜெயமண்ணாவின் பணிகளும் கலந்தேயிருந்தது. ஆனையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து யாழ்மண்நோக்கிய புலிகளின் பாய்ச்சலிலும் ஜெயமண்ணாவின் தடங்களும் அந்த வெற்றியில் பதிந்திருந்தது. 2001இல் நடைபெற்ற தீச்சுவாலை நடவடிக்கையிலும் ஜெயம் என்ற ஆளுமையும் ஆற்றலும் தனது கடமையில் பின்செல்லாமல் முன்னேறிச் சென்ற சாதனையாளன்.

கால ஓட்டம் ஜெயமண்ணாவின் திறனையும் தன்னோடு எழுதிக் கொண்டே சென்றது. புலிகளின் வேவு அணியின் வளர்ச்சியானது புதிய பரிமாணத்தையும் புதிய வடிவத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டிய காலத்தின் வேகத்தில் வேவு அணியின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார் ஜெயயமண்ணா.

அதிகளவிலான போராளிகளை உள்வாங்கி உருவாக்கி வேவு அணியின் வீரியத்தை வேகப்படுத்திய பெருமையின் வேரில் ஜெயமண்ணாவின் அர்ப்பணிப்பும் தியாகமும் வெளியில் தெரியாது. ஆனால் வேங்கைகளின் வரலாற்றில் மாற்றத்தைக் கண்ட அணியாகும்.

♦ ♦ ♦ ♦ ♦ ♦

1998காலம் மன்னார் மாவட்டத்தின் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டு மன்னாரில் தனது பணிகளை ஆரம்பித்திருந்தார். போராட்டத்தில் இன்னொரு இக்கட்டான காலத்தை புலிகள் எதிர் கொண்ட காலமாக அமைந்த அக்காலத்தில் ஜெயமண்ணாவின் ஆற்றலும் சாதனைகளும் காலங்களால் மறக்க முடியாத பதிவுகள்.

அப்போது தலைவரால் மாவட்டப் பொறுப்பாளர்களிடம் மாவீரர் துயிலுமில்லங்கள் பொறுப்பும் வழங்கப்பட்டிருந்தது. மாவீரர் துயிலுமில்ல வடிவமைப்பு, பாதுகாப்பு, கவனிப்பு அந்தந்த மாவட்டங்களுக்கு உரிய மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு உரிய கடமைகளுடன் ஒன்றாக வழங்கப்பட்டிருந்தது.

களமுனைப்பகுதி பிரதான தளபதிகளான தளபதி தீபன் கிளிநொச்சி துயிலுமில்லம், தளபதிபானுவன்னிவிளாங்குளம்துயிலுமில்லம், தளபதி துர்க்கா ஆலங்குளம் துயிலுமில்லம், தளபதி கேணல் சங்கர் முள்ளியவளை துயிலுமில்லும், பாலதாஸ் பண்டிவிரிச்சான் துயிலுமில்லம், கேணல் ரமேஸ் விசுவமடு துயிலுமில்லம் என வழங்கப்பட்டிருந்தது.

தமிழீழக் கனவோடு களமாடி வீரச்சாவடையும் ஒவ்வொரு மாவீரரின் கல்லறைகளையும் தானே நேரில் நின்று வடிவமைப்பாளர்களோடு தானும் பணியாளனாகி மாவீரர்களின் கல்லறைகளை வடிவமைத்து முழுமையான வெற்றியை அடைந்தவர் என்றால் அதில் ஜெயமண்ணா தான் முதன்மையானவர்.

மாவீரர் துயிலுமில்லங்களை வடிவமைக்க வழங்கப்படும் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. ஆனால் கொடுக்கப்பட்ட வளங்களைவைத்து மிகவும் பிரமாண்டமாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் மாவீரர் துயிலுமில்லங்களை செய்து முடித்த தளபதியாக தலைவரால்பாராட்டுப் பெற்ற ஒரேயொரு தளபதி ஜெயமண்ணாவே.

ஆண்டான்குளம் துயிலுமில்லத்தின் உறுதியின் உறைவிடத்தின் கல்லறை வடிவமைப்பை மிகவும் நேர்த்தியாகச் செய்து முடித்தார். அதே போல மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லத்தின் கல்லறைகள் வடிமைப்பில் ஜெயமண்ணாவின் பணியை அர்ப்பணிப்பை மறக்கவே முடியாதளவு சிறப்பாகச் செய்து முடித்தார்.

மாவீரர் துயிலுமில்லங்களில் அமைக்கப்பட்ட களஞ்சிய அறைகளில் சிலமணிகள் ஓய்வெடுத்துக் கொண்டு கால நேரமின்றிச் செயற்பட்டு மாவீரர்கள் உறங்கிய மாவீரர் உறங்குமிடங்களை உருவாக்கும் பணியில் ஒரு சாதாரண பணியாளனாகிச் செயற்பட்ட தளபதி.

ஒரு தளபதியாக அந்த மாவட்டத்தின் நிர்வாக விடயங்கள் முதல் கிராமங்கள் ரீதியான நிர்வாக ஒழுங்குகளையெல்லாம் ஒருங்கே கவனிக்கும் பாரிய பொறுப்பினை இலகுவாகச் செய்து கொண்டதோடு மக்களோடு மக்களாகி அவர் களது பிரச்சனைகள்...

*(தொடர்ச்சி 24ம் பக்கம்)*

முன்னணி தமிழ் தொலைக்காட்சிகளுடன் அனைத்து SKY சனல்களும் £ 200 இருந்து

079 4715 9598 - 074 2472 6790

KATPY SATELLITE கற்பி சட்ரலைற்

Satellite & Communication Experts, Satellite Dishes, Satellite Receivers, New Installation, Troubleshooting, Upgrades

Special Offer £150

சட்டலைட் திருத்த வேலைகள் சகல இடத்தில் பொருத்துதல் மற்றும் டிஸ்க் பொருத்த முடியாத இடங்களில் இன்டர்நெற் தொலைக்காட்சி (IP Tv) பொருத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்

சகலவிதமான சட்டலைட் தொலைக்காட்சி இணைப்புக்களையும் சட்டலைட் ரிசீவர்களையும் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# வெற்றி பெற்ற இந்திய ஜனநாயகமும் தமிழர் தேசியமும்

பாகம் 154

ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி நாற்பத்தியேழு ஆகஸ்டு பதினைந்தில் இந்தியா பிரித்தானியாவிடமிருந்து பெற்ற சுதந்திரத்தின் அர்த்தத்தை நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் போதுதான் முழுமையாக இந்திய மக்கள் உணர்ந்து நடந்திருக்கிறார்கள். தெற்காசியாவின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் மக்கள், சுதந்திரத்திற்குப் பின்னர் தங்களது வாக்குப்பலத்தினால் இந்தியாவின் பாரம்பரிய மன்னராட்சி முறையிலமைந்த வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள். சாதாரண நடுத்தரக் குடும்பத்திலிருந்து வந்த திரு நரேந்திர மோடியிடம் இந்திய மக்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். மேற்தட்டு வர்க்கத்து நேரு பரம்பரையினரின் தலைமையை அடியோடு வெறுத்தொதுக்கியிருக்கிறார்கள்

டெல்லியில் காங்கிரஸ் மண் கவ்வியதைவிட தமிழ் மக்களுக்கு மிகவும் பிரதானமானதாயிருப்பது ஐயா கருணாநிதியவர்களின் தோல்விதான். வாரிசு அரசியல் நடத்திய திமுக தலைமைக்கு தமிழக மக்கள் தக்க பாடம் படிப்பித்திருக்கிறார்கள். 'எல்லோரையும் சிலகாலம் முட்டாள்கள் ஆக்கலாம். சிலரை எல்லாக் காலமும் முட்டாள்கள் ஆக்கலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் முட்டாள்கள் ஆக்க முடியாது.' என்ற ஆபிரகாம் லிங்கனின் பிரபல்யமான வரிகள் கலைஞரின் தோல்வியைப் பற்றிச் சிந்திக்கும்போது ஞாபகத்துக்கு வருகின்றன.

பழுத்த அரசியல் வாதியும் தமிழறிஞருமாகிய கலைஞர் கருணாநிதி பெருமளவு சொத்துச் சேர்த்து, தனக்கும் தன் குடும்பத்தவர்களுக்குமே பொது அரசியலில் முன்னுரிமை அளித்து, தனது தொண்டர்களைப் பின் தள்ளியபடி கோலோச்சிக் கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் அவருக்கு எதிரான கிளர்ச்சி அலை மேலெழுந்து தற்போது அவரை மூழ்கடித்து விட்டது. பாவம், தமிழர்களுக்குக் கிடைத்த மிகவும் அரசியல் அனுபவம் மிக்க தலைவரான அவரது அந்திம காலத்தில் அவர் நேர்மையான ஒரு தலைவரல்ல என்ற கறை அவர் மீது படிந்துவிட்டது.

ஈழத் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைக்கு உள்ளான போது அதனை மத்திய அரசில் தனக்கிருந்த செல்வாக்கினால் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டிய கலைஞர், உள்ளத்தில் கள்ள மனத்தோடு சரித்திரத்தில் என்றும் இடம் பெறப் போகும் ஒரு உண்ணாவிரத நாடகத்தை ஆடி முடித்தார். தனது காலை ஆகாரத்தைப் பத்து மணியளவில் வீட்டில் முடித்துக் கொண்டு நேரே பந்தலுக்குச் வந்தவர், தான் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துவிட்டு மத்தியானச் சாப்பாட்டு நேரம் வரை அங்கிருந்தார். பின்னர் இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப் பட்டுவிட்டன, தற்போது அங்கு யுத்த நிறுத்தமும் சமாதானமும் ஏற்படுத்தப் பட்டு விட்டது என்று ஓர் பச்சைப் பொய்யை அவிழ்த்து விட்டு மத்தியானச் சாப்பாட்டிற்கு வீட்டுக்குப் போய்விட்டார். ஈழத் தமிழினம் அதன் பிறகுதான், பல்லாயிரக் கணக்கில் கொத்தணிக் குண்டுகளால் இனப் படுகொலைக்கு ஆளாகியது. ஒரு சிறு அழுத்தத்தைத் தானும் இந்திய மத்திய அரசின் மேல் கலைஞர் கொடுத்திருந்தால் இத்தனை அழிவுகளையும் தடுத்திருக்கலாமென்று அரசியல் விமர்சகர்கள் கூறுவதோடு, நேர்மையற்ற பொதுசனத் தலைமைக்கு அவரை உதாரணம் காட்டுகின்றனர்.

கலைஞர் தன் சொற்சிலம்பங்களால் தமிழக மக்களை மட்டுமல்லாது உலகத் தமிழர் அனைவரையுமே ஏமாற்றிக் கடைசியில் தான் முட்டாள்களென்று நம்பிய தமிழக மக்களாலேயே மிக மோசமாக ஏமாற்றப்பட்டுப் போனார். எதிர்கால இளஞ்சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய கலைஞர் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்' என்னும் சிலப்பதிகார நீதிக்குத்தான் முன்னுதாரணமாக இருக்க லாயக்கு என்னும் நிலைக்குத் தரம் தாழ்ந்தது, அனைவருக்குமே ஓர் நல்ல பாடமாகிவிட்டதை மறுக்க முடியாது. எனினும் மிகச் சிறந்த உழைப்பாளியான கலைஞர் தமிழ் இலக்கிய உலகில் நீண்டகாலம் பேசப்பட வேண்டியவராகவே என்றும் இருப்பார் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்..

## அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, இந்தியாவை ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன கூட இருந்த குரங்குதான் ஆண்டாலென்ன என்னும் நிலையே தொடர வாய்ப்பிருக்கிறது. பாரதீய ஜனதா அமோக வெற்றி பெற்ற கையோடு தன்னைச் சூழவுள்ள தெற்காசிய நாடுகளுடனான உறவுகளைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு அனைத்துத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனாலும், தமிழர்களின்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் இலங்கை அரசின் தலைவர், தனது பரிவாரங்களுடன் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ள விருக்கிறார் என்பது கொஞ்சம் மனக்கிலேசத்தை ஏற்படுத்தும் விடயமாகவேயிருக்கிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் முறையே காங்கிரஸும் ஐதேகவும் ஆட்சியிலிருந்த போது கைச்சாத்தான இலங்கை இந்திய ஒப்பந்தம் தான் இன்றுவரை நமக்குள்ள ஒரே ஆதரவாக இருக்கிறது. இன்று ஐதேகவும் இல்லை காங்கிரஸுமில்லை. பாரதீய ஜனதாவுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு வலுச்சேர்க்க வேண்டுமென்ற எந்தக் கட்டாயமுமில்லை. அதே வேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய வேண்டுமென்ற நோக்கமே மேலோங்கி நிற்கிறது. இத்தகைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை எவ்வாறு கையாளப்படப் போகின்றது என்பதை யாரும் எதிர்வுகூறமுடியாது. பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆனாலும், தமிழகத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் மாநிலக் கட்சியான அதிமுக வெற்றி பெற்றிருப்பதால், தமிழக மக்களின் ஒருமித்த குரலுக்குச் செவி சாய்க்க வேண்டிய கடப்பாடு மத்திய அரசுக்கு உண்டு. ஈழத் தமிழர் பிரச்சனைக்கு முன்னுரிமை கொடுத்துத் தமிழக மக்களின் வாக்குகளை அள்ளிக் கொண்ட அதிமுக ஒட்டு மொத்தமாகப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் தேசியத்தை இந்தியாவின் பெரும்பான்மை இலகுவில் தூக்கியெறிந்துவிட முடியாது. அப்படிச் செய்வது இந்திய ஜனநாயத்தை அர்த்தமற்ற தாக்கிவிடும். இவ்வளவு காலமும் காங்கிரஸுக்கு கலைஞர் தலைமையிலான திமுக துணை நின்றது, தற்போது ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க தனித்தவோர் சக்தியாக நிமிர்ந்து நிற்கின்றது. காங்கிரஸ் தமிழக அரசியல் அரங்கிலிருந்து துடைத்தெறியப் பட்டிருக்கிறது.

கலைஞரையும் அவரது கும்பலையும் இனங்கண்டு கொண்ட தமிழர்கள் அவர்களைத் தூர வீசியெறிந்து விட்டு அதிமுகவைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தமிழர் தேசியவுணர்வு முதன்மை பெற்று நிற்கின்றது. அது உதாசீனப்படுத்தப் படுமானால் இந்திய ஐக்கியத்தில் விரிசல் விழுவதைத் தவிர்க்க முடியாது. மத்திய அரசு எவ்வளவு பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும், தம்மை ஆதரிக்காத மாநில மக்களின் வேண்டுதல்களுக்குச் செவிசாய்க்க வேண்டிய கடப்பாடடைக் கொண்டிருக்கிறது. அதனால் தற்போது ஈழத்தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு அ.தி.மு.கவுக்கு நிறையவே வந்திருக்கிறது. அதனை உரிய வகையில் ஜெயலலிதா அரசு கையாளுமென எதிர்பார்ப்போம். ஈழத் தமிழர்களாகிய நாமும் புதிய இந்திய அரசுடனும், அமோக வெற்றி பெற்ற தமிழக அதிமுக அரசுடனும் நெருங்கிய உறவுகளைப் பேணி எமது உரிமைகளைப் பெறத் தொடர்ந்து உதவுமாறு வேண்டுவோம்.

### *வரலாற்றில் அழிக்கப்படமுடியாத முள்ளி வாய்க்கால் இனக்கொலை*

தமது சொந்த நாட்டின் அரச இராணுவத்தாலேயே கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளை நினைவு கூர்ந்து ஒரு மெழுகுவர்த்தியைத்தானும் ஏற்றவிடாது தாயத்தில் எமது உறவுகள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். உலகத்தில் யுத்தத்தில் உயிரிழந்த தமது இராணுவ வீரர்களின் நினைவாகப் பலநாடுகள் நினைவிடங்களை அமைத்து அதைப் பாதுகாத்து வருகின்றன. இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது இறந்தவர்களின் கல்லறைகளை பிரிட்டன் இன்றும் பல நாடுகளில் பாதுகாத்துப் பராமரித்து வருகிறது. இலங்கையிலும் திருகோணமலை போன்ற இடங்களில் அத்தகைய யுத்தகால நினைவு மயானங்களுண்டு.

தனது நாட்டில் ஆக்கிரமிப்பு இராணுவமாக இருந்த பிரித்தானிய இராணுவத்தின் கல்லறைகளையே வைத்துப் பாதுகாக்க இடமளித்திருக்கும் இலங்கை, தனது கையாலேயே கொன்று குவித்த அப்பாவிப் பொதுமக்களுக்காக ஒரு நினைவஞ்சலிக் கூட்டத்தைத்தானும் நடத்தத் தமிழ் மக்களை அனுமதிக்கவில்லை. அப்படி அனுமதித்தால் தான் செய்த இனக்கொலையை ஏற்றுக்கொண்டதாகிவிடும், தற்போது, தான் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சூழ்நிலையில் உலகம் அதனை உற்று நோக்கும், அந்தப் படுகொலைகளைச் சரித்திரத்தில் பதியவிடாமல் தடுத்துவிடவேண்டுமென்ற நோக்கிலேயே இலங்கையரசு இந்தக் கபடத்தனமான தடையைத் தமிழினத்தின்மீது சுமத்தியிருக்கிறது. ஆனால் எழுதப்பட்ட சரித்திரம் அழிக்கப்படப்போவதில்லை. வரலாற்றை மாற்ற யாராலும் முடியாது. அது காலம் சொல்லும் கதை.

**தமிழர் அரசியலில் தலைமை தாங்க வரும் எந்த அரசியல்வாதிக்கும் தக்கதோர் பாடமாக அமைந்து விட்ட ஐயா கருணாநிதியின் கதையும் ஓர் மறக்கப்பட முடியா வரலாறாகவே தமிழர் சரித்திரத்தில் பதியப்பட்டுவிட்டது.**

வேண்டுமானால் யாராவது மாற்றி எழுத முயற்சிக்கலாம். ஆனால் உலகத் தமிழினத்தின் நெஞ்சில் கல்மேலெழுத்தாக ஆழப்பதிந்துவிட்ட அந்தக் கொடுமையைத் தமிழினம் ஒரு போதும் மறக்காது. தனக்கு நேர்ந்த அநியாயத்தை மறந்துவிடும் சொரணை கெட்ட இனம் உருப்படாது. தமிழினம் அந்த அளவிற்கு இன்னும் சொரணை கெட்டுப்போய்விடவில்லை. எமக்கு நேர்ந்த அனியாயம் தமிழ்நாட்டின் நெஞ்சை உலுக்கியதாற்தான் இன்று அந்த அநியாயத்தைக் கண்டும் காணாததுபோல் நடித்த கலைஞர் கருணாநிதியின் அரசியற் தலைமைத்துவம் அடியோடு பிடுங்கியெறியப் பட்டிருக்கிறது.

**ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, இந்தியாவை ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன கூட இருந்த குரங்குதான் ஆண்டாலென்ன என்னும் நிலையே தொடர வாய்ப்பிருக்கிறது.**

தமிழர் அரசியலில் தலைமை தாங்க வரும் எந்த அரசியல் வாதிக்கும் தக்கதோர் பாடமாக அமைந்துவிட்ட ஐயா கருணாநிதியின் கதையும் ஓர் மறக்கப்பட முடியா வரலாறாகவே தமிழர் சரித்திரத்தில் பதியப்பட்டுவிட்டது.

முள்ளிவாய்க்காலில் இராணுவ வன்முறைக்குப் பலியாகிப்போன எம் தாயக உறவுகளுக்கும், அந்த வன்முறையைக் கடைசி வரை எதிர்த்து நின்று தம் உயிர்களை அர்ப்பணித்த எமது மாவீரர்களுக்கும் அஞ்சலிகளை அலசுவாரம் வாசகர்கள் சார்பாகத் தெரிவிக்கிறேன்.

*- தொடருவம்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



**seven | zero**
graphic designers
**020 7043 4319**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**


EROS INTERNATIONAL
EROS INTERNATIONAL
PRESENTS
RELEASING IN UK FROM 23RD MAY
KOCHADAIIYAAN
3D TAMIL
CINEWORLD WEMBLEY
CINEWORLD FELTHAM
CINEWORLD ILFORD
CINEWORLD WANDSWORTH
VUE STARCITY BIRMINGHAM
2D TAMIL
CINEWORLD WEMBLEY
CINEWORLD FELTHAM
CINEWORLD WOODGREEN
CINEWORLD ILFORD
CINEWORLD WANDSWORTH
CINEWORLD LUTON
CINEWORLD BRADFORD
CINEWORLD MILTON KEYNES
CINEWORLD BRISTOL
CINEWORLD CRAWLEY
CINEWORLD SHEFFIELD
CINEWORLD STAPLES CORNER
CINEWORLD BIRMINGHAM BROAD STREET
CINEWORLD GLASGOW RENFREW STREET
CINEWORLD EDINBURGH
CINEWORLD CARDIFF
CINEWORLD ABERDEEN
CINEWORLD ENFIELD
SAFARI HARROW
ODEON GREENWICH
ODEON TRAFFORD
ODEON LEICESTER
ODEON COVENTRY
ODEON BRADFORD
ODEON SOUTHAMPTON
VUE CROYDON GRANTS
VUE STARCITY BIRMINGHAM
VUE HARROW
VUE STRATFORD
2D HINDI
CINEWORLD WEMBLEY
CINEWORLD FELTHAM
CINEWORLD WOODGREEN
CINEWORLD ILFORD
CINEWORLD WOLVERHAMPTON
CINEWORLD ASHTON UNDER LYNE
CINEWORLD BOLTON
CINEWORLD NOTTINGHAM
CINEWORLD SHAFTESBURY AVENUE
EMPIRE SLOUGH
SAFARI HARROW
ODEON TRAFFORD
ODEON LEICESTER
MEDIA1NE
சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்
தீபிகா படுகோன்
EROS INTERNATIONAL
கோச்சடையான் 3D
THE LEGEND KOCHADAIIYAAN
சௌந்தர்யா ரஜினிகாந்த் அஸ்வின் | A.R.ரஹ்மான் | K.S.ரவிகுமார்
வைரமுத்து - வாலி | ரசூல் பூக்குட்டி | R.மாதேஷ் | ஆண்டனி
சுனில் லுல்லா - சுனந்தா முரளி மனோகர்
www.seyonshd.com
https://www.facebook.com/seyonshd
http://www.vuin.com

# பக்கத்து வீட்டுப் பெண்

– சிறுகதை

ஒட்டுக்கேட்பது எனக்கு மிகவும் பிடிக்கும். சுவற்றில் காதை வைத்து, அடுத்தவர் வீட்டில் என்னப் பேசிக்கொள் கின்றார்கள் என்பதில் ஏனோ ஓர் ஆர்வமுண்டு. பக்கத்து வீட்டில் பேசிக்கொள்ளப்படும் மொழி எனக்குப் புரிய வில்லை எனினும்,வாக்கியங்களின் ஏற்ற இறக்கங்களை வைத்து, சண்டையா, கொஞ்சிக் கொள்கின்றனரா என்ப தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த புதுக்குடியிருப்புக்கு வந்தபின்னர், ஒட்டுக் கேட்க வேண்டிய அவசியமே இல் லாமல் போய்விட்டது.

காதில் ஒலிவாங்கியை மாட்டி, பாடல்கள் கேட்டுக் கொண்டிருந்தாலும், உள்நுழைந்து என் கவனத்தைத் திசைத் திருப்பும் அளவிற்கு பக்கத்து வீட்டில் இருந்து எப் பொழுதும் சத்தம்தான். கணவன் மனைவியா, காதலன் காதலியா என்று தெரியவில்லை.

பக்கத்துவீட்டுப் பெண் அலறிக்கொண்டே இருப்பாள். ஆண் கத்திக் கொண்டே இருப்பான். சமயங்களில் சண்டை நள்ளிரவு வரை நீடிக்கும். ஒருநாள் கதவைத் தட்டி, அமைதி காக்கும்படி சொல்லிவிடலாம் என நினைத் தேன். ஆனால் அவர்களின் ஆக்ரோசச் சண்டையில் வெளிநாட்டுக்காரனான என்னை அடித்துவிட்டால் என்ன செய்வது என்று காதில் பஞ்சடைத்துக் கொண்டு தூங்கி விடுவேன்.

ஒருநாள், பக்கத்துவீட்டு, ஆண் கதவைப் பூட்டிவிட்டுப் போவதைப் பார்த்தேன். உள்ளிருந்து பெண்ணின் குரல். எனது அடிப்படை இத்தாலிய அறிவை வைத்து, நான் புரிந்து கொண்டது,

"பூட்டிவிட்டு போகதே, நான் எங்கும் வெளியே போக மாட்டேன்".

கொடுமைக்கார காதலன் / கணவனாக இருப்பான் போலிருக்கின்றதே. தொடர்ந்து ஒரு வாரம் கவனித்தேன், பெண்ணின் கதறலை மீறி, இவன் பூட்டிவிட்டு செல் வதைப் பார்த்ததும் என்னுள் இருந்த துப்பறியும் சாம்பு விழித்துக்கொண்டான்.

ஒருநாள் எனது வேலைகளை விட்டுவிட்டு, அவனைப் பின் தொடர்ந்தேன். அவனது அலுவலகம் சென்றான். மதியம் உணவு இடைவேளையில், அருகில் இருந்த பூங்காவிற்கு வருகின்றான், மடிக்கணினியைத் திறந்து ஏதோ பார்க்கின்றான். நடைபழகுவதைப் போல அவன் பின் பக்கம் சென்று என்னைப் பார்க்கின்றான் எனப்பார்த் தேன். அவனது வீட்டில் இருந்து நேரலை ஒளிப்படம் ஓடிக் கொண்டிருந்தது. சிசிடிவி கேமரா வைத்து, பெண்ணைக் கண்காணிக்கின்றானே. தேர்ந்த கொடுமைக்காரன் போல. பக்கத்துவீட்டு வாக்குவாதங்களைப் புரிந்துகொள் வதற்காகவே இத்தாலிய மொழியை வேகமாகக் கற்றுக் கொண்டேன். வழக்கமாக ஓங்கி ஒலிக்கும் பெண்குரல் இன்று கெஞ்சிக் கொண்டிருந்தது.

"செத்துப்போய்டவா, ஒழுங்கா சொன்ன பேச்சைக் கேட்கலான்னா, உன் கண் முன்னாடியே கையை அறுத் துக்கிட்டு செத்துடுவேன், நான் வாழனும்னு நீ நினைச் சின்னா ஒழுங்க இரு, யாரையும் எதையும் செய்ய வேண்டாம்" என்றான் ஆண். பெண் கெஞ்சி கெஞ்சி அழும் குரல் கேட்டு பின் நிசப்தமானது.

மறுநாள், முதன்முறையாக பக்கத்துவீட்டு ஆண், அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வெளியே சென்று கொண்டிருந்தான். அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில், அவர்களை முந்திச் சென்று, அவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி, அவனுக்கு வணக்கம் சொன்னேன்.

நான் ஓரக்கண்ணால் பார்ப்பதைக் கவனித்துவிட்டு, சுட் டெரிப்பதைப் போலப் பார்த்தாள். பார்வையில் பயந்துப் போய், அவர்களுடன் லிஃப்டில் செல்லாமல், படியில் இறங் கிவிட்டேன். அன்றிரவு சத்தம் குறையும் என்று பார்த் தால் மறுபடியும் அதிகரித்தது. ஆண் தான் செத்துப் போகப்போவதாக மிரட்டிக்கொண்டிருந்தான். பெண் ணின் அழுகுரல். யாராவது இவனைக் காப்பாற்றுங் களேன் என்ற குரல்.

உடனடியாக பொலிஸிற்கு அழைத்து வரவழைத்தேன். அவர்கள் வீட்டின் கதவை உடைத்து, உள்நுழைய மணிக் கட்டை அறுத்துக்கொண்டு இரத்தவெள்ளத்தில் கிடந் தான். அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டான்.

அப்பெண்ணை அவ்வீட்டினில் தேடினேன். அவள் இல்லை. சன்னல் எல்லாம் அடைக்கப்பட்டுத்தான் இருந் தது. மெல்ல குடியிருப்பின் சொந்தக்காரரை நெருங்கி,

"இவ்வீட்டில் இந்தப் படத்தில் இருக்கும் பெண்ணும் இருக்கின்றாள் சார், அவளின் குரலைக் கேட்டிருக் கின்றேன், அடிக்கடி சண்டைப்போட்டுக்கொள்வார்கள், இவன் மிரட்டுவான், அவள் அழுவாள், அவளை வீட்டினுள் வைத்து பூட்டிவிட்டுப் போய்விடுவான்" அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அவள் அவனின் காதலி, சிலரால் கொடூரமாக கொல்லப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன, அவள் இறந்தபின்பு இவன் கிறுக்குப் பிடித் தவன் மாதிரி அவளின் குரலிலும் தன் குரலிலும் மாறி மாறிப்பேசிக்கொள்வான், அதைத்தான் நீ கேட்டிருப்பாய்'

அப்படியானால், அவர்கள் இருவரையும் ஒருசேர அன்று பார்த்தேனே!!, பார்த்ததை அவரிடம் சொல்லவில்லை. மருத்துவமனைக்கு விரைந்தேன். கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக மருத்துவர் சொன்னார். அவனின் நெருங்கிய நண்பன் என்று சொல்லி மன்றாடி அனுமதிப் பெற்றுவிட்டு அந்த சிகிச்சை அறைக்குள் நுழைந்தேன். அந்தப்'பேய்'ப்பெண்ணும் அங்கிருந்தாள். இந்தமுறை உக்கிரமான பார்வையில்லை.

மெல்ல கண் திறந்த பக்கத்துவீட்டுக்காரன், உடைந்த ஆங்கிலத்தில்,

" இதோ இவள் என் காதலி, இறந்துவிட்டாள். இவளுக்கு அவளைக் கொன்றவர்களைப் பழிவாங்க வேண்டும், பழிக்குப் பழிக்கூடாது என்பது என் நோக்கம். அந்த வாக்குவாதங்களைத்தான் நீ கேட்டிருப்பாயே, என்னை மீறி அவள் வெளியேபோகக்கூடாது என்பதன் உணர்வுப் பூர்வமான தடைதான் அவளை வீட்டில் வைத்து பூட்டி விட்டு செல்வது"

பேய்கள் மனிதர்களைக் கட்டுக்குள் வைத்திருப்பதைப் பற்றி படித்திருக்கின்றேன். ஆனால், ஒரு பெண் இறந்து பழிவாங்கத் துடிக்கும் பேய் ஆன பின்னரும் காதலின் அன்பின் கட்டுக்குள் இவன் வைத்திருக்கின்றானே.... "நான் என்ன செய்யவேண்டும், சொல்" என்றேன்.

"இதோ, இந்த மருத்துவக் கவசங்களை நீக்கி என்னைக் கொன்றுவிடு, இவளுடன் நான் வேறுலகத்திலாவது இணைந்து வாழ்கின்றேன்"

அந்தப்பேய்ப்பெண், உக்கிரமான பார்வையில், "இவன் வாழவேண்டும், இவனுக்கு ஏதாவது நேர்ந்தால் உன்னைக் கொன்றுவிடுவேன்"

"சீக்கிரம் என்னைக் கொன்றுவிடு" என்ற அவன் என்னைக் கெஞ்ச "அவனை ஒன்றும் செய்யாதே" என்று பேய் அலற, மருத்துவர் கதவைத்திறக்க,

அவனைக் கொன்று விடுதலை செய்யவா, கொல் லாமல் வாழவிடவா நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் நீங்களே சொல்லுங்கள்.

*- வினையூக்கி*

# விலாசம் மறந்த வீரனின்...

*(தொடர்ச்சி 24ம் பக்கம்)*

இடைஞ்சல்களை அறிந்து அதற்கான தீர்வை வழங்கும் முதன்மையான போராளியாத் திகழ்ந்தார்.

புலிகளின் அரசியல் நிர்வாக ஒழுங்குகளில் எங்கேனும் ஏற்படும் மக்களுக்கான அசௌகரியங்களை என்றுமே அலட்சியம் செய்ததில்லை. அங்கெல்லாம் தானே நேரடியாக நின்று மக்களுடன் உறவாடி அவர்களது பிரச்சனைகளை தலைமைக்கு எடுத்துச் சென்று தீர்வைப் பெற்றுக் கொடுக் கிற துணிச்சல் மிக்க மனிதன்.

குறிப்பாக தமிழீழ ஆயத்துறையின் வரி அறவீட்டு விடயத்தில் மக்கள் எதிர் நோக்கிய பிரச்சனைகளை தானே தலைமையிடம் கொண்டு சென்று சரியான தீர்வையும் பெற்றுக் கொடுத்து ஆயத்துறைப் போராளிகளின் தொடர்ந்த பணி களுக்கான வழிகாட்டியாகவும் மாறியிருந்தார். மக்களின் மனங்களை வென்று மக்களோடு நல்லுறவைப்பேணி மக்களுடனேயே வாழ்ந்தார்.

போராட்டத்திற்குத் தேவையான ஆட்திரட்டலை மிகவும் திறம்படச் செய்தவர் களில் ஜெயமண்ணாவின் பங்கு மறக்க முடியாதது. தனது பேச்சாற்றலால் உண்மைகளை உரிய நேரத்தில் வெளிப்படுத்தி பறிபோகும் நிலத்தை மீட்க போராளிகளை இணைக்க அந்த நாட்களில் மன்னாரில் ஜெயமண்ணாவின் பங்கை காலத்தினால் மறக்க முடியாது.

• • • • • •

சமாதான காலம். ஆற்றலின் வடிவமாய் அமைதியின் உருவாய் கடந்து வந்த பாதைகளின் காலத்தை வென்ற போராளியாயிருந்த தளபதி அரசியல் பேச்சு மேடைகளில் கூட வெளிநாடுகளிற்கும் சென்று வந்த அரசியல்ஞானி. என்றுமே தனது வாழ்வை தனது தாயக விடுதலைக்காகவே கொடுத்து வாழ்ந்ததோடு தனது வாழ்க்கைத் துணைவியையும் போராளியாகவே தேர்ந்தெடுத்தார்.

வெளிநாட்டு வாழ்வையும் பணபலத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையெல்லாம் பெற்றிருந்தும் கடைசிவரை தலைவனுடன் தலைவனின் பாதையில் சென்று முடியும் நினைவோடே இறுதிக்காலம் கணவன் மனைவி இருவருமே களத்தில் நின்றார்கள்.

2006 தொடக்கம் 2007 4ம் மாதம் வரையிலும் கிழக்கு மாகாணத்தில் நின்று அந்தக் களங்களை வழிநடத்திய ஆற்றலின் வடிவம். எப்போதுமே சுயநலமற்ற தேசக்காதலை மட்டுமே நெஞ்சில் சுமந்து வாழ்ந்த எளிமையின் பெருமை யெல்லாம் ஜெயமண்ணாவின் போராட்ட வாழ்வின் வித்தியாசமான சாட்சிகள். பல விடயங்களில் உதாரணமாகவும் உயர்ந்தவராகவும் வாழ்ந்து காட்டிய வரலாற்றின் புதல்வன்.

களத்தின் கடைசிச் சாட்சியங்களும் அழியவிருந்த 2009மே மாதம் 17ம் திகதி வரையும் களமாடிய வீரன். கையுயர்த்திச் சாவடையும் நிலமையை வெறுத்துக் கடைசிச் சொட்டு உயிருள்ள வரையும் எந்த மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தினார்களோ அந்த மக்களின் நினைவோடும் அந்த மண்ணின் கன வோடும் தங்கள் இறுதி மூச்சையும் இலட்சியக்கனவையும் சுமந்து கொண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் கணவன் மனைவி இருவரும் சுடுகலன்களோடே காவலிருந்தார்கள்.

வெளிநாடுகளில் இருந்த நண்பர்கள் ஜெயமண்ணாவின் துணைவி நளாக்காவை பிள்ளைகளுடன் வெளியே வருமாறு வேண்டினர். கோல்சர் கட்டீட்டன்.... பிள்ளைகளை நீங்கள் பாப்பியள் தானே...எனச் சொல்லிவிட்டு குழந்தைகள் சிந்துசை, துவாரகன் இருவரையும் கூட மறந்து இறுதி வரை போராடுவோம் என உறுதியோடு நின்ற அந்த வித்தியாசமான தம்பதிகள் இருவரையும் நினைவு கொள்ளும் நண்பர்களிடம் அவர்களது தேசம் மீதான காதலும் தேசியத்தலைவர் மீதான அன்பையும் பற்றிய ஆயிரக்கணக்கான கதைகளும் கனவுகளும் நிறைந்து கிடக்கிறது.

கடைசிக்கள முடிவினை உலகம் எப்படியோ எல்லாம் எழுதியும் ஆய்வுகள் செய்தும் கொண்டிருக்க அந்த முள்ளிவாய்க்கால் கரைகளில் தங்கள் இருவரின் உயிரையும் விதைத்து வீழ்ந்து வீமீளாத கனவுகளோடும் கலந்துபோனார்கள் தளபதி ஜெயமண்ணாவும் அவரது துணைவி நளாக்காவும்.

அவர்களது குழந்தைகளை குடும்ப உறவுகளை யாரையுமே எண்ணாது மண்ணுக்காகவே வாழ்ந்து அந்த மண்ணிலேயே மடிந்துபோனார்கள்...மறக்க முடியாத வீரமாக.... வீரர்களாக....!




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நாள் நிகழ்வுகள்

## யாழ்ப்பாணம்





## பிரான்சு














## சென்னை








# கோர்த்து விடும் செய்திகள்

### ▪ மிதிபட்ட மானம்

தாயகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு நாளின் போது காவற்துறையினர் வந்து எல்லாவற்றையும் எடுத்து எறிந்து விட்டு காலில் போட்டி மிதித்தது தீபம் அல்ல மாகாணசபைக்கு அதிகாரம் உண்டு என்று சொல்பவர்களின் மானம்.

### ▪ கொடியின்றி ஒன்றுமில்லை

நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்கள் நாள் தோறும் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என முழங்கி வணங்கிய புனிதப் பொருள் எமதி தேசியக் கொடி. அதைப் புறம்தள்ள நினைப்பது அந்த மாவீரர்களை அவமதிப்பது போலாகும். பன்னாட்டு சமூகம் எனச் சொல்லப்படும் பன்னாடைக் கூட்டத்தினருக்கு அதை விளங்கப்படுத்த வேண்டியது எமது கடமை.

அதை அவர்களுக்கு விளங்காவிட்டால் அவர்களுக்கு எமது பிரச்சனை விளங்கப் போவதில்லை. எம்மைக் கூடி நின்று அழித்த அந்தக் கும்பலுக்காக எமது தேசியக் கொடியை புறம் தள்ள முடியாது.

### ▪ இந்து இந்துவிற்கு உதவுவானா?

ஒரு இந்துப் பெண் கற்பழிக்கப்பட்டு காவற்துறையிடம் முறையிடப் போனால் அவள் தாழ்ந்த சாதியாகவும் கற்பழித்தவன் உயர்ந்த சாதிக்காரனாகவும் இருந்தால் உயர்ந்த சாதிக்காரனுக்கு எதிராக நீ குற்றம் சுமத்த வந்தாயா என ஆத்திரப்பட்டு மீண்டும் அவள் காவற்துறையினரால் கற்பழிக்கப்படுவாள்.

இப்படி நடக்கும் நாட்டில், ஈழத்து இந்துக்களை தாழ்ந்த சாதிக்காரர்கள் எனக் கருதும் நாட்டில் இருந்து எமக்கு நீதி கிடைக்குமா?

### ▪ போவாளே இத்தாலித்தாயீ மாஃபியா நகரம் நோக்கி

முதல் கட்டமாக மருமகனைக் கைது செய்து வழக்குத் தொடுக்கப் போகிறார்கள். அடுத்து, நிலக்கரி ஊழல். ஆதார்ஸ் ஊழல். பொதுநலவாய நாட்டு விளையாட்டு ஊழல் என பல பூதங்கள் கிளம்பப் போகின்றன.

அநேகமாக அடுத்த ஆண்டு இத்தாலி அம்மா இத்தாலியில் தலைமறைவாயிடுவார். சுவிஸ் வங்கி சரணம் ஐயப்பா.

### ▪ யார் ஆண்டாலும் இந்தியா இந்தியாதான்

மோடியின் பதவி ஏற்பு வைபவத்திறகு சார்க் நாடு என்ற போர்வையில் மஹிந்தரையும் அழைப்பது யார் ஆண்டாலும் இந்தியா இந்தியாதான் எனபதை உறுதிப்படுத்திவிட்டது. செல்வி ஜெயலலிதா போகாவிடில் அவரது ஆட்சியை கலைத்து விட்டு தமிழ்நாட்டில் குடியரசுக் கட்சித் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வரவேண்டும் என சுப்பிரமணிய சுவாமி தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஆரம்பமே அமர்க்களமாக இருக்கிறது.

*- ஊருளவாளி*





## பக்க வடிவமைப்பாளர்கள் தேவை

**லண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றில் பக்க வடிவமைப்பாளராக (Layout Designer) பணிபுரிய அனுபவமுள்ளோர் தேவை**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**Tel : 020 7043 4310**

Wallingtonல் மிக விரைவில் திறக்கவுள்ள

## தமிழ்க் கடைக்கு ஆட்கள் தேவை

Wallington பகுதியில் புதிதாக திறக்கவுள்ள தமிழ்க் கடைக்கு வேலையாட்கள் தேவை. தமிழ்க் கடையில் வேலை செய்த அனுபவம் வாய்ந்த ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

மீன், இறைச்சி வெட்டுவதற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

**Best Asia Supermarket Ltd.**

39-41, Stafford Road, Wallington, Surrey, SM6 9AP

உடன் மீன் மற்றும் இறைச்சி விற்பனை வாரத்தில் 7 நாட்களும் நடைபெறும்.

தொடர்புகளுக்கு - 07440259619

# ஒன்றாக அணி திரள்வதே இன்றைய காலத்தின் தேவை



## - பிரித்தானிய தமிழர் பேரவை

*மே 18ம்நாள் லண்டன் ரபல்கர் முன்றலில் பிரித்தானிய தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இனப்படுகொலை நினைவு நாள் நிகழ்ச்சியில் தேசியக் கொடி ஏற்றுவது தொடர்பில் ஏற்பட்டு சிறு சச்சரவினைப் பெரிதுபடுத்தி தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளைக் குலைக்க எடுக்கும் முயற்சிகள் தொடர்பாக மக்களை விழிப்புணர்வுடன் இருக்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை அறிக்கை மூலம் கேட்டுள்ளது. இவ்வறிக்கையின் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம். இவ்விடயம் தொடர்பாக ஏனைய தமிழ் அமைப்புகளும் தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தவார்களேயாயின் அவற்றையும் **ஒரு பேப்பர்** பிரசுரிக்கும் என்பதனை வாசகர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.*

முள்ளிவாய்க்கால் நிகழ்வில் பல அசம்பாவிதங்கள் நடந்ததாகவும் இன்னும் ஓரிரு வருடங்களில் பிரித்தானிய தமிழர் பேரவையின் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்படும் எனவும் சில தனிநபர்களும் ஒருசில தமிழ் ஊடகங்களும் விசமப் பிரச்சாரம் செய்கின்றன. இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் நடந்த சில சம்பவங்களைப் பதிவு செய்வது பேரவையின் கடமை.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரித்தானியாவிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒரு சில பொறுப்பாளர்களின் வழிநடாத்தலில் ஒரு சில இளைஞர்கள் நிகழ்வில் அத்து மீறி நுழைந்தனர். தாம் தேசியக் கொடியினை ஏற்றப்போவதாக கூறி கோஷமிட்டதுடன் பிரித்தானிய தமிழர் பேரவையினர் தேசியத்துக்கு எதிரானவர்கள் என குற்றம் சாட்டினர். தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும் பிளவுகளையும் ஏற்படுத்திய இச் சம்பவம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரமின்றி செய்யப்பட்டதாகவே நாம் கருதுகின்றோம். அவ்வாறாயின் இதனைத் தூண்டிய பொறுப்பாளர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் விழுந்து விடாமலும் அவர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்துவிடாமலும் எமது பக்க நியாயத்தையும் உண்மையினையும் எடுத்துக் கூறி அவர்களின் ஆதரவினையும் அனுதாபத்தினையும் பெற்றுக்கொள்வதற்கு, நாம் வாழும் நாடுகளின் சட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டங்களையும் மதித்து அவற்றுக்கு அமைவாக செயற்படுவது மிகவும் அவசியமானது. கடந்த ஐந்து ஆண்டுகளில் அவ்வாறு செயற்பட்டதன் விளைவாக, பிரித்தானிய தமிழர் பேரவை போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பினை செய்ய முடிந்திருக்கிறது.

தேசியக் கொடி தொடர்பில் காவல் துறை நிலமைகளுக்கேற்ப வெவ்வேறு விதமாகக் கையாள்கின்றது. நாம் எதிர்காலத்தில் ஆட்சிப் பீடங்கள் மீது அழுத்தங்களை அதிகரிக்கும் போது சட்டத்தினை எம் மீது ஏவி விடவும் தமிழர் பேரவையை தடை செய்யவும் இன்றைய சூழ்நிலையில் இடமுண்டு.

தமிழ்மக்களின் தேசியக் கொடியினை ஏற்றக் கூடாது என்ற பிரித்தானிய பொலிசாரின் அறிவுறுத்தல்கள் எமக்குத் தரப்பட்டுள்ளதால் பிரித்தானியாவின் சட்டங்களுக்கு அமைவாகவே முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

இதனை பிரித்தானிய தமிழர் பேரவை தமிழ் மக்களின் தேசியக்கொடிக்கு எதிரானது என்றும், தமிழ் மக்களின் அடையாளத்தினை இதன் மூலம் பிரித்தானிய தமிழர் பேரவை அழிக்க முற்படுகிறது என்றும், சிறிலங்கா அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் தெரிந்துகொண்டே நின்று செற்படும் சிலரும், விடயம் தெரியாமல் நின்று செயற்படும் சிலரும் விஷமப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

உண்மையில் எந்த ஒரு அமைப்பினை விடவும், பிரித்தானிய தமிழர் பேரவையே தமிழ் மக்களின் தேசிய கொடிக்கு ஒருஅங்கீகாரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு உண்மையான கரிசனையுடனும் பற்றுறுதியுடனும் செயற்பட்டிருக்கிறது. எமது தேசிய கொடிக்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் பல வேலைகளை அரசியல் ரீதியாகவும் வெகுஜன செயற்பாடுகள் மூலமாகவும் நாம் மேற் கொண்டிருக்கிறோம்.

உதாரணமாக, பிரித்தானிய பொலிசாருக்கு இது விடயத்தில் கடந்த பல மாதங்களாக பிரித்தானிய தமிழர் பேரவை தமிழ் மக்களின் தேசியக் கொடியினை அங்கீகரிக்குமாறு கோரி அழுத்தங்களை கொடுத்து வருகிறது. தேசியக் கொடியினை ஏன் பிரித்தானிய பொலிசார் அங்கீகரிக்கவேண்டும் என்று வரலாற்று ரீதியான பல உண்மைகளை கோடிட்டு ஆய்வுக் குறிப்புக்களை பிரித்தானிய தமிழர் பேரவை பொலிஸாருக்கு அனுப்பியிருக்கிறது.

இது தொடர்பில் பிரித்தானியாவில் ஒரு சுயாதீனமான சர்வஜன வாக்கெடுப்பை தமிழ் மக்கள் மத்தியில் நடாத்தி தேசியகொடி மீதான ஒட்டு மொத்த தமிழ் மக்களின் விருப்பத்தினை வெளிப்படுத்துவதற்கும் தயாராக இருப்பதாக பிரித்தானிய தமிழர் பேரவை பொலிஸாருக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருக்கிறது. தேசியக் கொடி விடயத்தில் பிரித்தானிய பொலிசாருடன் நடைபெற்ற மின்னஞ்சல், கடித பரிமாற்றங்கள் மற்றும் தயாரித்து வழங்கப்பட்ட ஆவணங்களையும் மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை தயாராக இருக்கிறது. இந்த பரிமாற்றங்களை ஊடகங்களில் வெளியிடுவற்கான அனுமதியினை பொலிஸாரிடம் கோரி இருக்கிறது. அனுமதிகிடைத்ததும் அவை பொது மக்களுடன் பகிரப்படும்.

மே 2009க்குப் பின்னர் வலுச் சமநிலை எமக்குப் பாதகமாக மாறியது. அதன் பின் சிங்கள தேசத்திற்கோ சர்வதேசத்திற்கோ தமிழர் தரப்புடன் பேசியே ஆக வேண்டும் என்பது அவசியமாகப்படவில்லை. எம் மக்கள், யாராலும் பாதுகாக்கப்படாத நிலையில் எம் மக்களுக்கு நடந்த, நடக்கின்ற கொடுமைகளை எடுத்துச் சொல்லி உலக நாடுகளின் கவனத்தினை ஈர்த்து அவர்களைப் பாதுகாக்கக் கூடிய தற்காலிக மற்றும் நிரந்தர நடைமுறைகளை செயற்படுத்த வைக்க வேண்டும் என்று தீர்மானித்தோம்.

படிப்படியாக உலகின் பார்வையில் மாற்றமும் வருகின்றது. இன்றைய நிலையில் எமது உறவுகளை காக்கவேண்டுமாயின் எமக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியமாகின்றது.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே நாம் மிகவும் கவனமாக எமது செயல்பாடுகளை அமைத்து வருகின்றோம். சர்வதேசத்தோடு நாம் அந்நியப்பட்டு நிற்பதா அல்லது சர்வதேசத்திற்கு தமிழின அழிப்பினைச் செய்யும் சிறிலங்காவினை தோலுரித்துக் காட்டி அதனை அன்னியப்படுத்துவதா என்ற தெரிவினை நாம் தீர்மானகரமாக மேற்கொள்ள வேண்டும். அதற்கேற்ற விதத்தில் எம் மூலோபாயங்களையும் செயற்பாடுகளையும் நெறிப்படுத்த வேண்டும்.

எமது போராட்டத்துக்கான அங்கீகாரமே இந்த சந்தர்ப்பத்தில் எமக்கு முக்கியமானது. பிரித்தானிய தமிழர் பேரவையின் மேடையில் பிரித்தானிய பிரதமர் ஏறி எமது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும், அத்தோடு ஐக்கிய நாடுகள் சபை எமது சுயநிர்ணய உரிமையை ஏற்க வைக்க வேண்டும் அதற்காக நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம். அதற்காக நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும்.

பிரித்தானிய மக்களின் மனத்தினை வெல்வது மிக முக்கியமானது. அதற்கான தளத்தினை உருவாக்குவது தமிழர் பேரவையின் முக்கிய வேலைத்திட்டமாக இருக்கின்றது. கோஷங்களுக்குள் மட்டும் எமது போராட்டம் நின்றுவிடுதல் ஆகாது. தமிழர்களின் அழியாச் சொத்தான அறிவை ஆயுதமாக பயன்படுத்தி எதிரியை நாம் புறமுதுகிட செய்ய வேண்டும். தமிழ் மக்களுக்குள் மட்டும் இப் போராட்டத்தின் நியாயப்பாடு முடங்கி நிற்கக் கூடாது. நடைமுறையில் செய்து காட்டி முன்னேற வேண்டும் என்பதே எம் அணுகுமுறை.

**முள்ளிவாய்க்கால் நினைவென்பது மனித இனத்துக்கு எதிரான ஓர் மாபெரும் அவலத்துக்கான நீதி கேட்கும் நாள். இதற்கு வேறு விதமாக அர்த்தம் ஏதும் கற்பிக்க முடியாது.**

இந்தப் பாதை தவறென்று யாராவது கருதுவீர்களாயின் விடுதலைக்காக இதனை விட மேலான மூலோபாயத்துடன் வேறொரு வடிவத்தில் செயல்பட்டு விரைவில் உலக அங்கீகாரத்தை எடுத்துத் தருவோம் என்று எமக்கு புதியதோர் பாதையினைக் காட்டுவீர்களானால் அதனை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டு உங்கள் பாதையில் இணையவும் நாம் தயாராகவுள்ளோம். விடுதலைக்கான உங்கள் பாதையினை மக்களுக்கும் எமக்கும் அறியத் தாருங்கள்.

தமிழீழத்தில் நடைபெற்ற அநீதிகளுக்கு ஓர் சர்வதேச சுயாதீன விசாரணை மூலம் நீதி வழங்க வேண்டும், அதற்காக சர்வதேச அரங்கில் பிரித்தானியா எமக்காக குரல் கொடுக்க வேண்டுமென பேரவை கடந்த ஐந்து வருடங்களாக பாடுபட்டு வருகின்றது, அதன் பலனாக இன்று பிரித்தானியா சர்வதேச சுயாதீன விசாரணைக்கு சாதகமாக வெளிப்படையாக குரல் கொடுக்கின்றது. நடந்தவற்றை உள்ளதை உள்ளபடி பதிவு செய்துள்ளோம், நாம் இழந்த சுதந்திரத்தை மீட்கும் பணிகள் ஆயிரமாயிரமாகக் கிடக்கின்றன. அன்றாடம் எமது உறவுகள் கொல்லப்பட்ட வண்ணம் உள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமக்குள் குரோதத்தை வளர்ப்பதும் இளைய சமூகத்தை கூறுபடுத்தி தவறாக வழிநடாத்துவதும் ஒற்றுமையைத் தகர்ப்பதுவும் விடுதலை வேண்டி நிற்பவர்கள் செய்யும் பணியல்ல.

முள்ளிவாய்க்கால் நினைவென்பது மனித இனத்துக்கு எதிரான ஓர் மாபெரும் அவலத்துக்கான நீதி கேட்கும் நாள். இதற்கு வேறு விதமாக அர்த்தம் ஏதும் கற்பிக்க முடியாது. இந் நிகழ்வை தமிழினம் மட்டும் தனித்து நின்று முன்னெடுக்காமல் எமக்காக குரல் கொடுப்போர் மற்றும் உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் எனப் பலரும் சேர்ந்து ஒன்றாக அணி திரள்வதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

*தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!*

Tamil Speaking Personal Injury Lawyer
Accident Claim | Vehicle Repair | Hire | Medical Treatment
Your Claim will be dealt by Raj Rajamohan a Tamil Speaking Personal Injury Lawyer with 12 Years Experience in pursuing a wide variety of Personal Injury Claims. He has recovered over 15 million in compensation settlements for all his valued clients over the years.
We deal with: Whiplash Injury claims from Road Traffic Accidents, Car, Van, Motorcycle, Bicycle, Bus, Taxi Passenger, Accident at Work, Slip, Trip & Fall Injury (Public/Private Property or Road), Injury Caused by an Animal, Criminal Injury Claim, Fatal Accidents, Untraced & Uninsured Drivers claim and Others.
We are authorised and regulated by the Solicitors Regulation Authority
email: raj.claim@gmail.com / raj@notmyfaultlawyers.com
We'll make your life easier by:
- Speaking the same Language.
- Written advice provided in Tamil
- Treatement & Expert medical advice arranged.
- Vehicle Inspection and Replacement Vehicle.
- Get your maximum compensation for your injuries with no deductions.
- No Obligation free Advice on Telephone
We will pay you £1000 upfront upon accepting your claim
TAXI
. Get 100% Compensation
. No Fee
- Win or Lose
NOT MY FAULT LAWYERS - Mobile : 0781 089 7754 - 4, Prince Albert Drive, Ascot, SL5 8AG

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com




## மணமகள் தேவை

1. 46 வயது, 5'11" Divorced PR in Australia, Working as a school teacher தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4904

2. 31 வயது, 5'9" Manager in Super market, Temporary visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4916

3. 41 வயது, 5'8" PR in France, working in restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4914

4. 25 வயது, 5'16" Residing in srilanka, Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4917

5. 30 வயது, 5'6" PR, Graduate, Working as a support Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4927

6. 41 வயது, 5'11" Canadian citizen, Divorced, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4928

7. 29 வயது, 5'9" Canadian citizen, Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4929

8. 30 வயது, 5'6" Doctor, Residing in Srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4932

9. 36 வயது, 5'5" British citizen, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4899

10. 36 வயது, 5'7" Residing in Srilanka, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4898

11. 32 வயது, 5'9" Asylum seeker in France, Working in Restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4890

12. 26 வயது, 5'11" Working as a Manager in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4889

13. 32 வயது, 5'4" French citizen, working in supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4887

14. 28 வயது, 5'8" Asylum seeker, Graduate, Working in Officence தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4883

15. 25 வயது, 5'7" British citizen, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4878

16. 42 வயது, 5'8" British citizen, Graduate, Working in IT field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

17. 45 வயது, 5'2" Divorced, Residing in Srilanka, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4876

18. 24 வயது, 5'5" Netherland citizen, Residing in London தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4874

19. 32 வயது, 5'9" PR, doing own business in London தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4872

20. 55 வயது, 5'4" Divorced, British Citizen, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4870

21. 37 வயது, 5'6" British Citizen, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4868

22. 35 வயது, 5'10" Residing in Srilanka, working as a contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4864

23. 42 வயது, 5'8" British Citizen, Working in Investment banking as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

24. 30 வயது, 5'6" Work permit, working in a Restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4857

25. 33 வயது, 5'6" British citizen, ACMA qualified Accountant, working as a Finance Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4854

26. 43 வயது, 5'7" Residing in Dubai, Working in IKEA as a store keeper Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4853

27. 25 வயது, 5'5" Residing in Srilanka, working தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4851

28. 33 வயது, 5'4" British citizen, Working in Super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4847

29. 46 வயது, 5'8" German citizen, Residing in UK, Working in Super market, Separated தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4845

30. 28 வயது, 5'11" Residing in uk, working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4841

31. 26 வயது, 5'7" Student visa, Working in Petrol station தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4831

32. 23 வயது, 5'1" Asylum Seeker, Working in super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4823

33. 40 வயது, 5'6" British citizen, Graduate, Divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

34. 35 வயது, 5'7" Residing in India, Graduate, working in a Private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4814

35. 32 வயது, 5'6" Travel Document, working as a customer service in Airport தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4808

36. 32 வயது, 5'4" Work permit, Working as a Financial controller தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3998

37. 27 வயது, 5'8" British citizen, Working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4811

38. 30 வயது, 5'7" PSW visa, working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4804

39. 31 வயது, 5'11" Australian citizen, Residing in Australia,Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4548

40. 39 வயது, 5'7" Engineer, Dutch Citizen, Living in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4595

41. 41 வயது, 5'8" Asylum Seeker in UK, Photographer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4786

42. 39 வயது, 5'9" British citizen, Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4782

43. 30 வயது, 5'3" Asylum seeker, Working in a Restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4778

44. 27 வயது, 5'9" Asylum seeker, Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4751

45. 31 வயது, 6'3" PR in Singapore, Working as a Senior consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4708

46. 40 வயது, 5'3" British Citizen, Working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4706

47. 26 வயது, 6'1" British Citizen, Working as a Software Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4699

48. 28 வயது, 5'8" Asylum Seeker, Working in IT field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4698

49. 50 வயது, 5'8" British citizen, widowed, working as an Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4662

50. 31 வயது, 5'8" Graduate, Student Visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4661

## மணமகன் தேவை

1. 48 வயது, 5'3" Divorced,British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4903

2. 32 வயது, 5'6" Graduate, Residing in Italy, Work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4907

3. 31 வயது, 5'2" Graduate, Residing in Srilanka, Working in Government field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4909

4. 30 வயது, 5'4" Graduate, Canadian citizen, Working in college தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4910

5. 39 வயது, 5'4" Canadian citizen, Head Teacher in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4915

6. 35 வயது, 5'4" Graduate, Canadian citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4921

7. 30 வயது, 5'4" Graduate, Residing in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4924

8. 29 வயது, 5'3" Graduate, Residing in India, Manager in Indian Travel's company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4930

9. 23 வயது, 5'4" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4902

10. 41 வயது, 5'1" British Citizen, Divorced, Working in school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4900

11. 32 வயது, 5'3" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4892

12. 24 வயது, 5'3" PR, Graduate, Residing in France தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4886

13. 25 வயது, 5'1" Residing in Srilanka, Working as a Finance Executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4885

14. 29 வயது, 5'3" Graduate, Working as Data analyst, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4884

15. 26 வயது, 5'8" Graduate, Student visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4881

16. 27 வயது, 5'6" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4869

17. 28 வயது, 4'10" Divorced, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4867

18. 34 வயது, 5'0" Residing in Srilanka, Working in Software field in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4866

19. 33 வயது, 5'4" Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4856

20. 27 வயது, 5'4" Residing in Colombo, Working as a project Manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4848

21. 31 வயது, 5'1" Residing in Canada, Canadian, Working in Fiancial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4843

22. 35 வயது, 5'0" Divorced, Residing in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4838

23. 40 வயது, 5'6" PR, Working தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4837

24. 33 வயது, 5'5" Residing in Dubai, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4829

25. 22 வயது, 5'3" Residing in Srilanka, Teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4822

26. 38 வயது, 5'1" PR in Germany, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4818

27. 27 வயது, 5'3" Residing in Srilanka, Working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4799

28. 25 வயது, 5'3" Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4796

29. 41 வயது, 5'5" Residing in France, as an Asylum Seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4795

30. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414

31. 18 வயது, 5'4" Residing in Srilanka, Working தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4794

32. 29 வயது, 4'10" Residing in Srilanka, Graduate, Working in Government job தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4832

33. 30 வயது, 5'4" British Citizen, Divorced, working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4793

34. 43 வயது, 5'3" British Citizen, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4731

35. 48 வயது, 5'3" Residing in Colombo, Working in Government job தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4721

36. 33 வயது, 5'5" Residing in Srilanka, Working தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4718

37. 36 வயது, 5'5" Residing in Srilanka, Divorced, Working in a Private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591

38. 28 வயது, 5'4" PR, Working as a Doctor in London தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4545

39. 35 வயது, 5'3" British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248

40. 26 வயது, 5'3" Danish citizen, Residing in uk, working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

41. 24 வயது, 5'5" British citizen, working in medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

42. 33 வயது, 5'6" Residing in Srilanka, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4828

43. 44 வயது, 5'4" Residing in Srilanka, Working in a Government hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4572

44. 34 வயது, 5'4" Residing in Srilanka, Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4827

45. 26 வயது, 5'1" student visa in uk, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4820

46. 24 வயது, 5'3" Student visa in uk, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4819

47. 40 வயது, 5'4" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4806

48. 34 வயது, 5'4" Permanent residence, divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4798

49. 28 வயது, 5'2" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4789

50. 22 வயது, 5'3" British citizen working as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4785

51. 45 வயது, 5'5" in srilanka working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4772

52. 40 வயது, 5'5" Graduate, Working as an Accounting executive in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4809

53. 48 வயது, 5'2" German citizen divorced working as a teacher with the child தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4770

54. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4766

55. 40 வயது, 5'10" German citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4756

56. 31 வயது, 5'6" British citizen accountant working in NHS Hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584

57. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

58. 34 வயது, 5'0" Graduate working in a IT field in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4749

59. 24 வயது, 5'3" Graduate working in a Bank in uk French citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4161

60. 38 வயது, 5'3" Graduate British citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4646

61. 43 வயது, 5'2" German citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4666

62. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519

63. 31 வயது, 5'4" Canadian, Residing in Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# போட்டித் திருவிழாக்கள்

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

எங்கள் சிறு பராயத்தில் நாங்கள் பார்த்து மகிழ்ந்த தாயகத் திருவிழாக்கள் அனேகம், யாழ்ப்பாணத்தில் தினகரன் பத்திரிகை வருடாந்தம் தினகரன் விழா என்று நடாத்தும். அது போல, ஈழநாடு பத்திரிகையும் தனது பத்தாவது, பதினைந்தாவது, இருபத்தைந்தாவது முக்கிய ஆண்டு விழாக்களை வெகுவிமரிசையாகவும் கொண்டாடிய நினைவுகளும் உண்டு. திருவிழாக்கள் கோவில்களில் நடப்பது அடுத்த விசேஷம். பொதுவாக நடைபெறுகின்ற பகல் திருவிழாக்களில் தினகரன் விழா போன்றவற்றில் மாட்டுவண்டிச் சவாரி, சைக்கிள் ஒட்டப் போட்டி மரதன் ஓட்டப் போட்டி, ஊர்திப் பவனிப் போட்டி என பல்வேறு அம்சங்கள் இடம்பெறும். ஆனால், திருவிழாக்கள் இரவில் தான் இடம் பெறும். அவை கோவில் திருவிழாக்கள் போட்டியாக நடைபெறும் திருவிழாக்கள். ஒவ்வொரு திருவிழாவுக்கும் உபயகாரர்கள் இருப்பார்கள், கொடியேற்றம் முதல் பூங்காவனம் ஈறாக இருக்கின்ற உபயகாரர்களுக்குள் எழும் போட்டி விசேட திருவிழாக்களை தூண்டிவிடும். இங்கும் கூட ஆலயங்களின் உற்சவங்களும், திருவிழாக்களும் இடம்பெறுகின்றது. ஆயினும், அங்குள்ளது போன்ற ஒளி, ஒலி வெளி நிகழ்வுகளாக இங்கு இடம்பெறுவதில்லை. பதிலாக வேறு சில விசேட நிகழ்வுகளை பொது அரங்கங்களில் பார்க்கின்றோம். ஊருக்கு ஊர் திருவிழா கொண்டாட போட்டியாக 80ஆம் ஆண்டு வரை அனேக கோவில்களில் தொடர்ந்தது. பொதுவாக திருவிழாக்கள் போட்டியாக இடம்பெறுவதுண்டு.

அளவெட்டி, புத்தூர், புன்னாலைக்கட்டுவன், கரவெட்டி யாக்கரை, நாகர் கோவில் என்பன வருடாவருடம் நடைபெறும் திருவிழாக்களால் பெயர்பெற்றவை. குறிப்பாக பூங்காவனத் திருவிழா அளவெட்டியில் 7ஆம் திருவிழாவிலும் சிகர, சப்பர சோடனைகள், வாணவேடிக்கைகள், தமிழ்நாட்டிலிருந்து பிரபல பாடகர்கள், நாதஸ்வர, தவில் வித்துவான்களின் வருகை என்பன சிறப்பூட்டும் அம்சங்களாக இந்தத் திருவிழாகளுக்கு இருந்தன. அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் ஆலயத்தின் 7ஆம் திருவிழாவுக்கும், பூங்காவனத் திருவிழாவுக்கும் போட்டி பலமாக நடக்கும். எனது சிறு வயதுச் சிறப்புகளின் பதிவுகள் இவை. இன்னும் மறக்க முடியாதவை. இந்தப் போட்டித் திருவிழாக்களில் பூங்காவனம் சுருட்டுத் தொழிலாளர்களின் உபயம். 7ஆம் திருவிழா ஒரு சமூகம் சார்ந்த தொழிலாளர்களின் திருவிழா. அம்பனை வயலைத் தாண்டி அளகொல்லை பிள்ளையார் கோவிலுக்கு அப்பால் வடக்கு அளவெட்டியில் அமைந்த கோவில் கும்பளாவளை பிள்ளையார் கோவில். பல மைல்களுக்கு அப்பால் இருந்து பார்த்தாலே மின்சார வெளிச்சம் 7ஆம் திருவிழாவை, பூங்காவனத் திருவிழாவை அடையாளம் காட்டிவிடும். மாட்டு வண்டில்களில், உழவு இயந்திரங்களில், சைக்கிள்களில் என்று படைபடையாக முன் இரவானதும் எல்லா ஊர்களிலிருந்தும் சனங்கள் திருவிழா பார்க்கக் கூடுவார்கள். சைக்கிளில் போவதுஎங்களுக்கு சுலபம். ஆனால், சைக்கிள் பாட்ஸ் டைனமோ, ஹெட்லைட், பார் கிளிப் என்பனகளவுபோகும் அபாயம் இருந்தது. இதனால் நடந்து போக மட்டும் தான் வீட்டில் அனுமதி கிடைக்கும். திருவிழா இரவிரவாக நடக்கும். அதிகாலை விடிய சுவாமி வீதி உலா வரும் போது நிகழ்ச்சிகள் அவசர அவசரமாக நிறைவுக்கு வரும். இரவு ஏழு, எட்டு மணிக்கு பிறகு இரவுச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு தான் புறப்படுவோம்.

குடும்பமாகப் போய் வெளி வீதியில் பாய் விரித்து பலரும் உட்காருவார்கள். நிகழ்ச்சிகள் கோயில் மேளத்தில் ஆரம்பமாகி தவில் வித்துவான் தட்சிணாமூர்த்தி வாக்கன் கணேஸ், சிதம்பரநாதன் கோஷ்டி என்று பிரபல தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் இரவிரவாக நடைபெறும். இடையிடையே சின்னமணிக் கோஷ்டியின் வில்லுப்பாட்டு, கண்ணன் கோஷ்டியின் மெல்லிசை நிகழ்வு, புத்தூர் சின்னமேளக் கோஷ்டியின் நடனம் என்ற பல நிகழ்வுகள் மேடையை அலங்கரிக்கும். நடனம் என்பது சின்னமேளம் தான். மூன்றாம் வீதியைச் சுற்றிலும் சிகர சப்பற மணவறைச் சோடனைகள் காட்சியளிக்கும் ஒவ்வொரு வீதியிலும் ஒரு பனை உயர சிகரங்கள் பல வர்ண சித்திரங்களுடன் அமைந்திருக்கும். இடையிடையே சப்பற மணவறைச் சோடனைகள் சுமார் 6,7 வரையான சிகரங்கள் எண்ணுக்கணக்கில் அடங்காத மணவறைகள் சப்பறங்கள் என்பன எல்லா வீதிகளையும் நிறைத்திருக்கும். போகின்ற வாசல் முதல் பத்தடிக்கு ஒன்றாக கம்பங்கள் நட்டு அவற்றில் வர்ண ரியூப் பல்ப் பூட்டி ஒளி செய்வார்கள், சிகரங்கள் மணவறைகள் ஆகியவற்றுக்கு ஒளியூட்டப்பட்டிருக்கும். வெளிப்புறத்தில் 10-12 மின்சார என்ஜின்கள் இரைச்சலோடு இயங்கி இவற்றிற்கு ஒளியூட்டிக் கொண்டிருக்கும். இரு மருங்கிலும் வர்ண வெளிச்சங்களை கம்பங்களை இணைத்திருக்கும் விளக்கை கட்ட குஞ்ச மாலைகள் முழத்துக்கு ஒன்றாக அழகுடன் தொங்கும்.

சுடச்சுட தாச்சிகளில் கடலை வறுத்து விற்கும் கடலைக் காரர்கள், சோளம், மணிலா, கடலை என்று பால்ப் பேணியால் அளந்து கடதாசிப் பைகளில் போட்டு விற்பனை செய்வார்கள். இவர்களில் பெரும்பாலான விற்பனையாளர்கள், இந்திய வம்சாவளி கிழவிகள் தான். கிழிந்து தொங்கும் அவர்களின் காது ஓட்டையில் பெரிய கடுக்கன்தோடுகளால் அவர்களுடைய காதே பெரும் ஓட்டையாக காட்சியளிக்கும். கடலைக் காரர்கள் இல்லாத திருவிழாக்கள் இல்லை எனலாம்.

கோவில் திருவிழாக்களோடு இணைந்ததாக கடலை விற்பனையும் இருந்தது. தும்பு முட்டாஸ் விற்பனை, ஐஸ்பழ வியாபாரி, ஐஸ்பழ வான், இரபர் முட்டாய் விற்பனை வியாபாரி, கடலை வியாபாரி, காற்றாடி, பனங்குட்டான், பாய், ஓலைக்குஞ்சுப் பெட்டி விற்பனை, கடக விற்பனை, அலுமினிய பாத்திர விற்பனை, பொம்மைக் கடைகள், மணிக்கடைகள் என்று வீதியைச் சுற்றிலும் அணி அணியாகக் கடைகள்.

இவற்றைவிட வாத்துக்கு வளையமிடுதல், வட்டத்திற்கு அம்பெறிதல் என்ற கட்டுப்பண விளையாட்டுக்களும் நடக்கும். வெற்றி பெற்றால் மும்மடங்கு பணம். ஆனால், ஏமாறுவது என்னவோ விளையாடுபவர்கள் தான். எலும்புக்கூடாக மாறும் பெண் என்பன போன்ற மாஜா ஜால வித்தைக் காட்சிகளும் நடந்த காலங்களும் உண்டு. அம்மம்மாக் குழல் என்ற பலூனை ஊதியும், சத்தப்படுத்தியும் சிறுவர் கோஷ்டி சிரித்து சத்தமெழுப்பியபடி சுத்தித் திரியும். இளைஞர் கோஷ்டி குஷியோடு திரியும். காதலர்கள் கூட்டம் அதிகம் காணப்படுவதும் பூங்காவனக் காட்சியில் தான். காதலர்கள் ஓடிப் போதல், பொம்பிளை தூக்குதல் போன்ற கிராமிய காதல் கதைகள் அரங்கேறுவதும் இந்தப் பூங்காவனத் திருவிழாவில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள். சுற்றி அலைந்து ஒரு புறமாக படுத்துறக்கும் சிறுவர்களின் தலை முடியை அங்குமிங்குமாக கத்தரிக்கோலால் வெட்டி, அலங்கோலப்படுத்துவதும் சில இளைஞர்களின் திருவிழாச் சேட்டைகள்.

கலை நிகழ்ச்சிகள் நடக்கும் இடத்தில் நிற்கும் கூட்டத்தை விட வீதியைச் சுற்றி வரும் கூட்டமே அதிகம். வாணவேடிக்கை, திருவிழா நிறைவு நிகழ்ச்சியாக நடக்கும். இது ஒரு அற்புதமான நிகழ்ச்சி. ஈக்கில் வானத்தால் அடுக்கப்பட்ட ஆகாயக் கோட்டை, அழகிய சப்பறம் போல் அமைக்கப்பட்டு ஒரு கம்பியில் ஓடி வரும் அனுமான் அந்த வர்ண சக்கரத்திற்கு எரியூட்டுவது போன்ற அமைப்பு வாண வேடிக்கையில் ஒரு அற்புதமான நிகழ்வு. 6-7 நிமிடங்கள் எரிந்து அந்த அழகு சப்பறம் காட்சிதரும். வானக்கார வைரமுத்து, சபாரத்தின ஐயர் ஆகியோர் தான் யாழ்ப்பாணத்தில் வழமையான வான வேடிக்கை குத்தகைக்காரர்கள். சபாரத்தின ஐயரின் அவிட்டு வானம் ஆகாயத்தில் பல வர்ணத்தை கக்கி வெடித்து சிதறும். அழகு வான வில்லையும் அந்த அழகு தோற்கடித்து விடும். திருவிழா முடிய விடிந்துவிடும், நித்திரைகளைமுகத்தோடு பாய், அலுமினியப் பாத்திரங்கள், கடலைப் பைகள் என்று தம் கொள்முதலோடு சாரிசாரியாக சனம் வீடு திரும்பும். இப்படியான திருவிழாக்கள் தமிழீழத்தில் இப்பொழுது இடம்பெறுகிறதா என்று தெரியவில்லை.

# மோடியுடன் மோதவிருக்கும்..

-12ம் பக்கத் தொடர்ச்சி

..மக்களவையின் 543 உறுப்பினர்களை மக்கள் நேரடியான வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுப்பார்கள். தற்போது மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்த கட்சிகளுமாக 335 உறுப்பினர்களை மக்கள் தேர்ந்து எடுத்துள்ளனர். பரப்புரைக்கு முப்பதினாயிரம் கோடி ரூபாக்கள் செலவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. 250 உறுப்பினர்களைக் கொண்டது மாநிலங்களவை. இதில் 238 உறுப்பினர்களை மாநில சட்ட சபை உறுப்பினர்கள் தேர்ந்து எடுப்பார்கள். மிகுதி 12 பேரையும் இந்தியக் குடியரசுத் தலைவர் நியமிப்பார். இதற்கு இலக்கியம், கலை, விளையாட்டு போன்ற துறைகளில் இருந்து ஆட்களைத் தேர்ந்து எடுப்பது வழமை. கிரிக்கெட் வீரர் சச்சின் தெண்டுல்காரையும் மாநிலங்களவை உறுப்பினராக நியமித்துள்ளார்கள். இந்தியக் குடியரசுத் தலைவரை மாநிலங்களின் சட்ட சபை உறுப்பினர்கள், மக்களவை உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்து எடுப்பார்கள். இந்தியாவில் பொதுவாக ஒரு சட்டம் நிறைவேற்றப் பட வேண்டுமாயின் பொதுவாக அதுமக்களவையிலும் மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டு அதில் இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் கையொப்பம் இடவேண்டும். புதிதாக இந்தியத் தலைமை அமைச்சரான நரேந்திர மோடிக்கு இப்போது உள்ள பிரச்சனை இது தான். முதலாவது இந்தியக் குடியரசுத் தலைவர் காங்கிரசுக் கட்சியில் இருந்து வந்தவர். இரண்டாவது தற்போது 245 உறுப்பினர்களைக் (5 பேர் மண்டையைப் போட்டுவிட்டனராம் அல்லது பதவி நீக்கம்செய்யப்பட்டிருக்கலாம்) கொண்ட மாநிலங்களவையில் முக்கிய கட்சிகளின் உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| *காங்கிரசுக் கட்சி* | *68* |
| *பாரதிய ஜனதாக் கட்சி* | *42* |
| *அதிமுக* | *10* |
| *மம்தா பனர்ஜீயின் திரிணாமுல் காங்கிரசு* | *12* |
| *மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி* | *14* |
| *முலாயம் சிங்கின் சமாஜவாதக் கட்சி* | *09* |
| *ஒரிசா நவீன் பட்நாயக்கின் பிஜூ ஜனதா* | *06* |
| *தெலுங்கு தேசம்* | *06* |
| *பொதுவுடமைக் கட்சி (CPI)* | *02* |
| *பொதுவுடமைக் கட்சி (CPI(M)* | *09* |

மிகுதி பல்வேறுபட்ட மாநிலக் கட்சிகளின் உறுப்பினர்களாகும்.

இதுவரைகாலமும் காங்கிரசுக் கட்சி பா.ஜ.கா.வின் ஆதரவுடனும் சில சட்டங்களை நிறைவேற்றியது. உதாரணமாக தெலுங்கானாவைத் தனி மாநிலமாக்கும் சட்டம் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட வேண்டியது என்ற படியால் பா.ஜ.க.வின் ஆதரவுடன் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. போதிய ஆதரவு இல்லாததால் பல சட்ட மூலங்கள் இப்போதும் நிலுவையில் உள்ளன. காங்கிரசிற்கும் அதன் கூட்டணிகளுக்கும் மொத்தமாக 102 உறுப்பினர்கள் மாநிலங்களவையில் உண்டு.

எல்லாச் சட்டங்களுக்கும் மாநிலங்களவையின் ஒப்புதல் தேவையில்லை. வரவு செலவுத் திட்டம் உட்பட்ட நிதி தொடர்பான சட்டங்களை மக்களவை நிறைவேற்றி விட்டு மாநிலங்களவைக்கு அவற்றை அனுப்பும். மாநிலங்களவை அவற்றை நிராகரிக்க முடியாது. அதில் மாற்றம் செய்யும் படி வேண்டுதல் விடுக்கலாம். அந்த மாற்றங்களின்றி மக்களவை அவற்றை நிறைவேற்றலாம்.

தற்போது உள்ள மாநிலங்களவையின் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்களின் பதவிக்காலம் 2016-ம் ஆண்டு முடிவடையும். அதன் பின்னர் அவர்களின் இடங்களுக்கு புதிதாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அப்போதும் பெரிதான மாற்றங்கள் பாஜகவினருக்கு சாதகமாக ஏற்படாது. பாராளமன்றத் தேர்தலுடன் நடந்த ஆறு சட்டசபைகளுக்கான தேர்தலிலும் பாஜக பெரிய வெற்றி பெறவில்லை. இதனால் மோடி பல சிறிய கட்சிகளுக்கு அமைச்சுப் பதவிகள் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

### ◆ கூட்டுக் கூட்டம்

மாநிலங்களவையில் நரேந்திர மோடி ஒரு சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியாது என உணர்ந்தால் அவர் இரு சபைகள் கூட்டுக் கூட்டத்தில் அதை நிறைவேற்றலாம். கூட்டுக்கூட்டம் கூட்டும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உண்டு. அது மோடியின் முதல் பிரச்சனை. அரசமைப்பு சட்டத்தின் மீது திருத்தம் கொண்டுவரும் சட்ட மூலங்களுக்கு கூட்டுக் கூட்டம் கூட்ட முடியாது. கூட்டுக் கூட்டம் கூட்டினால் அங்கு 543 மக்களவை உறுப்பினர்களும் 245 மாநிலங்களவை உறுப்பினர்களும் கூடி இருப்பார்கள். மொத்தம் 798. அதில் மோடியின் கூட்டணி கட்சியின் மக்களவை உறுப்பினர் 345 மாநிலங்களவை உறுப்பினர்கள் 42ம் சேர்ந்து மொத்தம் 386 உறுப்பினர்கள். இதற்கு செல்வி ஜெயலலிதாவின் கட்சி பெரிதும் பயன்படும். மக்களவையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படும் போதும் செல்வி ஜெயலலிதாவின் ஆதரவு மோடிக்குத் தேவை.

மொத்தத்தில் அம்மா காட்டில் மழைதான்.

# மேற்குலகக் கல்வி..

-19ம் பக்கத் தொடர்ச்சி

செய்துள்ளனர் என சிபிசி நியூஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் அச்செய்தியில் ஐம்பது இளம் பெண்கள் தப்பி ஓடிவிட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. நைஜீரிய அதிபர் குட்லக் ஜொனதன் கிறித்தவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தென் நைஜீரியாவில் வாழ்கின்றார் வட நைஜீரியர்கள் அடக்கு முறைகளின் கீழ் அல்லல் படுவதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை என வட நைஜீரியர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். பெண்பிள்ளைகளைக் கடத்தி வைத்திருக்கும் இடங்கள் நைஜீரியப் படையினர் செல்வதற்கும் கடினமான பெரிய காட்டுப் பகுதியாகும். கடத்தப்பட்ட பெண்கள் பன்னிரண்டு அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்படுகின்றார்கள். சாட், கமரூன் நாடுகளில் விற்பனை நடக்கிறதாம்.

### ◆ கல்லாதான் சொல்லும் குரான்

பொகோ ஹரம் அமைப்பின் தலைவர் அபூபக்கர் ஷெக்கெள பெரிதாகப் படித்தவரல்லர். அவர் இசுலாமிய மார்க்கத்தைப் பற்றி கற்றவரும் அல்லர். உணர்ந்தவரும் அல்லர். அந்தப் புனித மார்க்கத்திற்கோ அல்லது அதன் போதனைகளுக்கோ வியாக்கியானக் கொடுக்கும் அருகதை அற்றவர் அபூபக்கர். இவர் தன்னை உருமாற்றம் செய்வதில் வல்லவர். இவரும் பில்லாடனைப் போல் தனது அமைப்பினருடன் தொடர்பாடல்களை நேரடியாகச் செய்யாமல் ஒரு தகவல் பரிமாற்றக்காரரைப் பாவிக்கின்றார். தனது பெயரையும் அடிக்கடி மாற்றிக் கொள்வார். இவரால் அரபு உட்படப் பல ஆபிரிக்க மொழிகளை நன்கு பேச முடியும். இவர் எந்த ஆண்டு பிறந்தார் என்று கூட யாருக்கும் தெரியாது. அபூபக்கர் ஷெக்கௌவை கைது செய்யக் கூடிய தகவல்கள் கொடுப்போர்க்கு ஏழு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசு வழங்கப்படும் என அமெரிக்க அரசு அறிவித்து ஓராண்டு ஆகிவிட்டது. இதுவரை பயனில்லை.

### ◆ தலையிடும் அமெரிக்கா

நைஜீரியாவில் அரச படைகளுக்கு ஆலோசனை வழங்க தனது படைத்துறை நிபுணர்களை அங்கு அனுப்பியுள்ளது. முதலில் நைஜீரியாவிற்கு எண்மர் அனுப்பப்பட்டனர். பின்னர் சாட் நாட்டுக்கு எண்பது அமெரிக்கப் படைத்துறை நிபுணர்கள் அனுப்பப்பட்டனர்.

அமெரிக்கா எப்படி நிலைமையைக் கையாளும் எனத் தெரிவிக்கப்படவில்லை. பெரும்பாலும் அமெரிக்கவேவுவிமானங்களும் ஆளில்லாப் போர் விமானங்களும் களத்தில் இறங்கும் என எதிர்பார்க்கலாம். கடத்தப்பட்ட பெண்பிள்ளை விடுவிக்க தன்னாலான எல்லா உதவிகளையும்செய்வதாக பராக் ஒபாமா அறிவித்துள்ளார். எங்கெங்கு எண்ணெய் வளம் உண்டோ அங்கெல்லாம் அநியாயம் நடந்தால் (சில சமயம் அநியாயம் திட்டமிட்டு உருவாக்கப்படும்) அங்கு சென்று நியாயத்தைஅமெரிக்கா நிலைநாட்டும்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

# மலையாளிகளின் துரோகங்கள் - சினிமா





**சாம்ராஜ்**

இயல்பான தேடுதலில் மலையாள சினிமாவை அடைந்தவன் நான். தமிழ் சினிமாவின் போதாமையும், இலக்கிய வாசிப்பும் என்னை அதை நோக்கி ஈர்த்தன. 80 களின் இறுதியில் 90 களின் தொடக்கத்தில் மலையாள சினிமா பார்க்கத் தொடங்கினேன். யதார்த்தமான கதையமைப்பும், நம்பகமான காட்சியமைப்பும், மிகையில்லாத நடிப்பும், நகைச்சுவையும் என்னை சந்தோசப்படுத்தின. வெறிகொண்டு மலையாள சினிமா பார்க்கத் தொடங்கினேன். (நண்பர்கள் மதுரை மோகன்லால் ரசிகர் மன்றத்தின் தலைவன் நான் என்று என்னை கேலி செய்ததுண்டு.) பெரும் ஆறுதலையும், ஆசுவாசத்தையும் தந்தது மலையாள சினிமா.

கண்ணீர் மல்க வைக்கும் மலையாள சினிமாக்கள் உண்டு. தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குனர்களில் ஒருவர் ஒருமுறை சொன்னார். “சாம் மோகன்லால்தான் இந்தியாவின் தலைசிறந்த நடிகர். இதை நான் வெளியே சொல்ல முடியாது. சொன்னால் கமல்ஹாசன் கோபித்துக் கொள்வார்” என்று. பிரமாதமான நடிகர் பட்டாளம் அவர்களிடம் உண்டு. மோகன்லால், நெடுமுடி வேணு, கொடியேற்றம் கோபி, (இப்பொழுது இல்லை) ஜெகதி ஸ்ரீ குமார், திலகன், இன்னசெண்ட், மம்முட்டி, ஒடுவில் உன்னிகிருஷ்ணன்,(இப்பொழுது இல்லை) அடூர் பங்கஜம், பிலோமினா (இப்பொழுது இல்லை) கவியூர் பொன்னம்மா, முரளி, (இப்பொழுது இல்லை) சுகுமாரி, மாலா அரவிந்தன், கொச்சின் ஹனிபா, சலீம் குமார், கே.பி.யே.சி லலிதா, கொட்டாரக்கரா ஸ்ரீதரன் நாயர் , ஊர்வசி, வேணு நாகவள்ளி, ஜலஜா, சங்கராடி,(இப்பொழுது இல்லை) சீனிவாசன், ஜெயராம், கார்த்திகா, திக்குருச்சி, ஜனார்த்தனன், முகேஷ், சி.ஏ.பால் என சிறந்த நடிகர்கள் அவர்களிடம் உண்டு.

கரைந்து அழுக, சிரிக்க, உன்மத்த நிலையில் நம்மை உட்கார்த்தி வைக்க எத்தனையோ அருமையான படங்கள் அவர்களிடம் உண்டு. சிபிமலயில் இயக்கத்தில் லோகிதாஸின் திரைக்கதையில் மோகன்லாலின் ‘கிரிடம்’ படத்தை கணக்கு வழக்கில்லாமல் பார்த்திருக்கிறேன். தேசாடனம் இன்றைக்கும் என்னை கண்ணீர் சிந்த வைக்கும் படம். ஒருபாடு படங்கள். 80 களின் நடுப்பகுதி மலையாள சினிமாவின் பொற்காலம். துல்லியமான middile cinema உருவாகியிருந்தது. ஹரிஹரன், பத்மராஜன் சேது மாதவன். பரதன், வேணு நாகவள்ளி, சத்யன் அந்திக்காடு, தொடக்க கால பிரியதர்ஷன், பிளஸ்ஸி போன்ற நல்ல இயக்குனர்களும், எம்.டி.வாசுதேவன் நாயர், சீனிவாசன் போன்ற திரைக்கதை ஆசிரியர்களும் உண்டு.

மரித்துப் போன மலையாள நடிகர் முரளி எனக்கு பரிச்சயமே. திலகனுடன் தொலைபேசியில் உரையாடுவதுண்டு. கோபியோடு ஒருமுறை உரையாடியிருக்கிறேன். லோகிதாசை ஒருமுறை சந்தித்திருக்கிறேன். அவர் இறந்த பொழுது அவருடைய லக்கடி அமராவதி வீட்டுக்குச் சென்ற விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழ் ரசிகர்களில் நானும் ஒருவனாய் இருப்பேன். பழைய நகைச்சுவை நடிகர் மாலா அரவிந்தன் எனக்கு நெருக்கமே.

20 வருட கால மலையாள சினிமாவை பார்ப்பவன் என்ற தகுதியில் சொல்கிறேன். அதற்கு முன்பு வந்த படங்களையும் பார்த்ததையும் சேர்த்துக் கொண்டால் 25 வருடம். (கறுப்பு வெள்ளை மலையாள சினிமாவை நான் இதில் சேர்க்கவில்லை.) கால் நூற்றாண்டு கால மலையாள சினிமாவை அவதானித்தவன் என்ற இறுமாப்பில் சொல்கிறேன். முன் சொன்ன பத்தியில் இருக்கும் அத்தனை பேரும் கறைபட்டவர்கள் அல்லது கயமையானவர்களே.

இத்தனை வருட காலம் நான் பார்த்த மலையாள சினிமாவில் ஒரு திரைப்படம் கூட தமிழர்களை நல்லவர்களாய்ச் சித்தரிக்கவில்லை. மாறாக தமிழர்கள் என்றால் திருடர்கள், ஏமாற்றுக்காரர்கள், வேசிகள், கூட்டிக் கொடுப்பவர்கள், கோழைகள், பிச்சைகாரர்கள், காசுக்காக என்ன வேண்டுமானலும் செய்யும் எத்தர்கள் என்றே எப்பொழுதும் சித்தரிப்புகள். மலையாள சினிமாவின் எந்தவொரு நடிகர், நடிகை, இயக்குனர் என எவரும் எனது குற்றச்சாட்டிலிருந்து தப்பமுடியாது. தமிழனை நல்லவனாக காட்டும் ஒரு படத்தை சொல்லுங்கள் நான் சங்கறுத்து செத்துப் போகிறேன்.

வலிந்து வலிந்து தமிழ் பாத்திரங்களை உருவாக்குவார்கள். அவர்களுக்கு தமிழ்நாட்டு வில்லன்கள் எனில் பொள்ளாச்சி கவுண்டர்களும், தென்காசி, உசிலம்பட்டி தேவர்களும் தான். பொள்ளாச்சி கவுண்டராக உசிலம்பட்டி தேவராக பெரும்பாலும் ஒரு மலையாள நடிகரே நடிப்பார். பெரும் நிலக்கிழாராக திண்ணையில் அமர்ந்து வெற்றிலை போட்டு துப்பி “வேண்டாம் தம்பி” என மோகன்லாலிடமோ மம்மூட்டியிடமோ ஜெயராமிடமோ சாவல் விட்டு, மோகன்லால் அந்த பொள்ளாச்சி கவுண்டரின் பூர்வ கோத்திரத்தை, வரலாற்றை மூச்சு விடாமல் பேசி“வேண்டாம் மோனே தினேஷா” என மாரில் ஏறி மிதிப்பார்.

பொள்ளாச்சியில் கவுண்டர்கள் இப்படித்தான் இருக்கின்றார்களா?(கொங்கு வேளாள கவுண்டர் சங்கம் இதையெல்லாம் கவனிக்கலாம்) தென்காசி பக்கம் திரும்பினால் தேவராக வினுச்சக்கரவர்த்திதான் நீண்ட காலமாக set property போல திகழ்ந்தார். அவர் ஆக்ரோஷமாக சண்டையிட்டு இறுதியில் மலையாள கதாநாயகர்களிடம் மண்டியிடுபவராகத்தான் பல வருடம் இருந்தார். இப்போது வயதாகி விட்டதால் ஓய்வு பெற்றுவிட்டார். மற்றொரு ‘தேவரை’ மலையாளிகள் தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.

உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, வருஷ நாட்டுக் கள்ளர்களை காலகாலமாக அவர்கள் சித்தரிக்கும் விதம் பற்றி நம்மவர்கள் ஒன்றும் அறியார். மலையாளிகள் கால் நூற்றாண்டாக சினிமாவில் அவர்களை கேலி செய்து சிரித்தபடி வண்டிகளில் உசிலம்பட்டியையும், ஆண்டிப்பட்டியையும் கடந்து செல்கிறார்கள். நம்மவர்களுக்கு சிங்கம் கால்மாட்டில் உட்கார்ந்திருக்க முத்துராமலிங்கத் தேவரோடு பிளக்ஸ் போர்டில் நிற்கவே நேரம் போதவில்லை.

கேரளத்தில் தொழில் துவங்கும், நடத்தும் தமிழர்களை மலையாள சினிமா சித்தரிக்கும் விதம் குரூரமானது. அங்கே தொழில் துவங்கும் தமிழர்கள் திருடர்கள். அவர்களின் ரிஷிமூலம் வெறும் பஞ்சை பராரியென்றும் ஏமாற்றி ஏமாற்றி பணம் சம்பாதித்து கேரளத்தில் தொழில் தொடங்க வந்துள்ளதாகவும் “அது நடக்காது” என்று விடாது மம்மூட்டிகளும், மோகன்லால்களும் கர்ஜிக்கிறார்கள். (இப்பொழுது உங்களுக்கு முத்தூட் பின்கார்ப், மணப்புரம் கோல்டு லோன் எல்லாம் ஞாபகம் வரக் கூடாது) கேரளத்தில் சிறிய சிறிய வியாபார நிறுவனங்கள் வைத்திருக்கும் தமிழர்கள் கொள்ளைக்காரர்களா ?..? சிறிய நிறுவனங்கள் நடத்தும் தமிழர்கள் மீது அப்படி எந்த குற்ற வரலாறு கிடையாது.

கால் நூற்றாண்டு கால மலையாள சினிமாவின் சித்தரிப்பு இதுவே. (பட்டியல் கடைசியில் இருக்கிறது) இதில் உள் ஒதுக்கீடுகளும் உண்டு. தமிழ் பார்ப்பனர்கள் இங்கிருந்து 15,16 நூற்றாண்டுகளில் புறப்பட்டவர்கள். கேரளத்தின் புறவாசல் இரண்டிலும் வாழ்கிறார்கள். திருவனந்தபுரம், பாலக்காடு, திருச்சூரில் கொஞ்சமுண்டு. இன்றைக்கு வரை மலையாள சமூகம் அவர்களை உள் வாங்கவில்லை. கேரளத்தில் இவர்களை விளிக்கப் பயன்படுத்தும் சொல் ‘தமிழ் பட்டர்கள்’. வீட்டில் தமிழும், வெளியில் மலையாளமும் பேசுவார்கள். (ஜெயராமைக் கூட தமிழ் பட்டர் என்றே சொல்கிறார்கள்.) இவர்களை மலையாள சினிமா சித்தரிக்கும் விதம் வழக்கமான தமிழர்களிடமிருந்து சற்று வேறுபட்டது. தமிழ் பட்டர்கள் அறிவாளிகள் நிரம்ப கல்வியறிவு பெற்றவர்கள் ஆடிட்டர்கள், அதிகாரிகள் என்று சித்தரிக்கும் மலையாள சினிமா அவர்களை பெரும் கோழைகள் பணத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்றே தமிழ் பட்டர்களின் பாத்திரங்களை வடிவமைக்கும்.

தமிழ் சினிமாவின் சகல தளங்களிலும் மலையாளிகள் கோலோச்சுகிறார்கள். அவர்கள் கதாநாயகர்களாகநடிக்கும் பட்டியல் அறுபது வருட நீளமுடையது. எம்.ஜி.ஆர், நம்பியார், பாலாஜி, பிரேம்நசீர், சங்கர் (ஒரு தலைராகம்), ராஜிவ், விஜயன், ரகுவரன், பிரதாப் போத்தன், தீபன்(முதல் மரியாதை), ரகுமான், கரண், வினித், ஜெயராம், அஜித், பரத், நரேன், அஜ்மல் (அஞ்சாதே), பிரித்வ்ராஜ், ஆரியா மேலும் மம்மூட்டி, மோகன்லாலை நாடே அறியும். நடிகைகளின் பட்டியல் நான் சொல்ல வேண்டியதே இல்லை. தமிழ் சினிமா உருவாகுவதற்கு முன்பே அவர்கள் வந்து விட்டனர். தொழில் நுட்பக்கலைஞர்கள், பாடகர், பாடகிகள் என பெரும் திரள் இங்குண்டு. எம்.எஸ்.விஸ்வநாதன் (மனையமங்கல சுப்பிரமணிய விஸ்வநாதன்) மலையாளி என்று நிறைய சினிமா துறையினருக்கே தெரியாது. அவரது சந்தன குங்குமப் பொட்டை பார்த்து காரைக்குடி பக்கம் என்றே கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

மலையாள சினிமாவில் ஒரு தமிழரைக் கூட காட்ட முடியாது. இதுவரை மலையாள சினிமாவில் தோன்றிய தமிழ் முகங்கள் அத்தனையும் தமிழ் தெலுங்கு பார்ப்பன முகங்களே. கமல்ஹாசன், லக்ஷ்மி, ஸ்ரீ வித்யா, மேனகா, சுஹாசினி, பூர்ணிமா ஜெயராம், ஒய்.ஜி.மகேந்திரன் என அத்தனையும் அவாளே. மீனா, தேவயானி,கனிகா போன்றவர்கள் சமீப மலையாள சினிமாவில் அதிகம் தென்படுகிறார்கள். இவர்களில் மீனா,தேவயானி பகுதி மலையாளிகள் என்றும், கனிகா தமிழ் பார்ப்பனர் என்றும் செய்தி உண்டு. தமிழ் பார்ப்பனர் அல்லாத ஒருவருக்குக் கூட அவர்கள் வாய்ப்பளித்ததில்லை. பழசிராஜாவில் குதிரை மேல் கண்ணை உருட்டிக் கொண்டு வரும் சரத்குமார் எல்லாம் படம் தமிழ்நாட்டில் விற்பதற்கான சேட்டன்களின் வியாபார உத்தி.

எனக்குத் தெரிந்து மலையாளப் படம் இயக்கச் சென்ற இயக்குநர் பாலு மகேந்திரா தான். 81 ல் ஓளங்கள், 83 ல் யாத்திரா (ஒரு வேளை அவர் பேசும் ஈழத் தமிழை மலையாளம் என்று கருதி விட்டார்களோ என்னவோ) அதன்பின் மணிரத்னம் ‘உனரு’ 1982 ல் ஒரு படத்தை இயக்கினார். அதன் பின் இந்த இருபத்தேழு வருடத்தில் எந்தவொரு தமிழ் இயக்குநரும் மலையாளப் படத்தை இயக்கவில்லை. கமலஹாசன் 90 ல் சாணக்கியன் திரைப்படத்தோடு கதாநாயகனாக விடைபெற்றார். அதன் பின் இந்த இருபது வருடத்தில் எந்த தமிழ் கதாநாயகனும் நடித்ததில்லை ஒளிப்பதிவாளர்கள் ஜீவா, கே.வி.ஆனந்த், படத் தொகுப்பாளர் பூமிநாதன் போன்றோர் அவ்வப்போது மலையாளத் திரையில் தென்படுவதுண்டு.

*- அடுத்த பேப்பரில் தொடரும்*




- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- இலங்கையின் எப்பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை (Door to Door)
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம்.

GlenCarriers
Laksiri Seva

தொலைபேசி எண்:
020 8743 7353

Collection from £ 10 within London
Collection from your door point in any part of UK or Europe

Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31

Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. 0672 0510 50-51

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

# சினிமா




இந்திய சினிமா வரலாற்றில் எந்தப் படமும் கோச்சடையான் அளவிற்கு கேலிக்கு ஆளானதில்லை. பலவருட தயாரிப்பு, சுல்தான் தான் கோச்சடையான் - ராணா தான் கோச்சடையான் என ஏகப்பட்ட வதந்திகள், பொம்மைப் படம் எனும் குறை படத்தை ரிலீஸ் செய்வதில் எழுந்த சிக்கல்கள் என சூப்பர் ஸ்டாரே வெறுத்துப்போய் லிங்கா ஆகிவிட்டார். அப்படி ரிலீஸ்க்கு முன்பே புகழ்பெற்ற படம், இன்று ரிலீஸ் ஆகிவிட்டது. எப்படி இருக்குன்னு......

கோட்டையபட்டினம் நாட்டின் தலைமைத்தளபதி கோச்சடையான். தன் படைவீரர்களைக் காக்க அவர் செய்யும் ஒரு செயலால், தேசத்துரோக குற்றம் சாட்டப் பட்டு கொல்லப்படுகிறார். கோச்சடையானின் மகன் ராணா அவர் மீதான பழியை நீக்கி, பழிவாங்குவதே கதை. (அப்போ இந்தப் படம் ராணா தானேன்னு கேட்கக் கூடாது)

முதலிலேயே சொல்லிவிடுகிறேன்... நாம் பயந்த அளவிற்கு படம் மோசம் இல்லை.

படம் ஆரம்பித்து கொஞ்ச நேரத்திற்கு 'இது ரஜினி தானா? சரத்குமார் தானா? தீபிகா தானா?' என்று நம் மனம் ஆராய்ச்சியில் இறங்குவது வாஸ்தவம் தான். உயிரோடு இருக்கும் ஆட்களின் தோற்றத்தில் பொம்மைகள் நடமாடும்போது, நாம் ஒப்பிட்டுப்பார்ப்பது இயல்பு தான். ஆனால் முதல் அரைமணி நேரத்தில் 'ஓகே' என்று செட்டில் ஆகிவிடுகிறோம்.

சிறுவன் ராணா கோட்டயப்பட்டினம் நாட்டில் இருந்து, அவர்களின் எதிரி நாடான கலிங்கபுரிக்கு போவதில் ஆரம்பிக்கிறது படம். அங்கே வளரும் ராணா, தன் வீரத்தால் படைத்தளபதியாக ஆகிறார். மனதிற்குள் ஒரு திட்டத்தோடு காய் நகர்த்தி, அந்த நாட்டின் மன்னன் ஜாக்கிசெராப் - இளவரசர் ஆதியை ஏமாற்றி, தான் நினைத்தபடியே கோட்டயப்பட்டினத்திற்கு ஒரு வீரனாகத் திரும்பி வருகிறார்.

கலிங்கபுரியில் மாமா நாகேஷ் (ஆம், அவர் பாத்திரத்தையும் பொருத்தமாக உருவாக்கியிருக்கிறார்கள்) கோச்சடையானின் தங்கையை வளர்த்து வருகிறார். கோச்சடையானின் அண்ணன் சிறுவயதிலேயே காணாமல் போய் விட்டதாகச் சொல்கிறார் நாகேஷ். ராணாவின் தங்கையை இளவரசர் சரத் குமார் காதலிக்க, இளவரசி தீபிகா படுகோனே ராணாவை காதலிக்கிறார். இந்த பண்டமாற்று முறை அரசர் நாசரை கடுப்பேற்றிவிடுகிறது. கூடவே ராணாவின் பழி வாங்கும் கதையும் சேர்ந்து கொள்ள, படம் அதன்பின் ஜெட் வேகத்தில் செல்கிறது.

உண்மையில் இந்தப் படத்தைக் காப்பாற்றுவது கே.எஸ்.ரவிகுமாரின் கதை-திரைக்கதை-வசனம் தான். கதை வலுவாக இருப்பதால், கொஞ்ச நேரத்திலேயே அனிமேசன் படம் என்பதை மறந்து படத்தில் ஒன்றிவிடுகிறோம். இது அனிமேசன் இல்லை, மோசன் கேப்சரிங் டெக்னாலஜி என்றெல்லாம் சொல்கிறார்கள். நம் சிற்றறிவுக்கு பெரிதாக வித்தியாசம் தெரியவில்லை. சில இடங்களில் முகத்தில் உணர்ச்சியைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைத் தான் சொல்கிறார்களோ, என்னவோ. நமக்கு எல்லாமே பொம்மை தான்.

ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசையும் பாடல்களும் காட்சிகளுக்கு உயிர் கொடுக்கின்றன என்றே சொல்லலாம். மெதுவாகத்தான், கண்ணே கனியே, சில்லென்ற என எல்லாமே அட்டகாசமான பாடல்கள். காட்சிப்படுத்திய விதமும் பின்னணிக் காட்சிகளும் நன்றாகவே வந்திருக்கின்றன. படத்தின் ட்ரைலரும் பாடல் டீசரும் மொக்கையாகத் தெரிந்தன. ஆனால் தியேட்டரில் நன்றாகவே இருக்கின்றன.

அனிமேசன் கேரக்டர்களில் சூப்பர் ஸ்டார், நாசர், சோபனா, ஆதி உருவங்கள் அருமை. சரத் குமார், ஜாக்கி செராஃப் உருவங்கள் பரவாயில்லை. ஆனால் மிகவும் மோசம், தீபிகா படுகோனே மற்றும் தங்கையாக வரும் ருக்மிணி(பொம்மலாட்டம் ஹீரோயின்), சண்முகராஜா உருவங்கள் தான். அதிலும் தீபிகாவை க்ளோசப்பில் காட்டும்போது....... ஆத்தீ முடியல்ல..!

அதென்னவோ தெரியவில்லை, எல்லா சரித்திரப்படங்களிலும் மன்னன் மகளையே நாயகர்கள் கவர்கிறார்கள். அந்தக் காலத்தில் நம் மன்னர்களுக்குப் பெரும் தலைவலியாக இந்தப் பிரச்சினை இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அவதார் படத்தின் பட்ஜெட்டும் அவர்களின் டெக்னிகல் வசதிகளும் கோச்சடையானை விட, பலமடங்கு அதிகம். எனவே அதனுடன் இந்த 'ஸ்லோ' மோசனை கம்பேர் செய்வது நியாயம் அல்ல. ஆனாலும் இந்திய சினிமா வரலாற்றில் இது புதிய தொடக்கமாக அமையலாம். அந்த வகையில் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. இதுவரை அனிமேசன் படங்களுக்கென்று, தமிழ் சினிமாவில் மார்க்கெட் கிடையாது. இனி அது உருவாகலாம். அதே போன்றே மற்ற ரஜினி படங்களை நினைத்துப் பார்த்தாலும் கஷ்டம் தான். இரண்டு மணிநேரத்தில் படம் முடிவது, இன்னொரு ஆறுதல்.

கிளைமாக்ஸில் ராணா தன் தாயின் சபதத்தை நிறைவேற்றிவிடுகிறார். ஆனால் அதனாலேயே தந்தை கோச்சடையானின் சபதத்தை மீறிவிடுகிறார். படத்தின் இறுதிக் காட்சியில் காணாமல் போன அண்ணன் சோணா (அதுவும் ரஜினி தான்) வந்து நிற்கிறார். தம்பியும் அண்ணனும் மோத வேண்டிய சூழலில்.........தொடரும் போட்டுவிடுகிறார்கள். அப்ப, இன்னொரு பாகமும் வரலாம்!

நச்சென்று எழுதப்பட்டிருக்கும் வசனங்கள், வேகமாய் நகரும் திரைக்கதை, ஏ.ஆர்.ரஹ்மான் இசை, என்பன இருப்பதால் அதிகம் எதிர்பார்க்காமல் இது பொம்மைப் படம் என்ற புரிதலுடன் போனால், நிச்சயம் ஒருமுறை பார்க்கலாம்.

*- வாகீசன் (நிலாத்துாறல் வலைப்பதிவு)*

# சினித்துளி

## சித்த வைத்தியரான பரத்!



பாய்ஸ் படத்தில் தன் பயணத்தை தொடங்கிய பரத். காதல் படத்தின் வெற்றிக்கு பிறகு தமிழ் சினிமவில் மறக்க முடியாத ஒரு ஹீரோவாக விளங்கினார். ஆனால் அதற்கு பிறகு சில படங்களைத் தவிர அவருக்கு வெற்றி கைகூடவில்லை. கமர்ஷியல் களத்தில் குதித்த பரத் தனக்கு சின்ன தளபதி என்று பட்டம் போட்டுக் கொண்டாலும் படங்களின் தொடர் தோல்வியால் சோர்ந்து போனார் பரத். இப்போ நடிக்கும் படம் "ஐந்தாம் தலைமுறை சித்த வைத்திய சிகாமணி".

இப்ப சித்த வைத்தியமென்றால், ஆண்மை விருத்தி மருந்து என்று மட்டும் நினைக்கிற காலத்தில் சித்த வைத்திய மருத்துவத்தின் மகத்துவத்தையும் புனிதத்தையும் இப்படம் உணர்த்தும். அதனால் எந்த வில்லங்கமும் இதில் இருக்காது என்று சொல்கிறார்கள் படக்குழு.

## பூவரசம் பீப்பீ!



'ஈரம்', 'விண்ணைத்தாண்டி வருவாயா', 'நண்பன்' படங்களின் ஒளிப்பதிவாளர் மனோஜ் பரமஹம்சா, டாக்டர் சுஜாதா செந்தில்நாதனுடன் இணைந்து தயாரிக்கும் படம், 'பூவரசம் பீப்பீ'. கவுரவ் காளை, பிரவீன் கிஷோர், கபில் தேவ், வர்ஷினி, அகல்யா ஆகிய சிறுவர், சிறுமியருடன் இணைந்து சமுத்திரக்கனி, காளி வெங்கட், சாய்ராம் நடிக்கின்றனர். ஒளிப்பதிவு, மனோஜ் பரமஹம்சா. இசை, அருள் தேவ். பாடல்கள், இயக்கம்: ஹலீதா ஷமீம். படம் பற்றி அவர் கூறியதாவது:

பொழுதுபோக்கு விளையாட்டுகளில் ஈடுபட்டு கோடை விடுமுறையைக் கொண்டாடும் பிள்ளைகள், திடீரென்று ஒரு வன்முறை சம்பவத்தை நேரில் பார்த்ததால் ஏற்படும் பிரச்னைகளை எப்படி கையாள்கிறார்கள் என்பது கதை.

## தீபாவளிக்கு கத்தி!



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் கத்தி பட வேலைகள் பரபரப்பாக சென்னையில் நடந்து வருகிறது. இன்னும் ஆந்திராவிலும் அடுத்தக் கட்ட படப்பிடிப்பு நடக்க இருக்கிறது. வருகிற தீபாவளிக்கு படத்தை வெளியிட ஏற்பாடுகள் நடந்து வருகிறது. அடுத்து சிம்பு தேவன் இயக்கத்தில் நடிக்க தயார் நிலையில் உள்ளாராம் விஜய். அதில் தீபிகா படுகோனே மற்றும் ஸ்ருதிஹாசன் விஜய்யுடன் ஜோடி போடுகிறார்கள். பிரபல கன்னட நடிகர் சிதீப் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

## பாலாவின் தயாரிப்பில் அதர்வா!



பாலாவின் பி ஸ்டுடியோஸ் தயாரிக்கும் புதிய படத்தில், சற்குணம் இயக்கத்தில் அதர்வா நடிக்க உள்ளார். 'மாயாவி', 'பரதேசி', 'பிசாசு' ஆகிய படங்களைத் தொடர்ந்து இன்னொரு படத்தை பாலா தயாரிக்கிறார். இந்தப் படத்தை சற்குணம் இயக்குகிறார். 'களவாணி', 'வாகை சூட வா', 'நய்யாண்டி' ஆகிய படங்களைத் தொடர்ந்து சற்குணம் இயக்கும் நான்காவது படம் இது. இதில் அதர்வா ஹீரோவாக நடிக்கிறார். இப் படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை.

சந்தோஷ் நாராயணன் இப்படத்துக்கு இசையமைக்கிறார். மற்ற கதாபாத்திரங்களின் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.


GYPS Duct Hygiene Solutions




Duck work Cleaning to TRI9 & BSEN 15780-11 Standards

Services Undertaken;

- Range Maintenence
- Grease Extract Cleaning
- Supply & Fit Extractor fans
- Access door supplied & fit
- Kitchen Conopy Cleaning
- Grease trap Cleaning

*We will work around your business's needs at a time to suit you.*
*Certificate of hygiene issued post clean*
*It is the Law to Keep Duckwork Clean*

B&ES BUILDING & ENGINEERING SERVICES ASSOCIATION a new brand; a new HVCA

Call us today for a free no obligation Quote
No Certificate = No Insurance
Payment in the Event of fire
07723467012
07983589993

We specialise on Dosa ...



Fushia is pleased to introduce our delicious masala dosa. This is a delicate, authentic South Indian dish that is famous worldwide.

Hoppers
(Plain, Milk, Egg and Kithul)



FUSHIA
Tel : 020 86808833 | 07958424222
3 Brighton Road, South Croydon, CR2 6EA
Website : www.fushiauk.com | E-mail : info@fushiauk.com

# MercuryTalk

## EXCELLENCE IS MORE THAN A GOAL. IT'S A PROMISE

**All in one Package for Residential Customers**

All for Just
**£ 39.95**
(inc VAT)

- Home Phone Line
- Unlimited Call
- Unlimited high speed broadband

- Up to 24 Mb download speed
- Attractive rates
- No call set up charge
- Simple and straight forward billing
- No hidden charges
- 24 hour UK based technical support
- IP Telephony services at affordable rates



NEVER BEATEN ON PRICE GUARANTEED

*One Company*
*One bill*
*One Great Savings*

Unlimited calls to UK local, national fixed lines & 0845, 0870 numbers only. Minimum contract term apply. Terms & Conditions Apply. Visit our website for full terms & conditions.

020 8550 6677 | sales@mercurytalk.net

www.mercurytalk.net

# S24 MANAGEMENT

பெருமையுடன் வழங்கும்

# சுயம்வரா

SWAYAMVARAA

## தெற்காசிய திருமண கண்காட்சி


FOR MORE INFORMATION & TICKETS
WWW.THAMARAI.COM

DATE **14 & 15TH JUNE**

VENUE **ILEC CONFERENCE CENTRE & IBIS EARLS COURT, LONDON**







பாரம்பரிய முறையிலான நவீன நகைகள், ஆடை ஆபரணங்கள், மணப்பெண் அலங்காரம், புகைப்படம், மணமேடை அலங்காரம், திருமண சேவைகளை வழங்கும் முகைபிடங்களை இங்கே காணலாம்.

முன்னணி திரைப்பட நட்சத்திரங்களான சினேகா, பிரசன்னா மற்றும் கணேஷ் வெங்கட்ராமன் இதில் பங்கு கொள்கிறார்கள்

மாபெரும் சாரி விற்பனையும் நடக்க உள்ளது

இக் கண்காட்சி நாட்டில் உள்ள பாரம்பரிய மற்றும் திருமண சம்பந்தம் உள்ள பொருட்களை விற்கும் சிறு நடுத்தர மூலகர்களுக்கு ஓர் வர்த்தக தளமாக அமையும்

இதில் நீங்களும் பங்கு கொள்ள விரும்பினால் அழைக்கவும்

**07556 249 170**

GREENHORSE BEHINDWOODS oneindia GALATTA THENDRAL TAMIL HINDU WEDDINGS